THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, the 30th March 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI KALA VENKATA RAO.

MR. SPEAKER : I have to bring to the notice of the House with sorrow the death of Sri Kala Venkata Rao, a former Member of this Assembly and a former Minister in the composite State of Madras.

Sri Kala Venkata Rao died at 2 a.m. on the 28th March at Hyderabad. He was first elected to the Madras Legislative Assembly in the year 1935. He was again re-elected in 1946 and became the Revenue Minister in this State. During the period 1947–49 he piloted the well-known Zamindari Abolition Bill. From September 1951 to February 1952 he was again the Health Minister of this State.

Sri Kala Venkata Rao was one of those who took a very prominent part in the freedom struggle, suffering incarceration many times. He was in addition a Member of the Constituent Assembly, General Secretary of the Indian National Congress, and Secretary of the Andhra Pradesh Congress Committee for many, many years. He was till his death a Minister in the Andhra State. He was one of the architects of the Andhra State. He was an able administrator. He was a gifted debator with a prodigious memory and a thorough grasp of the subject with an almost encyclopaedic knowledge on many matters. In fact he had a solution for any and every difficulty which the Government encountered. Over and above all these, he was a great friend. In his death not only has Andhra lost a great statesman but India itself has lost a very great administrator. I should like the House to pass the following resolution which I place before it :—

" This House places on record its deep sense of sorrow at the demise of Sri Kala Venkata Rao, a former Minister of the Madras State, and conveys its deep sense of sympathy to the members of the bereaved family ".

By way of passing the resolution, I request hon. Members to stand in their places for a minute.

The resolution was carried *nem con*, all the Members of the Assembly standing for a minute.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I make a suggestion, Sir? The Resolution passed by this House may be communicated to the Chief Minister of the Andhra Pradesh.

MR. SPEAKER : Yes.

As a mark of respect to the deceased Sri Kala Venkata Rao, the House is adjourned, and will meet again at 8-45 a.m.

The House then adjourned.

(The House reassembled at 8-45 a.m.)

(Mr. Speaker in the Chair.)

II.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Short Notice Question No. 1000.

SRI R. SRINIVASA IYER : Sir, it is not a Short Notice Question.

MR. SPEAKER : I am sorry; it is a postponed question. The Hon. Minister for Works was not present on the day when it should have been taken up.

Vennanguzhi odai

* 1000 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Executive Engineer Tiruchirappalli Division has received any representation, dated 20th October 1958, from the villagers of Veeranandapuram and Ramadevanallur regarding the harnessing of Vennanguzhi odai for irrigation purposes in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The scheme is under detailed investigation by the Chief Engineer (Irrigation) in consultation with the Collector of South Arcot.

Scholarships to converts to Christianity from the Harijan Welfare Fund

MR. SPEAKER : As the hon. Member Sri S. Lazar is not in his seat, question No. 1005 and the answer will be printed in the official proceedings.

* 1005 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether scholarships from the Harijan Welfare Fund are awarded to students belonging to the Scheduled Castes, Backward Classes and Most Backward Classes converted to Christianity; and

(*b*) the number of such students that applied for scholarships during 1957–58 and the number of scholarships actually awarded?

30th March 1959]

THE HON. SRI P. KAKKAN : (*a*) Scholarships from the Harijan Welfare Funds are awarded only to students belonging to the Scheduled Castes and other eligible communities converted to Christianity. Most Backward Classes and Backward Classes converted to Christianity are not given scholarship from the Harijan Welfare Department.

(*b*) The number of applications received from Scheduled Castes and other eligible communities converted to Christianity during 1957–58 is 5,002 and the number of scholarships actually awarded is 3,389.

Fire accidents

* *S.N. Q.* 21.—SRI A. GOVINDASAMY and SRI P. U. SHANMUGAM :—கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையை அடுத்த அஸ்வநாகசுரணை கிராமத்தில் பிப்ரவரி மாதத்தில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(ஆ) எத்தனை வீடுகள் தீயிக்கு இரையாயின ?

(இ) தீ விபத்து ஏற்பட்டு எத்தனை நாள் கழித்து ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் அந்தக் கிராமத்தை பார்வையிட சென்றார் ?

(ஈ) அளிக்கப்பட்ட நிவாரணம் யாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir. A fire accident occurred on 16th February 1959.

(*b*) Sixty-three houses were destroyed.

(*c*) The Revenue Divisional Officer, Tiruvannamalai, inspected the place of accident on 20th February 1959. But before the Revenue Divisional Officer, the Deputy Tahsildar, Chengam, and the Block Development Officer, Tiruvannamalai, visited the village immediately after the occurrence, and took timely action to give relief to the victims.

(*d*) A cash grant of Rs. 30 and a clothing grant of Rs. 10 were given to each of the 63 persons. Besides this, the Block Development Officer also arranged to collect 3 bags of rice to give relief to the victims.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதி எம். எல். ஏ. ரெவினியூ டிவிஷனல் அதிகாரியிடம் முறையிட்டும்கூட ஏன் காலதாமதமாகி அந்த யிடத்தை அவர் போய் பார்க்கவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் போய் பார்த்து ரெவன்யூ டிவிஷனல் ஆபீஸர் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது அவரது கடமையல்லவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த சம்பவம் நடந்த இடத்திற்கும், திருவண்ணாமலைக்கும் சுமார் 20 மைல் தூரமிருக்கும். உடனடியாக அங்குள்ள உத்தியோகஸ்தர் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தார்கள். பிற்பாடு இந்த ஆர்.டி. ஓ. போய் அங்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தார்கள்.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது சர்க்கார் அளித்து வருகிற 30 ரூபாய் நிவாரணம் போதுமானதாக இல்லாததால் அதை ஓரளவு உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

[30th March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி உதவி செய்வதின் தாத்பரியம் அவர்களுக்கு சரியான சந்தர்ப்பத்தில் கொஞ்சம் உதவி செய்யவேண்டுமென்ற முறையில் செய்யப்படுகிறதே தவிர எல்லா நஷ்டத்திற்கும் ஈடு கொடுப்பது என்பது சாத்தியமல்ல.

* *S.N. Q.* 22—SRI C. NATARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலூகாவில் இம் மாதத்தில் (மார்ச் 59-ல்) எத்தனை இடத்தில் தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(ஆ) எவ்வளவு பொருள் நஷ்டம் ?
எத்தனை உயிர் சேதம் ?
எத்தனை வீடுகள் எரிந்தன ?

(இ) இது சம்பந்தமாக சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Fire accidents occurred in the three villages of Eyyanur, Vilambar and Arasanpattu on the 6th, 9th and 16th March 1959, respectively.

(*b*) The estimated value of the damage is reported to be Rs. 1,45,000 in respect of Villambar and Arasanpattu villages. The Collector's further report in respect of the loss in Eyyanur village is awaited.

There was no loss of human life. One sheep and five calves were burnt to death.

The total number of houses damaged was 721.

(*c*) The Collector has sanctioned cash relief amounting to Rs. 30,250 to the families affected by the three fire accidents.

SRI C. NATARAJAN : இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதால் அங்கு தற்காலீகமாக ஒரு தீ அணைக்கும் படை வைக்க அரசாங்கம் முன் வருமா ? அதோடு அவர்களுக்கு கடன் வசதிதர ஏற்பாடு செய்து வேண்டிய வசதிகள் அளிக்க வேண்டுமென்றும் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இனிமேல் தீ வந்தால் அதை அணைக்க தீ அணைக்கும் படை வேண்டுமென்று கேட்கிறார் போலிருக்கிறது. இது, ஒரு கிராமத்தில் ஏற்பட்டது. அதன் பக்கத்திலுள்ள பெரிய நகரத்தில்தான் தீ அணைக்கும் படை வைத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த என்ஜின் போய்தான் தீ அணைக்கும் வேலையைச் செய்தது.

SRI T. T. DANIEL : May I know how this fire accident occurred and what are the special circumstances for this heavy damage?

THE HON. SRI M. A. MANICKAVELU : Heavy damage occurred because they are thatched huts, all crowded together and if one hut-takes fire and if there is favourable wind, it spreads and the havoc is created. Generally, Sir, the cause is carelessness in the kitchen and somehow the spark gets off and sets ablaze the huts.

30th March 1959]

Famine relief measures in Tirunelveli District

* *S.N. Q.* 23.— SRI M. S. SELVARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்ச நிவாரண வேலைகள் தொடங்குவதற்கு ஜில்லா கலெக்டரிடமிருந்தும் சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்தும் முறையீடு வந்திருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், என்னென்ன வேலைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government have issued orders permitting the Collector of Tirunelveli to undertake low scale famine relief works, such as gathering and spreading of metal gravelling in existing roads and formation of new roads in the drought affected areas to provide employment to the agricultural labourers.

SRI M. S. SELVARAJAN : தற்பொழுது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தாலூக்காக்கள், கிராமங்கள் விவரம் கொடுக்கப்படுமா ? இனிமேல் புதியதாக ஏதேனும் வேலை செய்ய வேண்டுமானால் அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் தான் செய்ய வேண்டுமா ? அல்லது கலெக்டர் தனது யுக்தானுசாரப்படி செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக சுமார் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கே என்ற விவரங்கள்கூட இன்னொரு கேள்விக்கு பதிலிலே இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கேள்வி வரும்பொழுது தெரிவிக்கிறேன். திருச்செந்தூர், நாங்குநேரி, கோவில்பட்டி, சங்கரன் கோவில் முதலிய பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் கிராமங்களிலெல்லாம் இந்தத் திட்டம் அமுலுக்கு வரும்.

SRI K. PERIANNAN : பஞ்ச நிவாரண வேலைகள் எந்தெந்த தாலூக்காகக்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எப்படி எழும் ? மூலக் கேள்வி திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. ஆகையால், அங்கத்தினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : அநேக கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சில கிராமங்களை கலெக்டர் "நோடிபை" செய்திருப்பதாகத் தெரிகிறது. பழையபடியும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் எவை என்பதை பரிசீலனை செய்வதற்கு கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படுமா ? கலெக்டர் மூலம் "பைனலைஸ்" செய்வதற்கு சர்க்கார் கலெக்டருக்கு அதிகாரம் கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்தெந்த கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கலெக்டர் அவர்கள் கொடுத்த தகவல் பேரில் தான் அவர்கள் ரிபோர்ட் மேல் தான் இந்தத் திட்டத்தில் கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏதாவது கிராமங்கள் விடப்பட்டிருந்தால், அதை கலெக்டர் அவர்கள் கவனிக்கலாம்.

SRI R. KRISHNASAMI NAIDU : இத்தகைய பஞ்ச நிவாரண வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு சென்ற வருடம் பல மைல்களுக்கு 20,000, 30,000 ரூபாய் செலவில் மண் ரோடுகள் போடப்பட்டன. அந்த ரோடுகள் வெள்ளம் அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமையில் பிரயோசனமற்றதாக இருக்கிறது. ஆகவே பஞ்ச நிவாரண வேலைகளின் கீழ் ரோடு போடும்பொழுது சரளை பரப்பும் வேலையையும் முடிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

[30th March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜில்லாவை பொறுத்தமட்டில் அம்மாதிரி வேலை நடக்கும். மற்ற ஜில்லாக்களின் சமாசாரம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பருவ மழை தவறிய மற்ற ஜில்லாக்களிலும்........

MR. SPEAKER : இந்தக் கேள்வி திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. கனம் அங்கத்தினர் பெரியண்ணனுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும் பொருந்தும். ஆகையால் இந்தக் கேள்வியில் தாங்கள் எப்படி மற்ற ஜில்லாக்களைப் பற்றி கேட்கலாம் ? அதுபற்றி தாங்கள் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

Supply of water to Tholudur Project

* *S.N. Q.* 24.—SRI M. SELVARAJ : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation through Thiru M. Selvaraj, M.L.A., from the public of Tholar, Peenadam and Aviyangudi villages of Vridachalam taluk, about the utilisation of the surplus waters of Mettur Reservoir to Tholudur Project and to Emanari; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of utilising the waters of Mettur Reservoir was carefully examined and it was found not feasible.

SRI M. SELVARAJ : விருத்தாசலம் தாலூகா தொழுதூர் ப்ராஜக்டுக்கும், எமனேரிக்கும் 26,000 ஏகருக்கு பாசன வசதி தேவையிருந்தும், 17,000 எக்கருக்கு மேல் பாசன வசதி செய்ய முடியவில்லை. மேட்டூர் அணையிலிருந்து சேலம் ஜில்லா நாமக்கல், லட்சுபாளையம் வழியாக உபரி தண்ணீரை இங்கே திருப்பிவிட்டு சௌகரியம் செய்வதுப்பற்றி "ரி-இன்வெஸ்டிகேட்" செய்வதற்கு "சூபரின்டெண்டிங் என்ஜினியர்" தலைமையில் ஒரு தனி டிவிஷன் நியமிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இதுபற்றி சீப் என்ஜினியர் பரிசீலனை செய்து, முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஒரு ப்ராஜக்டிலிருந்து தண்ணீரை இன்னொரு ப்ராஜக்டுக்குக் கொண்டு வருவது என்றால் அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. ரொம்ப தூரம் வரவேண்டியிருக்கும். தவிரவும் மைசூர் கவர்ன்மெண்டுக்கும் இந்த கவர்ன்மெண்டுக்கும் உள்ள எக்ரிமெண்டுபடி நடக்க வேண்டியிருக்கும். ஆகவே, இம்மாதிரி அங்கிருந்து தண்ணீர் கொண்டு வருவது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI R. SRINIVASA IYER : தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தேவையானதற்குமேல் உபரி ஜலம் மேட்டூர் அணைக்குக் கீழே வழிந்தோடுகிறதா ? உபரி ஜலம் ஏதாவது இருக்கிறதா என்பதை சர்க்கார் கண்டு பிடித்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளம் ஜாஸ்தியாக வரும்போது தான் உபரி ஜலம் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

Wenlock Downs Advisory Committee

* 1058 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the functioning of the Wenlock Downs Advisory Committee in Ootacamund?

30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Wenlock Downs Advisory Committee is constituted for a period of one year at a time. As at present constituted, it consists of three official and nine non-official members. The functions of the Committee are briefly given below :—

(i) to control the fishing, shooting, riding, etc., in the area;

(ii) to maintain the scenic beauty of the Wenlock Downs;

(iii) to advise the Chief Conservator of Forests, as regards the maintenance of the Downs.

SRI N. K. PALANISAMI: வென்லாக் டவுன்ஸை அபிவிருத்தி செய்வதற்கு கமிட்டி ஏற்படுத்தி கிட்டத்தட்ட 4, 5 வருஷங்களுக்கு மேலாயிற்று. இதுவரையில் அது போதுமான அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வென்லாக் டவுன்ஸ் சிறந்த இயற்கை வசதிகளை அளிக்கிறது. அதைவிட அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றுமில்லை. அந்த இயற்கை அழகை பாதுகாப்பது இப்பொழுது கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

SRI J. MATHA GOWDER : வென்லாக் டவுன்ஸ் கமிட்டியிலே அந்த ஜில்லா எம்.எல்.எ.-க்களை அங்கத்தினர்களாக போடவில்லையா ? அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வென்லாக் டவுன்ஸ் கமிட்டியைப் பொறுத்தவரையில் எம்.எல்.எ.-க்களை போடவேண்டுமென்று கருதவில்லை. ஆனால் எம்.எல்.எ.-க்களும் இதில் சேர்க்கப்படலாம். அப்போதைக்கப்போது கமிட்டி திருத்தி அமைக்கப்படுகிறது.

Medicinal plants

*1059 *Q.*—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any Research Station in the State for cultivation of medicinal plants and where;

(*b*) if so, the names of the plants grown there;

(*c*) the medicines prepared out of the above plants;

(*d*) the amount of grant received from the Central Government for this purpose;

(*e*) the amount spent or granted by the State Government for this purpose; and

(*f*) what steps have been taken by this Government to implement the recommendations of the Joint Meeting of the Medicinal Plants Committee of the Indian Council of Agricultural Research, the Pharmaceutical and Drugs Committee of the Council of Scientific and Industrial Research and the Pharmacology Committee of the Indian Council of Medical Research held in February 1956 regarding cultivation of medicinal plants on scientific lines and on a large scale?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in the negative.

[30th March 1959

(*b*) *to* (*e*) Do not arise.

(*f*) The recommendations of the various Committees on the cultivation of medicinal plants are being implemented to the extent possible by the Cinchona and Forest Departments of this State. The Government have sanctioned a Scheme for setting up Research Stations in the Government Cinchona Plantations for the cultivation and development of medicinal plants with financial aid from the Indian Council of Agricultural Research. Pending appointment of the technical staff for this new scheme regular work on the scheme has not yet been started.

SRI R. SRINIVASA IYER : Since the cultivation of medicinal plants on scientific lines on a large-scale has been advised, will the Government consider the feasibility of growing such plants in Reserve Forest areas in the higher level tracts of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We will first do this experiment in certain selected forest areas also in cinchona areas. After that we will consider extending to other areas.

SRI V. SANKARAN : பழனியில் மூலிகை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டதா ? அது இப்பொழுது கைவிடப்பட்டதா அல்லது இன்னும் ஆலோசனையில் இருக்கின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

SRI A. VEDARATHNAM : பைரத்ரம் இப்பொழுது தேவைக் குறைந்து அது சாகுபடி நடந்த இடங்களெல்லாம் குறைத்து வருவதாக கூறப்பட்டதே ? அந்த இடங்களில் மூலிகைகள் பயிற் செய்வதற்கு முயற்சிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பைரத்ரம் சாகுபடி செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் மூலிகைகள் சாகுபடி செய்ய முடியும் என்று சொல்லுவதற்கு இல்லை. வேறு குறிப்பிட்ட சில தகுதியுள்ள பிராந்தியங்களில் பலவிதமான மூலிகைகள், 10, 15 விதமான மூலிகை கள் இப்பொழுது பயிர் செய்யப்பட்டு வருகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விவசாயப் பண்ணை களிலும், "வீட் பாரம்" போன்ற இடங்களிலும் இவ்வைத்திய மூலிகை கள் பயிரிடுவதற்காக ஒரு பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலிகைகள் பயிரிடு வதற்கு தண்ணீர் வேண்டும், மழை வேண்டும், சீதோஷ்ணஸ்திதியும் பார்க்க வேண்டும். அதையெல்லாம் பார்த்துத்தான் தகுந்த இடங்களில் பயிரிடப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கம்பளிகோவிலில் கோவில் மேற்பார்வையில் ஆயுர்வேதிக் மருந்துசாலையும், ரிஸர்ச்சு சாலையும் ஆரம் பிக்கப்பட்டிருக்கிறது. அப்படியுள்ள இடங்களுக்கெல்லாம், சர்க்கார் ஏதா வது உதவித் தொகை கொடுத்து, அந்த ஆராய்ச்சியை பலப்படுத்துவார் களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சித்த வைத்திய முறைப்படி கம்பளிகோவில் தேவஸ்தானத்தில் ஆராய்ச்சி நிலையம் இருக் கிறது. அங்கே சில மூலிகைகள் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். அதற்கு அரசாங்கத்தின் உதவி தேவையில்லை.

30th March 1959]

Stipend to teacher trainees

*1060 *Q*.—Sri N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா— 9-00 a.m.

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேரும் மாணவர்களுக்கு, கொடுக்கும் ஸ்டைபண்டை நிறுத்திவிட உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படி நிறுத்தினுல் எவ்வளவு பணம் ஆண்டுதோறும் சர்க்காருக்கு மிச்சப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) There is no such proposal at present.

(*b*) The amount likely to be saved is about Rs. 32 lakhs.

Sri K. VINAYAKAM : Sir, the amount paid as stipends to the teachers was fixed some years back. Since this amount is very low, will the Government consider the feasibility of increasing the amount of stipend that is paid to the students?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir. The question is, whether it would be withdrawn. I do not think there is any proposal to increase it.

Sri M. P. SUBRAMANIAM : ஸார், அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்று சொன்னுர்கள். இப்போது என்று குறிப்பிட்டிருப்பது "க்வாலிபை" பண்ணுவதாக இருப்பதால் பின்னுல் இதைப்பற்றி யோசிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பின்னுல் யோசிக்க தடை இருக்காது என்று நினைக்கிறேன்.

Opening of a Sanatorium near Katpadi

*1061 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகா, காட்பாடி அருகில் டி.பி. சானிடோரியம் ஒன்று ஆரம்பிக்கப் பணம் வசூல் செய்யப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அது எந்த நிலைமையில் உள்ளது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) As the amount collected was found insufficient for building a Sanatorium the proposal was dropped. Instead of keeping the amount idle, it was decided to build a Tuberculosis Clinic and a Ward of 30 beds attached to the Government Pentland Hospital, Vellore. Plans and estimates for the construction of these works are under scrutiny by the Government.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், இப்பொழுது டி.பி. ஸானிட்டோரியம் இருக்கும் எல்லா இடங்களிலும் இடம் கிடைக்காமல் மக்கள் அவதியுறுகிறுர்கள். இந்த நிலைமையில் ஐந்து வருடத்திற்கு முன்னுலே இவ்வளவு பணம் வசூல் செய்து வைத்திருந்தும்கூட இது வரையில் இதற்கு கட்டிடம் கட்டாததின் காரணம் என்ன ? மேற்கொண்டும் வேலூரில் இருக்கக்கூடிய டி.பி. ஸானிட்டோரியத்தை வெளியே கொண்டு போகவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதன் பேரிலும் என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

[30th March 1959

THE HON SRI M. A. MANICKAVELU : இது அரசாங்க சமாச்சாரம் அல்ல, தனியார்கள் முயற்சி எடுத்து நடத்துகின்ற வேலையாகும். மேலும் இதில் கொஞ்சம் பணம் போக்கு போய்விட்டது. இந்த விதமான தகராறு ஏற்பட்டதின் காரணமாக தாமதம் ஏற்பட்டு, இப்போது உபயோககரமான விதத்தில் வார்டு ஏற்படுத்துவதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : இதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. காரணம் அங்கு இருக்கக்கூடிய ஜில்லா கலெக்டர்..........

MR. SPEAKER : உங்கள் அபிப்பிராயத்தை எப்படி இந்த கேள்வியில் சொல்ல முடியும் ?

SRI V. K. KOTHANDARAMAN : இவர்கள் நிர்பந்தப்படுத்தி பணத்தை வசூல் செய்திருக்கிறார்கள், ஆகவே..........

MR. SPEAKER : உங்கள் அபிப்பிராயத்தை கேள்வி நேரத்தின் போது தெரிவிக்க முடியாது. கேள்விதான் கேட்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : ஆகவே அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட முடியாது........

MR. SPEAKER : அதை எப்படி நீங்கள் சொல்ல முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஆகவே வசூல் செய்திருக்கும் பணத்தை உபயோகப்படுத்தி உடனடியாக இடத்தை ஒதுக்கி கட்டிடம் கட்டுவார்களா ? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்காருக்கும் இதற்கும் சிறிது சம்பந்தம் இருப்பதினால்தான் இங்கு பதில் சொல்லப்பட்டது. இல்லையென்றால் இங்கு பதில் கொடுத்திருக்கவே முடியாது. அங்கு ஏற்பட்டிருந்த தகராறுகள் எல்லாம் தீர்க்கப்பட்டு இப்போது அங்கு வார்டு வேலை துரிதமாக நடைபெறுதவற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : I want to bring to the notice of the hon. Members rule 37, sub-rule (1), of the Assembly Rules. I am afraid that there is a lot of misconception among hon. Members as to the scope of supplementary questions. I will read the sub-rule now. The sub-rule says—

'Any member may put a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question.'

Hon. Members can ask questions on facts arising out of the question. They cannot ask for opinion or cannot raise a question about some other district or some other institution. When I bring this to the notice of hon. Members, they get angry.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, arising out of the answer, may I know whether there is any proposal for the expansion of the present tuberculosis clinic till the Katpadi one is finalised?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, even the hon. the Leader of the Opposition asks a general question.

30th March 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, the Hon. Minister said that there were other proposals also for expansion. Arising out of that answer, I put the question.

MR. SPEAKER : With due apology to the Leader of the Opposition, I must say that the same idea (as that of the Minister) was passing through my mind also.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, இதற்காக வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? இப்போது அந்தத் தொகை கட்டிடம் கட்டுவதற்கு போதியதாக இருக்காது என்ற காரணத்தினால் இதை கைவிட்டதாக இருப்பதால் அரசாங்கமே அந்த இடத்தை எடுத்து ஒரு ஸானிட்டோரியத்தை கட்டுவதற்கு உத்தேசமிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புதிதாக ஸானிட்டோரியம் ஆரம்பிப்பதற்கு ஏராளமான பணம் வேண்டும். இதற்கு வசூல் செய்த தொகை 2,31,600 ரூபாய். இதில் ஒரு லட்சத்தி எண்பத்தி நாலாயிரம் ரூபாய் செலவில் ஒரு வார்டு கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : Hon. Members are entitled to ask, 'How much it would require to build a sanatorium?' I am only putting forth a suggestion. Not that hon. Members should put questions.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, இருக்கின்ற பணத்தைக்கொண்டு நல்ல கட்டிடம் கட்டமுடியாமல் இருப்பதால் பசுமலைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கட்டிடத்தில் மேற்படி ஸானிட்டோரியத்தை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உதவி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பசுமலைக்குப் பக்கத்தில் டி.பி. ஸொஸ்தமாகியிருப்பவர்கள் டிஸ்சார்ஜ் ஆன பிறகு போய் இருப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகவே இதற்கு தனியாக அருகாமையில் ஒரு வார்டு இருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். அதனால்தான் ஆஸ்பத்திரியின் பக்கத்தில் இந்த வார்டு கட்டப்பட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இதற்காக வசூல் செய்யப்பட்ட பணத்தில் கொஞ்சம் தொகை போக்கு போய்விட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்விதம் போக்கு போனது எவ்வளவு ? அதற்கு காரணம் யார் ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : போக்கு போனது தோராயமாக, 5, 10 ஆயிரம் ரூபாய் இருக்கும். இதற்கு காரணம் அந்த அசோஸியேஷன் ஸெக்ரட்டரியாக இருந்தவர்தான் என்று சொல்லப்பட்டது.

Supply of water from Papanasam dam

* 1062 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state the basis on which water is let down the Papanasam Hydro-Electric Dam for irrigation purposes?

THE HON. SRI P. KAKKAN : Water is let down in accordance with the rules of regulation of water from the Papanasam Hydro-Electric Reservoir approved by Government. A copy [a] of the rules is placed on the table of the House.

[a] Printed as Appendix I on pages 927–928 infra.

[30th March 1959

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, தண்ணீர் கொடுப்பதில் பல குறைகள் இருந்து வருவதாக சொல்லப்படுகின்றன. சில இடங்களில் அதாவது கடைக்கோடியில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுத்து வருவதாக சொல்லப்படுகிறது. இம்மாதிரிப்பட்ட குறைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு அந்த இடத்திலுள்ள மக்களின் பிரதிநிதிகளையும், அங்கு இருக்கக்கூடிய நிலசுவான்தார்களையும், அரசாங்க அதிகாரிகளையும் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு திட்டவட்டமான முடிவு எடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் விடும்போது பொதுவாக மேலே இருப்பவர்களுக்குப் பாதகமாகவும், கீழே இருப்பவர்களுக்கு சாதகமாகவும் தண்ணீர் விடுகிறார்கள் என்றால் அங்கு இருக்கின்ற இன்ஜினியர் போன்ற சர்க்கார் அதிகாரிகள் மக்களிடம் ஒரவஞ்சகமாகத்தான் நடந்து கொள்ளுகிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவ்விதம் அவர்கள் நடந்து கொண்டிருப்பார்கள் என்று அரசாங்கம் கருதவில்லை. மேற்கொண்டு ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் ஆதார பூர்வமான குறைகள் இருக்குமானால், அவற்றை எழுதிக்கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

Vaigai Reservoir

* 1063 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is a proposal by the Government to install a generating plant and utilize Vaigai Reservoir water for generating power also?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a proposal to install a generating plant at Vaigai Project at a future date, if considered necessary. With this in view two pipes of 10 feet diameter have been fixed at Vaigai Dam to feed two generators that mgiht be installed at a latter date. The capacity of each generator has been tentatively fixed at 5,400 K.W.

SRI V. SANKARAN : தண்ணீரைக் கோடைக்காலத்தில் மின்சாரத்துக்குப் பயன்படுத்தினால் விவசாயத்திற்குப் பாதகம் ஏற்படாதா ? அப்படியானால் அதன் பேரில் என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir this is like counting tea chickens before, they are hatched. இன்னும் அதைப் பற்றி முடிவு ஒன்றும் எடுக்கவில்லை. வைகை திட்டத்திலிருந்து இப்போது தான் தண்ணீர் உபயோகப்படுத்தி வருகிறோம். இதைப் பற்றி இனி மேல்தான் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

Medicines containing intoxicants

* 1064 *Q*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1957–58-ல் மெடிகேடட் ஸ்ப்ரிட் போன்ற போதை வஸ்துக்கள் கலந்த மருந்து விற்பனை மூலம் நடைபெறும் மதுவிலக்குக் குற்றம் சம்பந்தமாக கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்கள் எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, 212 cases of illicit sale of medicines, containing intoxicants like medicated spirit, were detected in this State during the year 1957–58.

30th March 1959]

Sri A. VEDARATHNAM : இந்தக் கேஸ்களுக்கு எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டுள்ளதா ? மேலும் இப்போது இந்த குற்றங்களை கண்டுபிடிக்கின்றவர்கள் தனிப்பட்ட அதிகாரி களாக இருக்கின்றதினால் பூராவும் சரியாக கண்டுபிடிக்கவில்லை என்று தெரி கிறது. ஆகவே இம்மாதிரி கேஸ்களைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பை போலீஸ் இலாகாவிடம் விட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது எக்ஸைஸ் இலாகா வினரால்தான் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் கண்டுபிடித்து போலீஸின் கையில் கொடுத்தவுடன் அவர்கள் கேஸ் எடுத்து மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இப்போது 112 கேஸ்கள் கன் விக்ஷனில் முடிந்தன. அதில் நாலு கேஸ்கள் ட்ரையல் (விசாரணை) முடியவில்லை. இரண்டு கேஸ்கள் டிஸ்சார்ஜ் ஆயிற்று. இரண்டு கேஸ்கள் நடத்துவதற்கு சட்டத்தில் இடம் இல்லாமல் போய்விட்டது. மூன்று கேஸ் களில் சரியான விதத்தில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை.

Number of persons reported missing to the Police

* 1065 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons reported missing to the Police, in the years 1956, 1957 and 1958 respectively—

(i) in the City; (ii) in the municipal towns; and (iii) in the State;

(*b*) of this, how many are—

(i) boys; (ii) girls; (iii) women; and (iv) men; and

(*c*) the number of persons traced?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The particulars are furnished in the paper [a] placed on the table of the House.

Sri K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, காணமல் போனவர்களின் எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒன்றுக்குப் பகுதியாக இருக்கிறதே. ஏன் இத்தனை பேர்கள் வரை கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது ? ஒரு சிலர் குற்றம் செய்து விட்டு ஓடியவர்களின் எண்ணிக்கையும் இதில் அடங்கியுள்ளதா ? அப்படி யானால் அது எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கண்டுபிடிக்கப்பட்டது, 1956, 1957, 1958-ம் வருஷங்களில் 52, 53, 54 சதவிகிதம் இருக்கின்றது. அதற்கு மேல் முடியவில்லை என்று அர்த்தம் இல்லை. மிஸ்ஸிங் என்ற தலைப்பின் கீழ் வரக்கூடியவர்களில் ஒரு சிலர் குற்றம் செய்தவர்களாக இருக்கலாம். எவ்வளவு கவனம் செலுத்த முடியுமோ அவ்வளவு கவனம் செலுத்தப்பட்டு கண்டுபிடிக்கப்படுகிறது.

Sri V. K. KOTHANDARAMAN : மேஜை மேல் வைக்கப்பட் டிருக்கிற ஸ்டேட்மென்டிலே "விமென்"களை விட "கேர்ல்ஸ்" அதிமாகக் காணமல் போயிருக்கிறார்கள். அதை விட "பாய்ஸ்" அதிகமாக் காண மல் போயிருக்கிறார்கள். இப்படி "டோடல்" ஆகப் பார்க்கும்போது காண மல் போனவர்கள் என்று கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தில் கண்டு பிடித்தது நூற்றுக்கு 20 பேர்கள்தான் இருக்கிறது. ஆகவே இதிலே

a Printed as Appendix II on page 928 infra.

[30th March 1959

போலீஸுடைய திறமைக் குறைவு இருக்கிறது என்று சர்க்கார் ஒப்புக் கொள்வார்களா? அல்லது "ஸம் திங்" (ஏதாவது) வாங்கிக்கொண்டு பிடிக்காமல் விட்டுவிட்டிருக்கிறார்களா என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வயது வந்தவர்களைவிட வயது குறைந்தவர்கள் காணாமல் போவது அதிகம் என்றால், வயது வந்தவர்கள் தாங்களாக மறைந்துவிடுகிறார்கள். வயது குறைந்தவர்களை யாராவது மறைத்துவிடுகிறார்கள் என்பதுதான் முக்கிய காரணம். முடிந்த அளவுக்குக் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கப்படுகிறது. போலீஸ் திறமைக் குறைவு என்று கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். நான் அவ்வாறு கூற முடியாது.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் காணாமல் போகிறவர்கள், பிச்சைக்காரர்கள் சட்டத்தின் கீழ் பிடித்துக்கொண்டு போகிறதால் காணாமல் போகிறார்கள் என்று அத்தனை பேர்களுக்கும் தெரியும். ஏழைகளாக உள்ளவர்கள்—பிச்சைக்காரர்களாக இல்லாதவர்கள்கூட—இந்தச் சட்டத்தின் கீழ் பிச்சைக்காரர்கள் என்று பிடித்துக்கொண்டு போகப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க போலீஸுக்கு..

MR. SPEAKER : I have not understood the question myself.

SRI S. PAKKIRISAMI PILLAI : அதைத் தவிர்க்கப் போலீஸாருக்கு தீர விசாரணை செய்துதான் இந்தப் பிச்சைக்கார விடுதிக்கும் மற்ற இடங்களுக்கும் பிடித்துக்கொண்டு போக வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவிட முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறுதான் கண்டிப்பாக உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அதிலும் நன்றாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் சொல்லுவது போல ஏழைகளை எல்லாம் பிச்சைக்காரர்கள் என்று கொண்டு போனால், பிச்சைக்கார விடுதிகளில் இடமே இருக்காது. இப்போது இருக்கிற பிச்சைக்கார விடுதிகளே குறைவு என்று சொல்லும்போது, அவைகளில் இடம் இருக்கிறபோது, ஏழைகளை எடுத்துக்கொண்டு போவதில்லை என்று அங்கத்தினர்கள் அறிய வேண்டும்.

MR. SPEAKER : There are 15 more minutes and 20 more questions have yet to be answered. If the hon. Members want to ask many supplementary questions, I have no objection. But, that will encroach upon the time set apart for the discussion of the Appropriation Bill.

SRI T. T. DANIEL : From the paper placed on the table, it is seen that the number of persons missing has been increasing from year to year. May I know the reasons for this and also what steps the Government have taken to prevent such things in future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I cannot tell the hon. Member what specific steps the Government are evolving or propose to take. But, I may, however, tell him that the Government have been taking all the necessary precautionary steps in the matter.

SRI S. M. ANNAMALAI : காணாமல் போகிற பெண்களை அழைத்துச் சென்று அவர்களைத் தவறான பாதைகளில் ஈடுபடுத்துகிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அப்படித் தவறான பாதையில் ஈடுபடுத்துபவர்களைக் கண்டுபிடிக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்?

30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனையோ தவருன பாதைகளில் ஒரு சில மக்கள் செல்லுகிருர்கள். அதை எல்லாம் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வகையிலே போலீஸார் கண்காணித்து வருகிருர்கள்.

Local Fund Dispensary at Jayankondan

*1066 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any representation from the villagers of Andimadam, Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, requesting the transfer of the Local Fund Dispensary from Jayankondan to Andimadam?

THE HON. SRI M. A. MANICKAVELU : A representation has been received from the President, Mandala Congress Committee, Andimadam.

SRI K. R. VISWANATHAN : அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸ்தல ஸ்தாபன ஆதிக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரி ஜயங்கொண்டான் என்ற ஊரில் இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது இப்போது. எந்த இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொல்லுகிருர்களோ அந்த இடம் இங்கிருந்து 6, 7 மைலில்தான் இருக்கிறது. இப்போது இந்த ஊரிலிருந்து பஸ் போக்கு வரத்து எல்லாம் இருக்கிறது. இந்த இடத்திலே இருப்பதே சௌகரியம். அதைச் சுற்றி இருக்கும் கிராமங்களுக்கு எல்லாம் உதவியாக இருக்குமென்பதுதான் சர்க்காருடைய அபிப்பிராயம்.

Amount allotted for the college education of Backward Class and Harijan students in North Arcot District

*1067 Q.—SRI V. K. KRISHNAMURTHY : Will the Hon. the Minister for Works be pleased to state the amount allotted for (i) Backward Communities, and (ii) Harijans for study in Government (Arts and Professional) Colleges in North Arcot district in the years 1957 and 1958?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே 1957–58-ம் ஆண்டில் ஹரிஜனங்களுக்கு வேண்டி 23,315 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1958–59-ம் ஆண்டில் 36,719 ரூபாயாக வளர்ந்திருக்கிறது கண்டு பாராட்டுவது மாத்திரமல்லாமல் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக 1957–58ம் ஆண்டில் 91,650 ரூபாய் ஒதுக்கப்பட்டது, 1958–59-ம் ஆண்டில் 51,963 ரூபாயாகக் குறைந்திருக்கக் காரணம் என்ன ? இந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிருர்கள் என்று குறிப்பிடுகிறதா ? இந்த அளவுக்குக் குறைந்து போவதற்கு போதிய மாணவ மாணவிகள் இல்லை என்பதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : என்னிடத்தில் இதைப்பற்றி தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

[a] Printed Appendix III on page 929 infra.

[30th March 1959

SRI A. GOVINDASAMY : 1958–59-ம் ஆண்டில் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் ப்ரொபஷனல் காலேஜில் படிப்பதற்கு சகாய நிதி ஒதுக்கவில்லை. இதனுடைய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் கேட்ட கேள்விக்குத் தகுந்தவாறு பதிலளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI K. VINAYAKAM : ஸார், பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய மானியம் ஒரு வருஷத்தில் 91,000 ரூபாய். மறு வருஷத்தில் அது குறைந்து 51,000 ரூபாயாக இருக்கிறது.

MR. SPEAKER : The same question was put by another hon. Member and was answered by the Hon. Minister.

SRI K. VINAYAKAM : What was the answer, Sir?

MR. SPEAKER : The Hon. Minister wanted a separate question to be put.

THE HON. SRI P. KAKKAN : சபாநாயகர் அவர்களே, 1958–59-ல் ஜாஸ்தி மாணவர்கள் இல்லாமலிருந்திருந்தால் அதிகமாகக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஏதாவது ஒரு தகுந்த காரணத்தினால்தான் இம் மாதிரி இருக்கும். அதற்குத்தான் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன் என்று நான் பதில் சொன்னேன்.

Quantity of electrical energy used in the State

* 1068 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தற்போதைய சென்னை ராஜ்யத்தில் எத்தனை கிலோ வாட் (kilowatts) மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : 1,155 million units during 1958.

SRI N. R. THIAGARAJAN : 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியன்று எவ்வளவு இருந்தது ?

MR. SPEAKER : How can the Hon. Minister answer the question? The hon. Member may put a separate question.

Brick Makers' Co-operative Societies in North Arcot District

*1069 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன ?

(ஆ) அந்தச் சங்கங்களின் முதலீடு (Working Capital) எவ்வளவு ?

(இ) அரசாங்கம் கடனாகவும், உதவி நிதியாகவும் அளித்த தொகை எவ்வளவு ?

(ஈ) 1958-ம் ஆண்டில் அந்தச் சங்கங்களின் உற்பத்தி விற்பனை லாபம் எவ்வளவு ?

30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*d*) A statement[a] furnishing the information is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்த ஸ்டேட்மென்ட்படி ஒரு சொஸைடியில் 1,320 ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. இன்னொரு சொஸைடியில் 36 ரூபாய் லாபம் வந்திருக்கிறது. இன்னொரு சொஸைடியில் லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை. இதற்குக் காரணம் என்ன ? சொஸைடிகள் சரியாக வேலை செய்யவில்லை என்பது காரணமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பரீட்சார்த்தமாக நடத்தப்படுகிற சொஸைடி. அளக்காவூர் ப்ரிக் அண்டு டைல் சொஸைடி செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் ப்ரொடக்ஷன் தொடங்க முடியவில்லை. அதற்கு மெம்பர்கள் இன்னும் சரியாகச் சேரவில்லை. போதிய கேபிடல் லோனும் கிடைக்காமல் இருக்கிறது. அரசாங்கம் இதற்கு ஓரளவுக்கு, 7,000 ரூபாய் அனுமதித்தது. அம்மாதிரி பல குறைகள் இந்த சொஸைடிகள் லாபகரமாக வேலை செய்வதில் இருக்கின்றன. இது பரீட்சார்த்தமான திட்டம். பரீட்சை செய்து அதற்கு மேல்தான் விருத்தி செய்யமுடியும்.

Maintenance of Government roads in Tirunelveli District

* 1070 *Q*.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Collector of Tirunelveli has forwarded a copy of the resolution of the District Planning Board requesting for special grant towards maintenance of Government roads in the district; and

(*b*) if so, the action taken thereon so far?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The District Planning Board recommended an additional grant of Rs. 30 lakhs for maintenance of Government roads in Tirunelveli district.

The amount sanctioned for maintenance of Government roads in the State during the current year including those taken over from District Boards in 1958–59 is Rs. 2,15,55,400. Out of this a sum of Rs. 11,30,000 was first allotted for maintenance of the existing Government roads in the Tirunelveli district and Rs. 3,90,000 for roads taken over from the Tirunelveli District Board. Subsequently a further sum of Rs. 1,70,000 was also sanctioned for repairs to the roads transferred from the District Board and to those in Vilathikulam area as the surface of these roads was bad. The Divisional Engineer (Highways) has sanctioned a special repair estimate for an additional sum of Rs. 2 lakhs for these roads. The Chief Engineer has provided for this in his proposals for final modification of grants.

SRI M. S. SELVARAJAN : In view of the very deplorable financial condition of the District Board, will the Government come forward to take up for maintenance all the District Board and village roads just as in the case of Kanyakumari district at least for a year or two till the Panchayat Union Councils are formed?

[a] Printed as Appendix IV on page 930 *infra*.

[30th March 1959

THE HON SRI P. KAKKAN : எல்லா ரோடுகளையுமே உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாது. எதை எதை எடுத்துக்கொள்ள முடியுமோ அதையெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொண்டு வருகிறோம்.

Parapalar Scheme

* 1071 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state when the Parapalar Scheme is likely to be taken up for execution, the estimated cost and the acreage to be benefited by it?

THE HON. SRI P. KAKKAN : The scheme is estimated to cost about Rs. 38 lakhs and to bring a new area of 800 acres besides assuring steady supply to the existing ayacut of 1,250 acres. Gaugings are being conducted across the river near Virupakshi to assess the availability of supplies in the river. The question of taking up the scheme can be considered only after it is definitely known that sufficient supplies will be available in the river for extension of irrigation.

SRI V. SANKARAN : அவ்வளவு குறைந்த அளவிலே செலவாகும்படியான திட்டம் அனுமதிக்கப்படாததற்குக் காரணம் என்ன? அந்தத் திட்டம் சீக்கிரத்திலே எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : முதலிலே அவர்கள் அபிவிருத்தி வரி (பெட்டர்மென்ட் டாக்ஸ்) கொடுப்பதற்கு மறுத்திருக்கிறார்கள். பின்னால்தான் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒத்துக்கொண்டதினால் மீண்டும் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்யப்படும்.

Remission of land revenue in the Ramanathapuram District

* 1072 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have taken steps to grant remission of land revenue for this fasli in Ramanathapuram district in the affected areas; and

(*b*) whether the collection of cyclone relief and other loan instalments and arrears of land revenue will be deferred in view of the failure of crops in East Ramanathapuram?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government have granted concessions in respect of the following areas :—

(1) *Sattur taluk.*—Virudhunagar and Sattur firkas.

(2) *Srivilliputtur taluk.*—Malli firka and portions of Mathampatti firka.

(3) *Aruppukottai entire taluk.*

(4) *Ramanathapuram estate.*—Whole of Kamudhi and Mudukulathur taluks and portions of Paramakudi taluk and portions of Tiruvadanai taluk.

(5) *Ramanathapuram taluk.*—Portions of Devipatnam, Tiruppulani, Ramanathapuram west and Thiru Utharakosamangai.

30th March 1959]

The concessions consist of—

(i) Special remission in all cases of wet land cultivation where the outturn is four annas and below.

This concession will not apply to mamool wet waste and current wet waste which was not brought under cultivation during last year also.

(ii) The collection of land revenue and rent in this fasli will be limited to the unremitted portion of the current year's demand plus an equal amount towards arrears, if any, from each pattadar; and

(iii) The loan instalments, both arrear and current, due for payment in the current fasli will be postponed to the next fasli.

SRI K. RAMACHANDRAN : இந்த உத்தரவு எப்பொழுது போடப்பட்டது ? இதுவரையில அந்த பகுதியில் அந்த உத்தரவு வந்ததாகத் தெரியவில்லை. அந்த உத்தரவை அரசாங்கம் உடனடியாக அந்தப் பகுதிக்கு அனுப்பி வைப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 7-3-1959 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

Loans to Agricultural Co-operative Banks

* 1073 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any loan has been promised by the State Bank of India to the Co-operatives in the State to enable them to finance the paddy trade and to Agricultural Co-operative Banks for the storage of foodgrains; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The State Bank of India have agreed to provide under Government guarantee a cash credit advance of Rs. 10 crores to the Madras State Co-operative Bank for being passed on to the procuring agents through the respective District Co-operative Central Banks for financing procurement operations.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையைக் காட்டிலும், அதிகப்படியான விலைக்கு மார்க்கெட்டில் விற்பதின் காரணமாக, சர்க்கார் ஏற்கனவே நிர்ணயித்த இரண்டு லட்சம் டன் கொள் முதல் செய்ய வேண்டுமென்ற திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது உண்மையா ? அப்படியானால், கூட்டுறவு சொஸைட்டி மூலமாக என்ன என்ன வழிகளை அனுசரிக்க வேண்டுமோ அதை அனுசரித்து, இரண்டு லட்சம் டன் அரிசி கொள்முதலைப் பூர்த்தி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு லட்சம் டன் ப்ரொக்யூர்மெண்ட் செய்வதென்றால், உடனடியாகவே வாங்குவது என்ற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக வாங்கலாம் என்பது. இரண்டு லட்சம் டன் வாங்க முடியும் என்ற நம்பிக்கையும் சர்க்காருக்கு இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக இது வாங்குவதானால் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது பற்றி ஸ்டேட் ட்ரேடிங் மானியத்தின்போது விவரித்துச் சொன்னேன்.

Famine in Vridhachalam taluk

* 1074 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there was an acute famine in Vridhachalam taluk, South Arcot district, in 1958–59;

(*b*) whether the Collector of the district had recommended to the Government for giving relief to the affected people; and

(*c*) if so, the steps taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) It has not been reported that famine conditions prevailed in Vridhachalam taluk. Owing to the failure of the north-east monsoon, however, drought conditions prevail in the taluk.

(*b*) Yes, Sir.

(*c*) The Government have granted the following concessions in respect of the lands under the Wellingdon Reservoir affected by adverse seasonal conditions in Vridhachalam taluk :—

(i) Full remission of assessment in respect of all dry lands with an outturn of four annas and below ;

(ii) Full remission in respect of the lands which are usually irrigated with the water of the reservoir and which were left waste this year for want of water ;

(iii) Postponement of the collection of loan instalments falling due this year to next year, i.e., from 1st February 1959 to 31st December 1959 for the villages served by the Wellingdon Reservoir; and

(iv) Remission of full water cess on lands with an outturn of four annas and below.

Bridge across Pennar

* 1075 *Q.*—SRI M. SELVARAJ : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சென்னை-மதுரை (trunk road) பாதை 104-வது மைல் 6-வது பர்லாங்கில் வெண்ணையாற்றுக்குக் குறுக்கே கட்டப்படுகின்ற பாலம் எப்பொழுது முடிவடையும் ?

THE HON SRI P. KAKKAN : The bridge work proper has been completed. The approaches to the bridge are expected to be completed by the end of March 1959.

Price of yarn

* 1076 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இப்போது கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஸப்ளை செய்யப் படுகிற வெவ்வேறு நம்பர் நூல்களின் விலைகள் என்ன ?

(ஆ) மார்க்கெட்டில் இந்த நம்பர் நூல்களின் விலை என்ன ?

அதேபோல் சென்னை டிரான்ஸ்போர்ட், அதில் பல ஊழல் இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். டயர்கள் வாங்குவது இல்லை. ஸ்பார் பார்ட்ஸ் வாங்குவது இல்லை. வாங்குவது போன்று கணக்கைக் காட்டிவிட்டும்—அல்லது புதியவைகளை விற்று பழையவற்றையே உபயோகப்படுத்துவதாகக் கேள்விப்படுகிறேன். இவற்றிலே சர்க்கார் கொஞ்சம் கண்காணிப்புடன் இருக்கவேண்டும். இந்த மாதிரியாக ஊழல் நடக்கிறதா என்பதையும் விசாரித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டும். மூடக்கூடிய தொழில்சாலைகளை எடுத்து நடத்தவேண்டும் என்று சொன்ன போது, அது மக்களுக்குத் துரோகம் செய்வது போலாகும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நஷ்டம் ஏற்படக்கூடிய தொழிற்சாலைகளை எடுத்து நடத்துவதென்றால் அது சரி. ஆனால் லாபம் வரக்கூடிய தொழில்களே இருக்கின்றன. இன்று குடியாத்தத்தில் இருக்கக்கூடிய சில்க் மில்லை எடுத்துக் கொண்டால் அவை பல வருஷங்களாகவே அதிக லாபத்தில் வேலை செய்து வந்திருக்கிறது. அவற்றை நடத்துவதற்கு அவர்கள் தயாராய் இல்லை. இது போன்ற தொழிற்சாலைகளை சர்க்காரே எடுத்து நடத்துவதன் மூலமாக வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். அதனால் சர்க்காருக்கு லாபமும் ஏற்படும். ஆகவே இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் மூடப்படுவது என்றால் இதைச் சர்க்கார் கவனித்து அதைத் திறந்து நடத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று 1945-வது ஆண்டிலே பஸ் ரூட்டுகள் சில பேருக்கு கொடுத்து நிறுத்தப்பட்டது. அதன் பிறகு அவர்களிடமிருந்து
10 a.m. அந்த ரூட்டுகளை சர்க்கார் எடுத்துவிட்டார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். இருபது பஸ்கள் வைத்திருப்பவர்கள்தான் முதலாளிகள் என்று கருதப்பட்டு இந்த பஸ் தொழிலை நடத்தலாம், மற்றவர்கள் நடத்தக்கூடாது என்று உத்திரவு போடப்பட்டது. பஸ்

30th March 1959] [Sri V. K. Kothandaraman]

ரூட்டுகள் கொடுக்கப்பட்டது. அதன்படி இரண்டு மூன்று பஸ்கள் வைத்திருந்த முதலாளிகள் தங்களுடைய பஸ்களை விற்றுவிட்டார்கள். மறுபடியும் அரசாங்கம் அந்த உத்திரவை மாற்றி 20 பஸ்களுக்குக் குறைவான பஸ்களை வைத்திருப்பவர்களுக்குக்கூட லைசென்ஸ் வழங்கப்படும் என்று உத்திரவு போடப்பட்டது. ஆகவே 1945-வது வருஷத்தின் அரசாங்க உத்திரவின்படி முன்பு ரூட் பர்மிட் வைத்துக் கொண்டிருந்து அந்த உத்திரவுப்படி இரண்டு மூன்று பஸ்கள் வைத்திருந்து நீக்கப்பட்ட பஸ் முதலாளிகளுக்கு டாப் ப்ரையாரிடி கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 7, 8 வருஷங்களாக அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருக்கிறார்கள். ஆனால் மற்ற ராஜ்யங்களில் எல்லா அரசாங்கக் கைதிகளையும் விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் அரசியல் கைதிகளை இன்னும் விடுதலை செய்யவில்லை. நம் ராஜ்யத்தில் அரசியல் பாகுபாடு கண்ணோட்டத்தோடு அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் விஷயத்திலும் போதியபணம் ஒதுக்காமல் இருக்கிறார்கள். அதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கம் அவர்களுக்கு எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் கதர் விற்பனை செய்வதை ஏற்றுக் கொண்டிருப்பது போல், கைத்தறி துணி விற்பனை பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். செய்வதில் எத்தனையோ நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சர்க்கார் பணம் இல்லை என்று சொல்வார்கள். ஆனால் பணம் கிடைப்பதற்கு வழி இருக்கிறது. தேயிலை தோட்டத்திலே செய்துகொண்ட 90 வருஷ ஒப்பந்தம் இன்னும் சில நாட்களில் காலாவதியாகி விடும். அப்போது சர்க்காருக்கு இந்தத் தேயிலைத் தோட்டங்களை எடுத்துக் கொண்டு நடத்தினால் அதிக வருமானம் கிடைக்கும். இப்பொழுது தோட்ட முதலாளிகள் ஏக்கருக்கு 8 அணா செலுத்திவிட்டு அதிக வருமானம் அடைகிறார்கள். ஆகவே சர்க்கார் அவர்களுடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு சர்க்காரே எடுத்து நல்ல முறையில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, I support this Bill. I like to point out to the Government that the five rupees dearness allowance which has been given to the teachers of aided schools—announced in the Governor's Address—has not yet been given to them so far. They say there are certain points which have to be clarified about the Government Order which has been passed by the Government in this regard. In particular, I like to bring to the notice of the Hon. Minister that the bills which have been submitted to the Kanyakumari District Treasury Officer, claiming this enhanced dearness allowance, have been objected to because of some difficulties. I therefore request the Hon. Minister to go into this question and issue a new order or instructions clarifying the position and give instructions to the District Treasury Officers to pass the bills relating to this five rupees allowance to all classes of teachers employed in private management schools.

[Sri T. T. Daniel] [30th March 1959

I would also point out to the Hon. Minister that by an order, dated the 23rd January 1959, nearly 3,000 primary school teachers of Kanyakumari district are very much affected. The scale of pay of these teachers on the date of integration was Rs. 35 to 85. By this order, the status of these teachers have been lowered down to the level of elementary grade teachers whose maximum pay is only Rs. 45. After this order is implemented, these classes of tachers who would be getting Rs. 45 as their basic salary would not be getting their increments since the maximum salary of elementary grade teachers of the Madras State Service is only Rs. 45. This order, I believe, is a clear violation of the provisions of the States Reorganisation Act. Further, this order also affects the basic trainees employed in this district. The Basic Trainee has finished the school-final examination, has undergone one year's training of the T.C. State and also he has completed the one year of basic training. One fails to understand how a school final trained teacher can be made equivalent to a third form trained teacher of the Madras State Service. I therefore, request the Hon. Minister to look into this question as early as possible and cancel the order, dated the 23rd January 1959 and issue an order immediately stating that all these teachers should be regarded as secondary grade teachers of the Madras State Service.

Sir, in the matter of giving stipends to the B.Ts., there is a line of distinction made by the Government between the teachers appointed prior to 1953 and those teachers appointed subsequent to 1953. This distinction should be put an end to and the stipends given to the B.T., teachers appointed before 1953 should also be given to the B.T., teachers who are appointed subsequent to 1953.

So far as the Pension Scheme Rules are concerned, even though these Rules have been framed, applicable to private secondary school teachers, they have not been extended to all the districts of the State. Hence, a teacher who retired subsequent to coming into force of these Pension Scheme Rules, are not in a position to apply for their pension. While welcoming the decision of the Government to pay the primary school teachers at least in 100 schools their salary directly by the Government, I would suggest that this policy should be extended to all categories of teachers. Now, it is the Government which is paying the grant to private management schools by way of salary to these teachers. Out of this grant which the Government gives to the private managements as salary to be paid to these teachers, it should be to all classes of teachers employed under private management schools. I like to point out that there are institutions which are not paying actually the salaries in accordance with the Educational Code. Though actually they get receipts for the prescribed salary amount, in fact they are paying them only a lower amount.

I woud also point out that the annual report of the Educational Department is not published year by year, but only periodically. We get the annual reports only now and then. At least in future,

30th March 1959] [Sri T. T. Daniel]

strict instructions should be given to the Director of Public Instruction that the Administration Reports of the Department should be ready every year before he Budget Session begins.

Now, Sir, there is only one Secretary who is in-charge of three departments, namely, Education Department, Health Department, and the Local Administration Department and these three departments are now growing. I would therefore suggest that there should be a separate Secretary for each of these three departments so that the papers that go to the top level may not lie there and they can be disposed of as early as possible. It is rather impossible for one Secretary to know the problems connected with all the three departments. I fear that mistakes are likely to occur. I would even suggest that the recent order of the 23rd January 1959, referred to by me, which on the very face of it appears to be wrong, might have been passed by oversight or passed because of the burdensome work which is there at the top level in this department.

So far as the inequality in the pay of the teachers is concerned, I would request that early orders should be passed so that all teachers may be equal pay, whether working in Kanyakumari or any other district, and avoid any discontentment between these two classes of teachers. I would in particular point out that the B.T. graduate trained teacher is only getting Rs. 55 as basic pay whereas another employ of a management school is getting Rs. 85. It may perhaps be argued that because a peculiar private secondary schools system is prevailing in that district, the Government have to go in detail into the working of that system, and therefore this matter is being postponed. Whatever that may be, I would request Government to go into this question and pass early orders increasing the salary of the graduate trained teacher of that district to Rs. 85, which his brethren in any part of any other district are getting.

10-10 a.m.

I am really glad that by the recent order of the Government, certain promotions, which ought to have been given some three school teachers there. But I would point out that even in that order also, the scale of the graduate teacher in the departmental schools, who is appointed subsequent to the integration is put at Rs. 85, whereas the graduate teacher employee in the departmental schools, prior to the date of integration gets only the original scale of pay, viz., Rs. 55. The disparity appears to be an anomaly, in view of the fact that a new recruit to the Government service to the same post is getting a higher pay than an employee who is working in the department for some time past.

Sri A. VEDARATHNAM: On a point of information, Sir. கனம் சபாநாயகர் அவர்களே, பி. டி. டெரெய்னி பெறும் க்ராசுவேட்டுகளுக்கு பயிற்சிக் காலத்தில் ஸ்டைபெண்டு கொடுக்கப்படுகிறது என்று கனம் அங்கத்தினர் தமது உரையில் குறிப்பிட்டார். இப்போது எங்கேயும் அவர்களுக்கு ஸ்டைபெண்டு கொடுக்கப்படுவதில்லையே ! அவர்களுக்கு எங்கே ஸ்டைபெண்டு கொடுக்கப்படுகிறது என்று அவர் தெரிவிப்பாரா ?

[30th March 1959

SRI T. T. DANIEL: So far as the Kanyakumari District is concerned, teachers appointed prior to 1953 were given Rs. 500 as stipend.

*SRI S. RAMASAMI THEVAR: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த ஆண்டிற்கான செலவுகளுக் கென ஒதுக்கியிருக்கிறோம். பல திட்டங்களையும் வகுத்திருக்கிறோம். மக்களிட மிருந்து எவ்வளவு வரி வசூலிக்க முடியுமோ அவ்வளவிற்கு வரிகளை விதித் திருக்கிறோம். நாம் இந்தத் திட்டங்கள் சரியாக நடத்தப்பட்டு அவைகளால் மக்களுக்கு நன்மைகள் ஏற்படுகின்றனவா என்று கவனித்து வரவேண்டும். இப் போது இந்த நாட்டில் ஊழல்கள் மிகவும் மலிந்து விட்டன. தாட்சண்யம் பார்ப்பது அதிகமாகிவிட்டது. கண்டிப்பு இல்லை. நாம் இந்த ரீதியில் சென்றுகொண்டிருந்தால் நாடு முன்னேற்றமுறாது என்று வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். நாம் எல்லாக் காரியங்களிலும் தாட்சண்யம் பார்ப்பதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பல காரியங்களுக்கும் மக்கள் பல காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. நான் ஒரு உதாரணம் தெரிவிக்க விரும்புகிறேன். என் அறந்தாங்கி தாலூக்காவில் நகரில் ஒரு வாரச் சந்தை நடந்து வருகிறது. அங்கே கட்டணம் வசூலிப்பவர் சந்தை யில் கூடும் வியாபாரிகளிடமிருந்து முறைமீறி அதிகமான கட்டணம் வசூலித்து வருகிறார். சந்தை நிலமானது 8 ஏக்கர் 13 செண்ட் விஸ் தீரணம் உள்ளது. சந்தை நிலத்தில் நான்கு புறங்களிலும் மதில் சுவர்கள் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் 4 பர்லாங், 5 பர்லாங் தூரத்திலிருந்து வரும் வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிக்கின்றனர். இதைத் தடுத்தால் அங்கேயுள்ள போலீசு, அதிகாரிகளின் உதவியுடன் மக்களைத் துன்புறுத் துகின்றனர். இது சம்பந்தமாக சென்ற அக்டோபர் மாதத்திலிருந்து சர்க்கா ரிடம் முறையிடப்பட்டு வருகிறது. ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களிடமும் இது பற்றி பல தடவை முறையிடப்பட்டிருக்கிறது. நாங்கள் அதி காரிகளையும் பல முறை கண்டு, இந்தக் குறையை நீக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ஜில்லாக் கலெக்டரிடமிருந்தோ மற்ற அதிகாரி களிடமிருந்தோ இன்னும் பதில் வரவில்லை என்று கனம் அமைச்சர் சொன்னார். ஆறுமாத காலமாகியும் பதில் வரவில்லை. அரசாங்கம் இந்த போக்கில் சென்று கொண்டிருந்தால் மக்களுடைய நலன்கள் பாதிக்கப் படும். மக்கள் நலன் தான் மிக முக்கியம். நாட்டில் சுபிட்சம் ஏற்பட வேண்டுமானால் சர்க்கார் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதை வற் புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என் தாலூக்காவில் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய பணம் உரியவரிடம் கொடுக்கப்படாமல் வேறு சிலரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆள் மாறாட் டம் காரணமாக இவ்வாறு நடந்தது. இது, இந்த மன்றத்தில் எத்தனையோ தடவை சொல்லப்பட்டிருந்த போதிலும் இது வரை கவனிக்கப்பட வில்லை. சர்க்காருக்கு வரி கொடுக்க வேண்டியவர்கள் அதை வரி வாங்கும் அதிகாரியிடம் இன்றி வேறு யாரிடமாவது கொடுத்து விட்டால், சர்க்கார் சும்மா இருப்பார்களா ? சர்க்கார் அவர்களைத் தண்டிப்பார்கள். ஆனால் சர்க் கார் செய்த குற்றத்திற்கு யார் பொறுப்பாளி. பணம் பெற வேண்டியவர் பல இடங்களுக்கு ஆயிரம் நடை நடந்து வருகிறார். ஆனால் அவருக்கு இன்னும் பணம் வந்தபாடில்லை. இந்த விஷயத்தை தயவு செய்து கவனிக்க வேண்டு மென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டில் இம்மாதிரி பல குறைகள் இருக்கின்றன. கனம் மந்திரிகள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர். அது வரவேற்கத்தக்கது. ஆனால் ஆங்காங்குள்ள ஊழல்களையும் மற்ற விஷயங்களையும் அவர்கள் கவ னிப்பதில்லை. வெறுமனே மனுக்களை வாங்கிக் கொண்டும் வரவேற்புப் பத்திரங்களை வாங்கிக் கொண்டும் வருகின்றனர். அவர்கள் சுற்றுப்பிர யாணம் செய்யும் போது தயவு செய்து ஆங்காங்கே மக்களின் கஷ்டங்களை கவனிக்க வேண்டும். மக்கள் இன்று மிகவும் பயப்படுகின்றனர். அதிகாரி களிடம் மிகவும் பயப்படுகின்றனர் ; அதிகாரிகளைக் கண்டு அவர்கள் ஏதோ

30th March 1959] [Sri S. Ramasami Thevar]

பூதங்களோ, பிசாசுகளோ என்று பயப்படுகின்றனர். நீங்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் போது மக்களிடம் வந்து "நீங்கள் உங்கள் குறைகளைச் சொல்லுங்கள், அவைகளைத் தீர்க்கிறோம்", என்று சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்வதுடன் மட்டுமன்றி உண்மையாகவே காரியத்திலும் குறைகளைத் தீர்க்க வேண்டும். நீங்கள் கவனிப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்று கவனிக்காமல் இருந்தால் அதிகாரிகள் மக்களைத் துன்புறுத்துகின்றனர்.

அடுத்தபடியாக இந்த ராஜ்யத்தில் உணவு உற்பத்தி நன்றாகப் பெருக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தக் கணக்கில் நமக்கு நம்பிக்கை இல்லை. நாட்டில் இனிமேல் உணவு நிலைமை எவ்வாறு இருக்கப் போகிறதோ தெரியவில்லை. நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படாமலிருக்கும்படி சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போது ராஜ்யத்தில் அரிசிக்கு ஒரு இடத்தில் ஒரு விலையும் இன்னொரு இடத்தில் இன்னொரு விலையுமாக நிர்ணயித்திருப்பதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. மேலும் இரண்டு-மூன்று நாட்களுக்கு முன்பு கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. வேதரத்னம் சொன்னது போல உணவு தானியங்களில் கலப்படம் மிகுந்து விட்டது. நாணயம், உணவு, மிருகங்களுக்கு வேண்டிய தீவனமாகிய பிண்ணாக்கு ஆகிய எல்லாவற்றிலும் கலப்படம் மிகுந்து விட்டது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுவதால் மக்களின் உயிருக்குக் கூட பாதகம் ஏற்படுகிறது. கலப்படம் செய்வதை உடனடியாகத் தவிர்க்க வேண்டும். கலப்படம் செய்பவர்களைத் தூக்கிலிட்டாலும் பரவாயில்லை. இப்போது எங்கேயும் கலப்படம் தான். மளிகைக் கடைகளில் அத்தனை சாமான்களிலும் கலப்படம் செய்யப்படுகிறது. அரிசியில் கல்லும் மண்ணும் தூசியும் இருக்கின்றன. மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு அரசாங்கம் பாடுபட வேண்டும். எனவே இந்த விஷயங்களிலெல்லாம் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறந்தாங்கியின் தென் பகுதியில் அதிகமாக இருக்கும் ஹரிஜனங்களுக்கு குடியிருக்க மனை இல்லை. அவர்களை முதலாளிகள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அவர்கள் தங்கியிருக்கும் வீடுகளிலிருந்து அப்புறப் படுத்த முடிகிறது. அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் மனுக்களை உடனடியாக ஆராய்ந்து அவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டில் என் தாலுகாவில் 120 ஹரிஜனங்களுக்கு மாடுகள் இனாமாக வழங்கப்பட்டிருக்கின்றன. மாடுகளுக்காக அவர்கள் மனுக்கள் அனுப்பவேண்டியிருந்தது. அறுநூறு பேர்களுக்கு மேல் மனுச்செய்துகொண்டனர். மனுச் செய்து கொண்ட அவர்கள் சில உத்தியோகஸ்தர்களுக்கு 5 முதல் 10 ரூபாய் வரை லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. மனுக்களை பரிசீலனை செய்த காலத்து லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. நிர்வாகம் இவ்வாறு இருந்தால், அவர்களுக்கு அரசாங்கம் உதவினாலும் அவ்வுதவியின் பூரண பலனை அவர்கள் அடைய முடியாமல் போகிறது. இந்த நிலைமையில் அவர்கள் "நாம் ஏனடா மனுச் செய்து கொண்டோம், இந்த சர்க்காரிடம் நாம் ஏனடா கஷ்டப்பட வேண்டும்" என்று நினைக்கத் தோன்றுகிறது. "முன்பு இருந்த வெள்ளையன் ஆட்சியே நன்றாக இருந்தது போல் தோன்றுகிறது" என்று நாட்டு மக்கள் நினைக்கக்கூடிய நிலைமை நிலவுகிறது. ஆகவே, லஞ்சம், தாட்சண்யம், தயவு ஆகியவைகளையெல்லாம் நீக்கி விட்டு கண்டிப்பாக இருந்து ஆட்சி நடத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக்கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் மீது நீண்ட நாட்கள் விவாதம் நடந்து, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள எல்லா மான்யக் கோரிக்கைகள் மீதும் நல்ல முறையில் விவாதம் நடத்தி அவைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இங்கு கூறப்பட்ட எல்லா விஷயங்களையும் கூடுமான வரையில் எடுத்துநடத்த வேண்டுமென்று கேட்டுக்

[Sri M. R. Kandaswami Mudaliar] [30th March 1959

கொள்வதோடு கூட இன்னும் சிற்சில விஷயங்களை மட்டும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். சேலம் தாலூகாவில் பருவ மழை தவறி குடி தண்ணீருக்குக்கூட அங்குள்ள மக்கள் மிகவும் அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் கலெக்டர் அவர்கள் என்ன காரணத்தினாலோ, தெரியவில்லை, இன்னும் அங்கு வரி வஜா செய்ய வேண்டுமென்று ரிப்போர்ட் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அங்குள்ள மக்கள் ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு அணா கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. வீரபாண்டி தொகுதியில் ஆட்டயம்பட்டியில் இந்த நிலைமை இருக்கிறது. அங்குள்ள மக்கள் பருவ மழை தவறியதின் காரணத்தினால் குடிதண்ணீர் கூட இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் அங்கு பருவ மழை தவறியதால் இரண்டு போகம் வெள்ளாமையும் காய்ந்து போனதால் குறிப்பாக சேலம் தாலூக்காவிற்காவது வரி வஜா செய்து தரவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சென்ற ஆண்டில் லோக்கல் டெவலப்மெண்ட்வொர்க்ஸின் கீழ் ஸ்கூல்களுக்குக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க உதவித் தொகை கொடுக்கப்படாததால் இப்பொழுது அங்கு பள்ளிக் கூடங்களுக்கு இட வசதி இல்லை. பூராத் தொகையையும் கிராம மக்களை எடுத்துக் கொண்டு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் அந்த வேலைகளை செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. லோக்கல் டெலவப்மெண்ட் வொர்க்ஸின் கீழ் கொடுக்கப்படுகிற மான்யத் தொகையை வைத்துக் கொண்டு ஓரளவு உற்சாகத்துடன் பற்பல கட்டிடங்கள் கட்டும் நிலை ஏற்பட்டு வந்திருந்தது இந்த ஆண்டு தடை படுவதால் பொதுமக்களுக்குச் சௌகரியம் செய்யத் தக்க விதத்தில் தொடர்ந்து பள்ளிக் கூடங்கள் கட்டுவதற்காக வேறு எந்தத் தொகையிலிருந்தாவது சிறிதளவு தொகையை எடுத்து இந்த லோகல்டெவலப்மெண்ட் வொர்க்கை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த மது விலக்குச் சட்டத்திலுள்ள ஒரு ஷரத்தை 4A என்பதைத் திருத்த வேண்டுமென்று பல போலீஸ் அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே அதில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென்பதை நான் அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, இப்பொழுது அதிகமாகக் குடித்து விட்டு அதிக போதை உள்ளவர்களுக்கு குறைந்த தண்டனை கொடுக்கப்படும் என்று ஒரு விதியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, குடிபோதை குறைவாக இருப்பவர்களுக்கு அதிக பட்ச தண்டனையும், அதிகம் குடித்துவிட்டு நிலை தடுமாறி நிற்பவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனையும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதை அவசியம் மாற்றியமைக்க வேண்டும். இப்படியிருப்பதால் பல தவறுகள் நேரிடுகிறது என்று ஒரு எஸ். ஐ. என்னிடம் சொன்னார். எதற்காக அப்படி ஒரு ஷரத்து இருக்கிறது என்பதைக் குறித்து அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தரும் படியாகக்கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு ஷரத்து இருப்பதினால் பல தவறுகள் நேரிடுவதால் அதை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய வழிவகைகள் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இப்பொழுது ரிபேட் தொகை குறைந்திருப்பதாலும், அது உடனுக்குடன் கொடுக்கப்படாதிருப்பதாலும் கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது. ஆகவே, கைத்தறியும், கதர் போல் கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கக்கூடிய சமயங்களில் அரசாங்கமே அவற்றைக் கொள் முதல் செய்து அவைகளை டிப்போக்கள் மூலம் அத்துணிகளை விற்பனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் கைத்தறி நெசவாளர்கள் வேலை இன்றி தடுமாறும் நிலை இல்லாமல் இருக்கும். பல லட்சக்கணக்கான மக்கள் அந்தத் தொழிலில் குடிசைத் தொழிலைப் போன்று, ஈடுபட்டிருக்கிறார்கள். கைத்தறித் தொழிலில் ஒரு நெருக்கடி ஏற்பட்டு அதன் காரணமாக அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கமே வேலை வாய்ப்புத் தேடித்தர வேண்டிய நிலை ஏற்பட்டால் அது அரசாங்கத்திற்கு ஒரு பெரிய பளுவாக இருக்கும். ஆகவே இந்த விஷயத்தில் அரசாங்கம் சிறிது அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இரண்டு வருடங்களாக சொல்லிக் கொண்டு வருகிறோம், ஒரு குறையைப் பற்றி. ஆட்டையாம்பட்டியிலிருந்துஇருசனாம் பட்டிக்கு இடையே ஒரு மைல் தூரம் இருக்கிறது. அதற்கு இடையே இருக்கும் ரோடு சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டதாகும். அந்த ரோடு

30th March 1959] [Sri M. R. Kandaswami Mudaliar]

இப்பொழுது நடப்பதற்குக் கூட லாயக்கில்லாமல் இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள மக்கள் அதைப்பற்றி குறைபடுகிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் மல்லூரிலிருந்து வெண்ணந்தூர் வரை ஜில்லா போர்ட் போட்ட ரோடு இருக்கிறது. அது பத்து ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டது. அது மிகவும் சீர்கேடடைந்து மக்கள் அந்த வழி நடப்பதற்கோ அல்லது வண்டிகள் போவதற்கோ லாயக்கற்ற நிலையில் தான் இருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் உணவுப் பொருள்களை வீரபாண்டிக்கு எடுத்துக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. சரியான பாதை இல்லாததால் அவர்கள் படும் கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. வண்டிகள் அந்த வழி போக முடியாததால் மக்கள் எரு, தழை போன்றவைகளைக் கொண்டு போக முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு நடுவில் ஒரு நதி ஓடுவதால் அங்கு ஒரு பாலம் கட்டவேண்டியிருக்கிறது. திருமணிமுத்தா நதி என்ற அந்த நதி மிகவும் ஆழமாக இருப்பதால் பள்ளத்தில் வண்டிகள் போகும் போது அவை கூட சாய்ந்து விழுந்து சாமான்கள் பாழாகிறது. ஆகவே, அந்தப் பாலத்தைச் சீக்கிரமே கட்டித் தரவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். சேலம்-ராசிபுரம் போகக்கூடிய வழியில் கொமாரபாளையம் வழியாக வெண்ணந்தூர் வரை ரோடு அகலம் இல்லாத காரணத்தினால் நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு ரோடு இல்லாத காரணத்தினால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கொமாரபாளையம்—வெண்ணந்தூருக்கு போவதற்கு நல்ல ரோடு வசதி இல்லாத காரணத்தினால் வண்டியில் நாலைந்து பேர்கள் சேர்ந்து போக முடியாமல் இரண்டு மூன்று பேர்களாகப் போய்த் தங்கள் துணிகளை விற்று வரவேண்டியிருக்கிறது. அப்படி விற்றுவிட்டு ராத்திரி 11, 12 மணிக்கு அந்த வழி வரவேண்டியிருப்பதால் சிலர் அவர்களைத் தடுத்து அவர்கள் துணிகளை விற்று வைத்திருக்கும் 40, 50 ரூபாயை பறித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே இந்த ரோடை அவசியம் போட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற அலுமினியம் தொழிற்சாலை, இரும்புத்தொழிற்சாலை காகிதத் தொழிற்சாலை போன்றவைகளை உடனடியாக அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு சர்க்கார் ஆவன செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக வீரபாண்டி, வெண்ணந்தூர் இவைகள் பிற்போக்கான நிலையில் இருப்பதால் அந்த ஏரியாக்களை இந்த ஆண்டில் ப்ளாக் டெவலப்மெண்டில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீரபாண்டி தொகுதியை ப்ளாக் டெவலப்மெண்ட் ஏரியாவாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராசிபுரம், சேலம் தவிர பிரசவ ஆஸ்பத்திரி எங்குமே கிடையாது. ஆகவே, அங்குள்ள கிராம வாசிகள் படும் கஷ்டம் சொல்லிமுடியாது. எங்கு சென்றாலும் பதினைந்து, இருபது மைல்கள் செல்ல வேண்டியிருக்கிறது ஒரு ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு. ஆகவே வெண்ணந்தூர் பிர்க்காவில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். வெண்ணந்தூரில் அதற்காக ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க அங்குள்ள மக்கள் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, அங்கு ஒரு பிரசவ விடுதியை அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக வேம்படிதாளம் என்ற இடத்தில் ஒரு ரூரல் டிஸ்பென்ஸரி ஓப்பன் செய்ய டி. எம். ஓ. டிஸ்டிரிக்ட் போர்டு சிபாரிசு செய்து அனுப்பி யிருந்தார்கள். ஆனால் அங்குள்ள ஜில்லா போர்டின் நிதிநிலைமை மோசமாக இருப்பதால் அந்த டிஸ்பன்ஸரியை ஏற்படுத்துவதற்கு இல்லை என அரசாங்கத்திலிருந்து ஒரு உத்தரவு போய் விட்டதால் அதை ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள். அப்படி ஒரு சிறிய டிஸ்பென்ஸரி கூட அங்கு இல்லை என்று சொன்னால் அங்குள்ள மக்களுக்கு தலைவலி, காய்ச்சல், வயிற்று வலி என்று சாதாரண வியாதி வந்தால் கூட சேலத்திற்குப் போய் வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதனால் மக்களுக்கு எந்த அளவு கஷ்டம் ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, வேம்படிதாளத்தில் அவசியம் ஒரு டிஸ்பென்ஸரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்

கொள்கிறேன். அடுத்தபடியாக, அமைச்சர்களின் சுற்றுப் பிரயாணம் குறித்து ஒரு வார்த்தை. ஒவ்வொரு கிராமத்திற்கும் அமைச்சர்கள் அடிக் கடி சுற்றுப் பிரயாணம் செய்தால் தான் அங்குள்ள மக்கள் அவரவர்கள் குறைகளை எடுத்துக் கூறி, அவைகளை நிவர்த்திச் செய்து கொள்ளலாம். ஆகவே, அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டு மென்று மக்களே விரும்புவதால் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய் வதை விட்டுவிடக்கூடாது. அப்படி அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிர யாணம் செய்தால் தான், சட்டசபை மூலமும், அரசாங்க டிப்பார்ட்மெண்ட் மூலமாகவும் கொடுக்கக்கூடிய விண்ணப்பங்கள் கவனித்து மக்களின் குறை களைப் போக்க முடியுமாதலால், எந்தக் காரணத்தை முன்னிட்டும் அமைச்சர்கள் தங்கள் சுற்றுப்பிரயாணத்தை கைவிடக்கூடாது என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன.

10-30 a.m. * SRI M. P. SUBRAMANIAM : அவைத் தலைவர் அவர்களே, இம்மாதம் 2-ம் தேதி முதல் இன்று வரையில் 1959-60-ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட விவாதத்தில் அவை உறுப்பினர்கள் பலர் பங்கெடுத்துக் கொண்டு, பொதுவாகவும், தங்களுடைய தொகுதிகளைப் பற்றியும் பல குறைபாடுகளைச் சொல்லி அரசாங்கத்தின் மேல் சில பேர்கள் குற்றம் சாட்டினார்கள் சில பேர்கள் அரசாங்கம் இதைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகள் விடுத்தனர், சிலர் வேண்டுகோள்கள் விடுத்தார்கள். (Speaker in the Chair) இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் நடப்பதை அதாவது எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதியைப் பற்றியோ, அல்லது பொதுவாகவோ சில குறைபாடுகளைக் கூறிக்கொண்டு வருவது, அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பேசிய பேச்சுக்களைத் திருப்பி பார்ப்போமானால், நன்றாக விளங்கும். இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், 1953-54-ம் ஆண்டில் அமைச்சராக இருந்த ராமநாதபுரம் ராஜா அவர்கள் நீர்ப்பாசன விஷயத்தில் உறுப்பினர்கள் கூறிய விஷயங்களைக் கவனித்து அடுத்த ஆண் டுக்குள்ளாக அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரியப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது நடை முறையில் நிறைவேற்றப்படவில்லை. விவாதத்தில் கலந்து கொள்ளு லும் உறுப்பினர்கள் சில குறிப்புகளைச் சொல்லுகிறார்கள். கடைசியில் பதி லளிக்கின்ற அமைச்சரவர்கள் இந்த விவாதத்தில் 31 பேர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் சொன்ன ஆலோசனைகளுக்கு என்னுடைய நன்றி, எல்லாம் கவனித்துச் செய்யப்படும், என்று பொதுவாகச் சொல்லி விடுகிறார்கள். அதனால் எந்தவிதமான பிரதிபலனும் ஏற்படவில்லை என் பதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம். சட்ட மூலமாகவும், மற்றும் வெளி யிலும் பரிகாரம் காணமுடியாத பல விஷயங்களைப் பற்றி சட்டசபையில் எடுத்துப் பேசினால் அதற்கு ஒரு பரிகாரம் கிடைக்கும் என்ற ஒரு நிலை இருந்தால்தான், சட்டசபையினுடைய கௌரவத்திற்கும், முக்கியத்துவத் திற்கும் உகந்ததாக இருக்கும். என்ன கருத்துக்களைத் தெரிவித்தாலும், உறுப்பினர்கள் கூறிய ஆலோசனைகள் கவனிக்கப்படும் என்று அமைச்சர் கள் பொதுப்படையாக இறுதியில் பதில் கூறுவது ஒரு பக்கத்தில் இருந் தாலும், உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய ஆலோசனைகளுக்கும், குறைபாடு களுக்கும் அமைச்சர்கள் உடனே நேரடியாகப் பதில் கூறமுடியாமல் பொது வாக ஆலோசிக்கப்படும் என்று சொன்னாலும், ஒரு ஆண்டுகாலத்திற்குள் ளாகவாவது உறுப்பினர்களுடைய ஆலோசனைகள், குறைபாடுகள இவைகளைத் தொகுத்து, அதன் பேரில் என்ன செய்யப்பட்டிருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பினால் மிகச் சிறந்த முறையாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நாட்டில் நிர்வாகத் துறையை எடுத்துக் கொண்டாலும் இதே நிலையை நாம் காண்கிறோம். 1947-க்குப் பிறகு பொதுமக்கள் தங்களுடைய குறைபாடுகளைத் தெரியப்படுத்தி, தீர்மானங்கள், விண்ணப்பங்களையெல்லாம் அனுப்புகிறார்கள். ஆனால், அந்த விண்ணப்பங்களுக்கு என்ன பலன் இருக்கிறது என்பதை நாம் நடைமுறையில் பார்க்கப் போனால் அவை

30th March 1959] [Sri M. P. Subramaniam]

களினால் எவ்விதபலனும் ஏற்படுவதே இல்லை. சாதாரணமாக அதிகாரிகளுக்கு எழுதிய கடிதங்களுக்குக் கூட, பல மாதங்களுக்கு பதிலே வருவதில்லை. அம்மாதிரி பல குறைபாடுகளை நான் உதாரணத்தோடு இங்கே எடுத்துக் கூற முடியும். எட்டு மாதங்கள் 10 மாதங்களுக்கு அதிகாரிகளிடமிருந்து பதில் கூட வருவதில்லை. அதிகாரிகளிடமிருந்து பதில் வராதது ஒரு பக்கத்தில் இருந்தாலும் கூட, அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள், கையொப்பம் வாங்கிக் கொண்டு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் பற்றி, சட்டசபையில் கேள்வி நேரத்தில் அது போன்ற விண்ணப்பம் வந்ததா என்று கேட்டால், வரவில்லை என்று பதில் சொல்லுகிறார்கள். அதுபற்றி நான் நிதி அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒரு உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறேன். சேலம் மாவட்டம் சிங்கம்பட்டியிலுள்ள விவசாயிகள் சீப் மினிஸ்டர் மூலம் ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். அந்த விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கு அரசாங்க அதிகாரியின் கையொப்பம் இருக்கிறது. இதுபற்றி கேள்வி நேரத்தின்போது சென்னை மாநில முதல் அமைச்சர் மூலம் அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்ததா என்று கேட்டால், இல்லை என்று பதில் அளிக்கப்பட்டது. கையொப்பம் இருக்கிறதே என்று கேட்டால், எத்தனையோ விண்ணப்பங்கள் வருகின்றன, அவைகள் "பி.ஏ"விடமோ, டெப்யூடி கலெக்டர் அல்லது ஜில்லா கலெக்டரிடமோ கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர்களிடம் புகார் செய்து விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் கூட அவை கவனிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. தகுந்த முறையில் பரிகாரம் காணலாம் என்ற நம்பிக்கையோடு தான் இந்த நாட்டு மக்கள் விண்ணப்பம் அனுப்புகிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் கூட, நிலைமை இவ்வளவு மோசமாக இல்லை. போடுகின்ற விண்ணப்பங்களின்மீது இப்பொழுது தக்க நடவடிக்கை எடுப்பதில்லை. அதற்கு எந்தவிதமான பதிலும் வருவதில்லை. அதனால் எந்த விதமான பலனும் ஏற்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கொடுக்கின்ற விண்ணப்பங்களுக்கும், மகஜர்களுக்கும் அவர்களுக்கு என்ன பரிகாரம் இருக்கிறது என்பதற்கு பதில் அனுப்பப்பட வேண்டும். ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாவது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாது. விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பிரச்சனையை தீர்க்க முடியாது என்று சொன்னால் அதுவே போதுமானது. சுதந்திர நாடு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஒரு பக்கத்தில் சொல்லுகிறோம். நாட்டிலுள்ள மக்கள் அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும், அரசாங்கத்திற்கும் தெரிவிக்கும் விண்ணப்பங்களுக்கும், அனுப்புகிற கடிதங்களுக்கும் உடனுக்குடன் 3 மாதங்களுக்குள், 6 மாதங்களுக்குள் பதில் கிடைக்குமானால், அதுவே அரசாங்கம் செய்யும் ஒரு மிகச் சிறந்த சேவையாக இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் நாட்டினுடைய நிலைமையை மிகைப் படுத்திக் கூறுகிறார்கள், இதனால் நிர்வாக இயந்திரம் மோசமாகி விடும் என்று. உண்மையிலேயே வெள்ளையர் காலத்தை விட, இப்பொழுது லஞ்சம் பெருகி இருப்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவேண்டியது தான். இதில் பெரும்பாலும் பொது மக்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இதிலே அதிகாரிகள் மட்டும் பொறுப்பாளிகள் அல்ல. கிராமப்புறங்களிலே நிலவரம் எப்படி இருக்கிறது என்றால், சாதாரணமாக ஒருவருக்கு ஒரு உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால்கூட, ஒன்று லஞ்சம் கொடுக்க வேண்டும், அல்லது பெரிய மனிதருடைய சிபாரிசு இருக்க வேண்டும். இந்த இரண்டிற்குள் ஏதாவது ஒன்று இல்லாதவரை எந்தக் காரியமும் நடைபெறாது என்பதைப் பெரும்பாலான மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இரண்டையும் ஒழிக்க வேண்டும். சிபாரிசு இருந்தால்தான் எந்தக் காரியமும் நடைபெறும் என்ற நிலைமை இருக்கக்கூடாது. சிபார்சு செய்வதிலே இந்தச் சபையில் உள்ள எல்லாத்தரப்பு அங்கத்தினர்களும் ஓரளவு பொறுப்பாளியாக இருக்கலாம். அதைத் தவிர்ப்பது எப்படி என்

பது தான் முக்கியமான பிரச்னை. பணம் கொடுத்தால் தான் நடைபெறும். சிபார்சு இருந்தால் தான் நடக்கும் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாக இருக்கிறது. இதைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். அடிப்படை நிர்வாகத்தை திருத்தி அமைக்க வேண்டியது முக்கியமான பிரச்னை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று குறிப்பிட விரும்புவது என்னவென்றால், சாதாரணமாக கிராமப்புறத்திலுள்ள விவசாயிகள் அல்லது தனிப்பட்ட மனிதர்கள் தாலூகா ஜில்லா அலுவலகங்களுக்குச்சென்று செய்திகள் ஏதாவது தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், "வா, உட்காரு" என்று சொல்வதற்குக் கூட தகுந்த அதிகாரியோ அல்லது இடமோ இல்லை. தாலூகா அலுவலகங்களிலும், ஜில்லா அலுவலகங்களிலும் "ரிசப்ஷன் ஆபீஸ்" ஒன்று வைத்து, எல்லா விஷயங்களையும் தெரிந்த ஒரு குமாஸ்தாவை அங்கே நியமித்து, விவசாயிகளோ அல்லது தனி மனிதர்களோ தங்களுக்கு இன்னது தெரியவேண்டுமென்று சொன்னால், அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விஷயங்களைத் தெரிவிக்க வேண்டும். அப்படியில்லாமல் விவசாயிகள் தாலூகா அலுவலத்திற்குச் சென்றால், அவர்கள் கம்பத்தைக் கட்டிக் கொண்டு நிற்கவும், ப்யூனோ மற்றவரோ பார்த்து 1 ரூபாய், 2 ரூபாய் வாங்கிக் கொண்டு, "வெளியே நில், பாரம் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமையைத்தான் காண்கிறோம். அந்த நிலைமை உறுதியாக மாற வேண்டும். ஜில்லா, தாலூகா அலுவலகங்களில் "ரிசப்ஷன் ஆபீஸ்" அல்லது "என்கொயரி ஆபீஸ்" ஒன்று ஏற்படுத்தி நல்ல விஷயங்கள் தெரிந்த குமாஸ்தாவை அங்கே நியமிக்க வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையிலே நிதி அமைச்சர் அவர்கள் பெரிய தொழில்கள் துவக்குவது பற்றி பரிசீலனை நடத்தி வருவதாக தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய சென்னை ராஜ்யத்தில் என்னென்ன கனிப் பொருள்கள் கிடைக்கும் என்பது பற்றி இப்பொழுது ஆராய்ச்சி நடந்து வருகிறது. அது போல தேசீயப் பொருளாதார ஆராய்ச்சிக் குழு என்ற ஒரு ஸ்தாபனமும் இது பற்றி பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. இந்த இரண்டு பரிசீலனைகளும் முடிந்த பிறகு தொழில்களைத் துவக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொழில்களைத் துவக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெரும் பகுதி நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆகையினால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களை பெரிய துறையிலே எடுப்பதற்கு வழிவகை இல்லையென்று சொன்னார்கள். உண்மையாகவே இந்த அரசாங்கத்திற்கு பெரிய தொழில்களை துவக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் என்னென்ன கனிப்பொருள்கள் இருக்கின்றன, அவைகளை எந்தெந்த வகையிலே பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் நாம் அதன்படி செயல்பட்டு, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அதிக நிதி வசதி பெறுவதற்கு வசதியாக இருந்திருக்கும். இதை முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் செய்யத் தவறி விட்டார்கள். இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்ட இறுதி காலத்தில் சென்னை ராஜ்யத்தில் ஒரு தனி ஜியாலாஜிகல் டிபார்ட்டுமெண்டு ஏற்படுத்து என்னென்ன உலோகங்கள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, டெல்லியில் இருக்கக் கூடிய தேசீய பொருளாதார ஆராய்ச்சிக் குழு நம் ராஜ்யத்தில் தொழில்களைத் துவக்குவதற்கான வாய்ப்புகளையும், சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து, பிறகு அந்தப் புள்ளி

30th March 1959] [Sri M. P. Subramaniam]

விவரங்களின் அடிப்படையில் தொழில்களைத் துவக்க வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்கள். இந்த ராஜ்யத்தில் இனி என்னென்ன கனிப் பொருள்கள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அதற்கு மேல் தொழில் துவக்குவதற்குள்ள வாய்ப்புகளையும், சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து புள்ளி விவரங்கள் தயாரிப்பது தொழில்களைத் துவக்குவதற்கு ஒரு பெரிய உபகாரமாக இருக்காது. அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது தொழில்களைத் துவக்கு வதற்கு உண்மையாக அரசாங்கம் விரும்பினால், அதற்கு வேண்டிய எல்லா வழிவகைகளையும், என்னென்ன செய்ய முடியுமோ அந்த சாத்தியக் கூறு களையும் இப்பொழுதே முடிவு கட்டவேண்டும். எதற்கு நான் இதை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு சேலத்திலுள்ள இரும்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கு சேலத்திலிருந்து இரும்பு சாம்பிளை வட நாட்டிலுள்ள ஜாம்ஷட்பூருக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பி னார்கள். ஆனால், இதுவரையில் அந்த ஆராய்ச்சியின் முடிவு நமக்கு ஒன்றுமே வரவில்லை.

அதைப் போலவே சேலத்தில் கிடைக்கின்ற அலுமினியத்தைச் சரியான விதத்தில் பயன்படுத்துவதற்காக மூலப்பொருளான பாக்ஸைட்டை எடுத்து வட நாட்டில் இருக்கின்ற ஜாம்ஷெட்பூர் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்ட தாவும், அதன் பின்னால் அதை அமெரிக்காவுக்கு பரிசோதனைக்கு அனுப்ப போவதாகவும் முதலில் தெரிவிக்கப்பட்டது. பின்னால் இதைப் பற்றி ஒரு கேள்வி இந்தச் சட்டசபையில் கேட்டபொழுது அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்டது. இரண்டு ஆண்டுகளாக இதை அமெரிக்காவுக்கு அனுப்ப வில்லை. இங்கேயே வைத்துப் பரிசோதனை செய்யலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்றும், அதன் காரணமாக அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இவை களை எல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் உண்மையாகவே அரசாங்கம் இதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது என்பதற்காகத்தான். ஆகவே இனிமேலாவது இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக தமிழ் நாட் டில் தொழில் வாய்ப்புகள் மிக மிக குறைவு. தொழில் வாய்ப்புகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குறைந்தது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் 10 திட்டங்களை யாவது செய்து முடிப்பதற்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். நமது நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் சொல்லுவார்கள், நாம் தொழில் துறையில் அதிகமாக முன்னேறி இருக் கிறோம் என்று, வேண்டுமானால் புள்ளிவிவரங்களைப் பாருங்கள் என்று புள்ளி விவரங்களைக் காட்டுவார்கள். நான் கூற விரும்புவது எல்லாம் பம்பாயிலும், வங்காளத்திலும் per capita investment of Industries எவ்வ ளவு இருக்கிறது என்பதையும் நம்முடைய நாட்டில் எவ்வளவு இருக்கிற தென்பதையும் நாம் பார்க்க வேண்டும். . . .

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி நான் இது சம்பந்தமான மான்யக் கோரிக்கை வரும்போது குறிப்பிட்டேன். அங்கு இருக்கின்ற "பெர் காபிட்டா" எல்லாம் "பிரைவேட் இன்வெஸ்ட் மெண்ட்" டாக இருக்கிறதே தவிர "கவர்ன்மெண்ட் இன்வெஸ்ட் மெண்ட்" அல்ல என்பதை இப்போதும் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : நான் இங்கு குறிப்பிட விரும்புவது தொழில் துறையில் பொதுவாக நம் நாடு எந்த நிலையில் இருக்கிறது. சமீ பத்தில் Industrial policy of the Government of India என்பதை நான் பார்த்தேன். அதில் குறிப்பிட்டிருப்பது குறிப்பாக அலுமினியம் தொழிலை அர சாங்கமே நடத்தவேண்டும் என்றும், தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து வரக் கூடிய உதவியினால் அவர்கள் ஏற்படுத்துகிற தொழில் துறைகள் எல்லாம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முறையில் போனால் தான் சோஷலிஸம் இந்த நாட்டில்

ஏற்பட முடியும் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ள முடியும். (மணியடிக்கப்பட்டது.) நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரை தனியார் துறைகளைப் பெருக்குவதோடு அரசாங்கமும் தொழில் துறைகளைப் பெருக்கிக் கொள்வதற்கு இறங்கி வரவேண்டும். அதில் எந்த விதமான தடையுமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதே கருத்தைத் தான் அந்தத் தீர்மானமும் விளக்குகிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த முறையில் பார்க்கும்போது தமிழ் நாட்டில் அதிகமான அளவில் தொழில் துறைகளைப் பெருக்குவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. தனிப்பட்டவர்கள் தொழில்கள் துவக்க முன்வந்தால் உதவியளிப்போம் என்கிறார்கள். அரசாங்கத்தினுடைய லட்சியம் உண்மையாகவே இந்த நாட்டில் சோஷியலிசத்தைப் ஏற்படுத்த வேண்டுமென்று இருந்தால் பல தொழில் துறைகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டும், அதல்லாமல் வெறும் இண்டஸ்ட்ரீஸ் பாலிஸி தீர்மானத்தைக் காண்பித்து சர்க்கார் தொழில் துறையில் உதவி செய்து வருகிறது என்று சொல்லுவது உண்மையாகவே தொழில் துறையில் அக்கறை செலுத்துவதாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இண்டஸ்ட்ரீஸைப் பெருக்குவதற்கு நாம் அஸிஸ்டண்ட் டைரக்டர் என்றும், வில்லேஜ் இண்டெஸ்ட்ரீஸ் ஆபீசர் என்றும் அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். இவர்கள் எல்லாம் போதுமான அளவில் வேலை செய்யவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பிளானிங் கமிட்டிக் கூட்டத்தில் அவர்கள் வந்திருக்கும்போது அவர்களிடத்தில் உருப்படியாக ஒரு ஆண்டு காலத்தில் தொழிலைப் பெருக்குவதற்காக என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால், இன்னென்ன வேலைகள் எல்லாம் உருப்படியாகச் செய்திருக்கிறோம் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை. வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர் என்பவர் ஆறுமாத காலமாக அங்குமிங்கும் போகிறாரே தவிர, உண்மையாக உருப்படியான வேலை ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இவைகளைப் பற்றி எல்லாம் இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களால் சொல்லப்படும் குறைகளை எல்லாம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் இந்தச் சபையின் கௌரவத்தைக் காப்பாற்றுவதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*Sri R. KRISHNASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரிக்கிறேன். நாம் ஒரு மாதகாலமாக இந்த ஆண்டில் வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக விவாதிக்க வேண்டிய காரியங்களை எல்லாம் இங்கு கனம் அங்கத்தினர்களால் எடுத்துக் கூறப்பட்டன. மேலும், இம்மாதிரிப்பட்ட சமயத்தில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயத்தைப்பற்றி எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய நாடு எவ்வளவோ தொழில் துறையில் முன்னேறி வந்த போதிலும் கூட நகரத்தில் ஏற்படக்கூடிய ஜனப் பெருக்கத்தின் காரணமாகவும், நகரங்களில் அன்றாடம் ஏற்படக்கூடிய தொழில் பிரச்னைகள் காரணமாகவும், அதனால் ஏற்படக்கூடிய பல கஷ்டங்கள் காரணமாகவும் அரசாங்கத்திற்கு தலைவலி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக அரசாங்கம் நாட்டினுடைய பல திட்டங்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் நிச்சயமாக ஆலோசித்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது. நகரப்புறங்களில் நாம் பல வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டே வருகிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த வரை சேரி ஒழிப்புத் திட்டம் நடந்து வருகிறது. இது முக்கியமாக செய்ய வேண்டிய வேலைதான். இதற்காக நாம் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குகின்றோம். மேலும் கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். மேலும் ஸி.ஐ.டி. குழு ஒன்று வேலை செய்து வருகிறது. இந்த ஸி. ஐ.டி. குழுவானது நகரத்தில் பல இடங்களையும் விலைக்கு வாங்கி வீடுகளைக் கட்டி வருகிறது. ஸி.ஐ.டி. மூலம் வீடு கட்டித் தர வேண்டும் என்று விண்ணப்பம் போடுகிறவர்களில் 100-க்கு 75, 80 பேர்கள் வெளி ஜில்லாக்களில்

30th March 1959] [Sri R. Krishnasami Naidu]

உள்ளவர்கள் இங்கு வந்து வேலை பார்த்து விட்டு, வேலையிலிருந்து நீங்கினவுடன் இதே ஊரில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற ஆசையின் பேரில் இங்கேயே இருந்து விடுவதற்காக விண்ணப்பம் செய்கின்றார்கள். இவ்விதம் நகரத்தில் வசதிகளும் பெருகிக்கொண்டே போனால் நம்முடைய நாட்டின் விவசாயத்தின் கதி என்ன ஆவது என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நகரங்களில் மட்டும் இவ்விதம் பல வசதிகள் பெருகிக்கொண்டே வருவது தேசத்திற்கு உகந்ததும் அல்ல என்பதையும் நாம் உணர வேண்டும். நகரங்களில் தனியார் துறையிலும் சர்க்கார் துறையிலும் பலவிதமான தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் படுகின்றன. இதை வைத்துக்கொண்டு நகரங்களில் வேலை செய்யலாம் என்கின்ற ஆசையில் கிராமப் புறங்களிலிருந்து எல்லோரும் நகரத்திற்கு வந்து விடுகிறார்கள். இதன் காரணமாக நகரப்புறத்தில் அதிகமாக ஜனப் பெருக்கம் ஏற்படுகிறது. இம்மாதிரிப்பட்ட நகர வாழ்க்கையின் பேரில் மோகம் கொண்டு, நகரக் காட்சிகளையெல்லாம் பார்ப்பதற்கு கிராமங்களிலிருந்து வந்து விடுகின்றனர். இதனால் கிராமப் புறங்களில் இருக்கும் விவசாயத்தின் நிலை என்னவது என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். மேலும் நகரப்புறங்களிலிருக்கும் மக்கள் பலவிதமான கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைக்கிறார்கள். அவைகளையெல்லாம் நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. நகரத்தில் மட்டுமல்ல. நகரத்தைச் சுற்றியிருக்கும் இடங்களில் எல்லாம் இந்த விதமான ஒரு நிலை ஏற்பட்டிருப்பதால் நகர மக்களுடைய குறைகளை எல்லாம், தீர்த்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. இந்தச் சுமை கிராம மக்களின் தலையிலும் விழுகிறது. இவ்வாறு நகரத்தில் பெருகிவருகின்ற தொல்லைகளினால் அரசாங்கத்திற்கு சரியான முறையில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இன்னும் அநாதை விடுதிகள், பிச்சைக்கார விடுதிகள் போன்ற பல விடுதிகள் பெருகிக்கொண்டே வருகின்றன. இதன் காரணமாக பலவிதமான தொல்லைகள் நகரத்திலும், நகரத்தைச் சார்ந்த பிரதேசங்களிலும் பயங்கரமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை சென்னை நகரத்தில் மட்டுமல்ல. மதுரை, கோயம்புத்தூர், திருசிராப்பள்ளி, சேலம் போன்ற இடங்களிலும் பெருகிக்கொண்டே வருகின்றது. மேலும் பல முனிசிபல் நகரங்களிலும் இந்த நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் நல்ல விதமான வசதிகள் கிடைக்கின்றதா என்பதைப் பார்க்கும் "போது" இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் எவ்விதம் கிராமப்புறங்களில் விவசாயம் பெருகிக்கொண்டு வந்ததோ அதற்கு நேர் மாறாக கிராமப்புறங்களில் இருப்பவர்கள் எல்லாம் நகரத்திற்கு தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்காக வந்து கொண்டிருப்பதால் கிராமத்தில் விவசாயம் மோசமடைந்து கொண்டு வருகிறது. இப்போதுள்ள நிலைமையில் நம்முடைய கவனங்களும், திட்டங்களும் எல்லாம் நகரப்புறங்களில்தான் இருந்து வருகின்றன. இந்த நிலைமை மிகவும் கவலைக் கொடுக்கக் கூடியதாகும் என்பதை நாம் சிந்தித்துப் பார்த்து இதற்கு ஆவன வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஹாஸ்டல்கள கூட நகரத்திலேயே வைக்கப்படுகிறது. உதாரணமாக ஸ்ரீ வில்லிப் புத்தூரிலே 215 பள்ளி மாணவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் கட்டியிருக்கிறார்கள். இப்படி ஒரே இடத்தில் பெரிய ஹாஸ்டல்களை வைப்பதன் காரணமாக தாலூக்காவிலுள்ள பலவேறு இடங்களில்—கிராமப் புறங்களில்— ஹைஸ்கூல்கள் இருந்தும், அங்கே போகவேண்டிய மாணவர்கள் ஹாஸ்டல் வசதி இருக்கிற இடத்திற்கே வருகிறார்கள். என்? ஒரே இடத்தில் 200 பேர்கள் இருக்கும்படியான ஹாஸ்டலைக் கட்ட வேண்டும். அந்த தாலூகாவில் இருக்கிற ஒவ்வொரு ஹைஸ்கூலிலும் 25 அல்லது 30 மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுத்து அந்தந்த இடத்திலுள்ள மாணவர்கள் அந்தந்த இடத்திலேயே தங்கிப் பள்ளிகளில் படிக்க என் ஏற்பாடு செய்யக் கூடாது? இந்த வருஷத்திலேயே இம்மாதிரியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[Sri R. Krishnasami Naidu] [30th March 1959

அடுத்தபடியாக இப்போது இந்தக் கூட்டத் தொடரிலே உணவுப் பொருள்கள் சம்பந்தமாக பேசப்பட்டது. உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். உணவுப் பொருள்களின் விலை குறைந்தபாடில்லை என்று சகோதர அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்வேன். அவர்கள் எந்த இடத்தில் நிலம் வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த இடத்தில் எங்கள் பகுதியிலே நன்றாக விளையக்கூடிய பூமியாகக் கொடுக்கத் தயார். அவர்கள் மேற்பார்வையில் விவசாயம் செய்யட்டும். அதிலிருந்து விலையைக் குறைத்துக் கொடுக்க முடியுமா என்று அவர்களுடைய அனுபவம் மூலமாகச் சொல்லட்டும். விலையைக் குறைக்க வேண்டும் என்ற நம்பிக்கை கொடுக்கக் கூடிய விதத்தில், விவசாயத்திலே அனுபவமில்லாத முறையிலே மனதிலே ஏதேதோ நினைத்துக் கொண்டு விலையை இன்னும் குறைக்கலாம் என்று பேசுவது வருத்தமாக இருக்கிறது. விலையை எப்படிக் குறைக்க முடியும் என்று நான் கேட்கிறேன். வாஸ்தவத்தில் ஒரு சரியான கணக்குப் போடுகிறேன். எப்படிப் போடுகிறேன் என்று சொன்னால், குறைந்த உணவு உற்பத்தி அடிப்படையில் போடவில்லை, எக்கர் ஒன்றுக்கு **3,252** பவுண்டு விளைவிக்கலாம் என்ற கருத்தோடு, அதற்கு ஆகும் செலவு என்ன என்று பார்த்தால் இப்போது நிர்ணயித்திருக்கிற விலை மிக மிக நியாயமான விலை தான். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், மற்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்கக் கூடியது போன்ற லாபகரமாகக் கவர்ச்சிகரமாக இல்லை என்று கூறுகிறார்கள். அவர்களுடைய குறை நியாயமான குறைதான். இப்போது நிர்ணயித்திருக்கிற விலைவாசியானது அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் நிர்ணயிக்க வில்லை. வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு அதிக விலை இல்லாமல் ஒரு நியாயமான விலை அவர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற முறையில் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், இதனால் விவசாயிக்கு நஷ்டமோ லாபமோ ஏற்படாது. அவர்களுக்குத் திருப்தியளிப்பதாக மட்டுமில்லை. நியாயமான விலைதான் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை நாம் குறைக்க முடியும் என்று சகோதர அங்கத்தினர்கள் வெளியிலேயும் இந்தச் சபையிலேயும் ஏழை மக்களுக்கு அரிசி, நெல் விலையைக் குறைத்து விற்க முடியும் என்று பேசிக் கொண்டிருப்பது உண்மையை எடுத்துக் கூறுவதாக இருக்காது. அரிசி படி ஒன்று $13\frac{1}{2}$ அணா அல்லது 14 அணாவிற்குத்தான் விற்க முடியும். பச்சை அரிசியை இன்னும் கொஞ்சம் விலை கூடத்தான் விற்க முடியும். மில் சொந்தக்காரர்கள், விவசாயிகள், சொந்த நிலமுள்ளவர்கள் அத்தனை பேர்களையும் வைத்து விவாதித்தாலும் கூட, அதற்குக் குறைந்து விற்க முடியாது. சர்க்கார் உணவுப் பொருள்கள் விலை சம்பந்தமாகச் செய்துள்ள ஏற்பாடுகளை வரவேற்கிறேன். மொத்தக் கொள்முதல், தானிய வினியோகம் முதலிய காரியங்களில், கண்காணிப்பாக இருந்து அரசாங்கம், வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, கெட்ட பெயர் ஏற்படாத வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **Sri T. R. RAMAMIRTHA THONDAMAN** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ரோடுகள் விஷயமாகவும், குடி தண்ணீர், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் விஷயமாகவும் பல அங்கத்தினர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத்திலேயும், அதற்குப் பிறகும் கூடப் பேசினார்கள். நானும் பேசினேன். ரோடு சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட நிதியில் மாகாண ரீதியில் பல வித்தியாசங்கள் ஜில்லாவிற்கு ஜில்லா இருக்கின்றன. ஜில்லா போர்டு நிர்வாகம் இப்போது இயங்கி வரும் நிலையைப் பார்க்கும்போது, ஜில்லா போர்டுக்கு எந்த விதமான பண வசதியோ மற்ற வசதிகளோ இல்லாத நிலையில் எல்லா ரோடுகளும் பாதிக்கப்பட்டிருப்பதால் ரோடுகளைப் பார்த்தால் அதிலே ஜனங்கள் போக முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இல்லாமல் ரோடுகளுக்குப்

30th March 1959] [Sri T. R. Ramamirtha Thondaman]

பணம் ஒதுக்கும்படியும் ஜில்லா போர்டு ரோடுகளையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டு ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் மூலமாகப் பராமரிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, ஆஸ்பத்திரிகள் விஷயம். பல பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் பல பகுதிகளில் கட்டப்பட்டிருக்கின்றன. எனது தொகுதியில் கூட மூன்று ஹெல்த் சென்டர்களுக்கு 2 ஹெல்த் சென்டர்கள் கட்டியாகி, ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. கட்டப்படும் கட்டிடங்கள் வேலை முடிந்த பிறகு, அதிலும் குறிப்பாக ஆடுதுறை ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால் 40,000 ரூபாய் செலவு செய்து கட்டிய பிறகு, ஜில்லா போர்டின் கீழ் வரக் கூடிய காரணத்தினால், அது ஜில்லா போர்டின் கீழிருந்து மக்களுக்கு சேவை செய்ய முடியாத நிலை இருப்பதால் இந்த ஆஸ்பத்திரிகளையெல்லாம் சர்க்கார் நேரடியாக எடுத்துக் கொண்டால்தான் மக்களுக்கு வசதியாக இருக்கும். பந்தநல்லூர், நீலத்தநல்லூர், போன்ற இடங்களில் ஆஸ்பத்திரிகள் இல்லாமல் இருப்பதால், அந்த இடங்களில் ஆஸ்பத்திரிகளை அமைத்துக் கொடுத்தும், எல்லா ஆஸ்பத்திரிகளையும் சர்க்கார் நேரடியான நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டு மருந்து முதலிய சாதனங்களை உடனுக்குடன் அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். ஆங்காங்கு அமைக்கப்பட்ட பிரசவ விடுதிகளில் இருக்கக்கூடிய அம்மையார்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து கிராமப் புறங்களுக்குப் போக வசதி ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சுகாதாரத்தைப்பற்றிச் சொல்லப்போனால் சுகாதார நிலை நல்ல முறையில் முன்னேறி, சுகாதார இலாகா நல்ல முறையில் பணியாற்றி வருவதால் காலரா போன்ற தொத்து நோய்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. சுகாதார இலாகாவிலே சுகாதார இன்ஸ்பெக்டர்கள் நீண்டகாலமாக இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்களாகவே இருக்கிறார்களே தவிர எந்த வித ப்ரமோஷனும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பல சுகாதார இன்ஸ்பெக்டர்களையும் மற்ற இலாகா போன்று மேல் பதவி யளிக்க 10 அல்லது 15 ஆண்டுகள் சுகாதார இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர்களை மேல் பதவிகளுக்கு உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன.

அடுத்தபடியாக பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. மானேஜ்மெண்ட் பள்ளிக் கூடங்கள், ஜில்லா போர்டின் கீழ் இருக்கக் கூடிய பள்ளிக் கூடங்கள் என்று பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களெல்லாம் ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. ஆகவே இந்தப் பள்ளிகளையெல்லாம் சீரமைத்து ஒரே மாதிரியான முறையில் சர்க்காரே நேரடியாக நடத்தாமல, ஜில்லா போர்டை நம்பி மேலும் அவர்களிடத்தில் வைத்திருந்தால் அவைகள் சீராக நடக்க முடியாது என்றும் மானேஜ்மெண்ட் பள்ளிகளிலும் அது மாதிரிதான் இருக்கிறதென்ற அபிப்பிராயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நீண்ட காலமாகக் கூட்டுறவு முறையை மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் வற்புறுத்தி வந்தும் கூட கூட்டுறவு முறைக்கு நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய பகுதியிலே எங்கு பார்த்தாலும் மடத்து நிலங்களும், ஆதீன நிலங்களும், தேவஸ்தான நிலங்களுமாக இருந்தாலும், அந்த நிலத்தை வேண்டி பல மனுக்கள், பல தூதுகோஷ்டிகள், பல பெட்டிஷன்கள், எத்தனையோ தடவைகள் அனுப்பியும்கூட, எத்தனையோ தடவைகள் முயன்றும்கூட கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களும், ஹிந்து மத பரிபாலன அமைச்சர் அவர்களும், எது கேட்டாலும் இவர் அவரைக் காட்டுவது, அவர் இவரைக் காட்டுவது, ஹிந்து மத பரிபாலன மந்திரி மடாதிபதியை காட்டுவது மடாதிபதி கமிஷனரை காட்டுவது, கமிஷனர் சர்க்காரைக் காட்டுவது, ஆக கடைசியில் இந்த நிலம் கிடைக்க முடியாதபடி இவர்களுக்குள் வித்தியாசம் ஏராளமாக இருக்கிறது. கூட்டுறவு சம்பந்தப்பட்ட வரையில் மடாலய நிலங்களையும், கோவில் நிலங்களையும் தாராளமாக எடுத்துக்கொள்ள, சிக்கல்கள் ஏதாவது இருந்தால் அவைகளை அகற்றுவதன் மூலம் இந்த ஆண்டு

முடிவிற்குள்ளாகவே அத்தகைய நிலங்களை குத்தகை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள நல்ல வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்றும் அதற்குரிய சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்றும் மேலும் அவசரச் சட்ட மூலம் இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனம். மற்ற ஜில்லாக்களுக்கெல்லாம் அதிகமாகப் பணத்தை ஒதுக்கி நீர்ப்பாசன வசதிகளையெல்லாம் செய்கிறார்கள். ஆனால் எங்கள் ஜில்லா பழைய நீர்ப்பாசனப் பகுதி என்கின்றதன் காரணமாக, ஒதுக்கக்கூடிய பணம் குறைவாக இருப்பதன் காரணமாக பல வசதிகள் செய்துகொள்ள முடியாமல் இருக்கிறது. ஆதலால் தஞ்சை ஜில்லாவுக்கு அதிகத் தொகை ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். காரணம் வீரசோழன், காவேரி முதலியவைகளின் மூலம் படிவார் மூலம் நீர்ப்பாசன வாய்க்கால் இருக்கின்றன. அந்தப் பகுதியில் உற்பத்தியைப் பார்க்கும்போது, நீர்ப்பாசன வசதிக் குறைவு காரணமாக பல பகுதிகளில் உற்பத்தி குறைந்திருக்கிறது. நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கக்கூடிய பணத்தை எங்கள் ஜில்லாவிற்கு அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக மணியாறு பாசனத்தில் உள்ள குறையீடுகளை நான் இங்கு பல தடவைகள் தெரிவித்திருக்கிறேன். அதை உடனடியாக அதிகப் பணம் ஒதுக்கி அபிவிருத்தி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பெரிய பெரிய ரோடுகளை ஒன்றாகச் சேர்த்திருக்கிறார்கள். பல பெரிய ரோடுகளுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது போன்று தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு ஆகிய மூன்று ஜில்லாக்களை இணைத்து திருச்சிக்கும் சிதம்பரத்திற்கும் நடுவில் லோயர் அணைக்கட்டை வைத்து கொள்ளிடம் இருபுறமும் 2 ரோடுகள் 100 மைல் நீள ரோடுகள் இருக்கின்றன. இப்போது இவைகள் மண் ரோடுகளாகப் போய்க் கொண்டிருக்கிறது. மூன்று ஜில்லாக்களுக்கும் பயன்படக் கூடிய அளவிலே, 2 ரோடுகளையும் சர்க்கார் பி. டபிள்யூ., டி. ஆர். சி. டிவிஷன் என்ஜினீயரிங் டிபார்ட்மெண்டில் இப்பொழுது இருப்பதை எடுத்து, ஹைவேஸ் ரோடாக மாற்றி அதைப் பராமரிக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உடனடியாகச் சேர்த்து வேலைகளைச் செய்ய ஏற்பாடு செய்தால் போக்குவரத்து வசதி நல்ல முறையில் ஏற்படும், பல முன்னேற்றங்களும் காணலாம். மேலும் திருச்சி (ஜில்லா) உடையார்பாளையம் தாலூக்காக்களில் நீர்ப்பாசன வசதிகளும் சுகாதார வசதிகளும் இல்லை. அவைகளுக்கு நீர்ப்பாசன வசதிக்கு ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு அதிகமாகப் பணத்தை ஒதுக்கி எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும் என்றும் கொள்ளிடம் போன்ற நதியிலிருந்து பைப் மூலம் 3 அல்லது 4 மைல் சுற்றிவர இருக்கிற பகுதிகளுக்கு நல்ல குடி தண்ணீர் வசதிகள் செய்து கொடுத்து சுகாதாரத்தைப் பரப்ப வேண்டுமென்றும் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Sri K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, எங்கள் பகுதியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது எங்களுடைய பகுதியிலே, கீழ் பவானி வாய்க்காலிலே சமீபத்தில் தண்ணீரை நிறுத்திவிட்டார்கள். இரண்டாவது போகத்திற்கு இன்னும் 15 நாட்களுக்கு அதிகமாகத் தண்ணீர் விட்டிருந்தால் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பயிர்கள் தப்பியிருக்கும். ஆனால் சமீபத்திலே மந்திரிமார்கள் கூட அந்தப் பகுதிக்குப் போயிருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் நேரடியாகச்சொன்னார்கள், அங்கிருக்கும் நிலைமையைப்பற்றி. ஆனாலுங்கூட தண்ணீரை உடனடியாக நிறுத்திவிட்டதன் காரணமாக, சுமார் ஒரு லட்சம் ஏக்கரிலே தண்ணீர் சுமார் 15 நாட்களுக்குப் போதுமான அளவு கிடைக்காததன் காரணமாக ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள கடலை, ராகி போன்ற பயிர்கள் கடைசி நேரத்தில் ஆபத்தான நிலைமையில் காய்ந்துபோய் விட்டன. அதிகாரிகளைக் கேட்டால், " தண்ணீர் இல்லை ; ஆகவே, எப்படி

30th March 1959] [Sri K. R. Nallasivam]

விட முடியும்?'' என்று சொன்னார்கள். ஆனால், ஒன்று செய்திருக்கலாம். காளிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் கொடுக்கும் தண்ணீரிலிருந்து இவைகளுக்குத் தண்ணீர் விட்டால் அந்தப் பயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனாலுங்கூட, நான் கேட்டுக்கொள்ளவதெல்லாம் இது தான். இரண்டாம் போகத்திற்குத் தீர்வை விதிக்காமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பாடு செய்தால், அங்கிருக்கும் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். இரண்டாவது போகத்திற்குத் தண்ணீர் விடுகிறோம் என்று சொல்லாமல், எப்படியாவது தீர்வை கொடுங்கள் என்று சொன்னால், அது எவ்வளவு கஷ்டம் என்று ஊகித்துக்கொள்ளலாம். ஒருபுறம் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்டன. இன்னொரு புறத்தில் வரி கேட்கும்போது, அதைக் கொடுப்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது.

கடந்த வருஷத்தில் போடப்பட்ட தண்டத் தீர்வையை வசூலிக்கிறார்கள், இப்பொழுது. இது வெட்கக்கேடாக இருக்கிறது. இப்பொழுது நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், புதிய சட்டங்களைக் கொண்டு வந்து காப்பாற்றப் போகிறோம் என்று சொல்வதைவிட இருக்கும் சட்டங்களை வைத்துக்கொண்டே நியாயமான முறையில் அங்கிருக்கும் அதிகாரிகள் அமுலில் கொண்டுவரக்கூடிய முறையில் அரசாங்கம் இங்கு ஏதாவது செய்யவேண்டும். அங்கிருக்கும் ஜனங்கள் ஓயாமல் புகார் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் புகார்களை எந்த அளவு அதிகாரிகள் கவனிக்கிறார்கள் என்பது தெரியாது. அந்த அதிகாரிகள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. கணக்குப் பிள்ளை செய்யக்கூடிய காரியத்தைக் காமராஜ நாடார் கூட செய்துவிட முடியாது என்ற அளவுக்கு அதிகாரிகளுடைய அட்டகாசம் இன்று பெருகிப் போயிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். இதே நிலைமை அங்கு நீடித்தால் ஏதாவது கூடிய விரைவில் நிச்சயமாக அங்கிருக்கும் ஜனங்கள் சர்க்காருக்கு எதிராக ஏதாவது செய்தால்தான் அங்கே சொல்வதைக் கேட்பார்கள் என்ற நிலைக்கு விவசாயிகள் உந்தித் தள்ளப்படுகிறார்கள் என்பதைச் சர்க்கார் உணரவேண்டும். மகாநாடு போட்டுவிட்டால் ஆறுதல் அடைந்து விடுவார்கள், பேசாமல் இருந்துவிடுவார்கள் என்று அமைச்சர்கள் நினைக்கக் கூடாது. கடந்த வருஷத்தில் தண்டத் தீர்வை போட்டார்கள். தண்டத் தீர்வை போட்டதைப்பற்றி அமைச்சர்களிடம் வந்து சொன்னதற்குப் பின்னால், தற்காலிகமாக தண்டத் தீர்வையை ஒத்திப்போட்டார்கள். ஒரு வாரத்திற்குள் 6-ம் நம்பர் நகலோடு அப்பீல் செய்யவேண்டுமென்று அங்கிருக்கும் அதிகாரிகள் உத்தரவு போட்டார்கள். கணக்குப்பிள்ளை கொடுக்கவேண்டிய 6-ம் நம்பர் நகலோடு ஒரு வாரத்தில் அப்பீல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தும், 3, 4 மாதங்களுக்குப்பின்னால் தான் சர்க்கார் அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டிய 6-ம் நெம்பர் நகல் விவசாயிகளுக்குக் கிடைத்தது; அதை வைத்துக்கொண்டு விவசாயிகள் அப்பீல் செய்தார்கள். இப்பொழுது ஒவ்வொன்றாக வந்து கொண்டிருக்கிறது. இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். "நீங்கள் அப்பீலைக் குறிப்பிட்ட நேரத்தில் போடவில்லை; ஆகையால் உங்கள் அப்பீலைத் தள்ளுபடி செய்து, உங்களுக்கு விதித்திருக்கும் தண்டத் தீர்வையை வசூலிக்க உத்தரவிடுகிறேன்" என்று உத்தரவிடுகிறார்கள். இரண்டே நாளில் வசூல் செய்யவேண்டுமென்று ஒவ்வொரு கிராமத்திலும் தினசரி ஒவ்வொருவருக்கும் வந்துகொண்டிருக்கிறது. மீண்டும் ஸ்டே பெறுவது சாதாரணமான காரியமாக இல்லை. நியாயமான முறையில், சட்டபூர்வமாகக் கிடைக்கக் கூடிய நியாயம் சர்க்காரிடமிருந்து கிடைக்க வேண்டும். அது இல்லாவிட்டால் பெரிய சங்கடமும் தொல்லையும் உண்டு பண்ணிவிடும். ஒன்று சொல்கிறேன். இந்தத் தேசத்திலே அனேகமாக பல இடங்களில் புஞ்சைத் திட்டங்கள் இருக்கின்றன. பஞ்சாப், மற்றும் இருக்கும் பல ராஜ்யங்களிலேயே, புஞ்சைத் திட்டங்கள் இருக்கின்றன. அங்கே 30 சத வீதம் நிலங்கள்கூட சாகுபடிக்கு வரவில்லை. புதிய அணைக் கட்டுத் திட்டங்கள் ஏற்பட்டும் அந்த அளவுக்குத்தான் புஞ்சை நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனால், கோவை ஜில்லாவிலே வெட்டப்பட்ட கீழ் பவானி வாய்க்காலைப் பொறுத்தவரையில்,

60 சத விகிதம், 70 சத விகிதம் புஞ்சை நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அந்த விவசாயிகளுக்கு சர்க்காரிடமிருந்து கூடுமான வரை எல்லாவிதமான சலுகைகளையும் கொடுப்பது நல்லது. ஆனால், சலுகைகள் கொடுக்காவிட்டாலும்கூட அவர்களைத் தொல்லை இல்லாமல் நிம்மதியாக விவசாயத்தில் ஈடுபடச் செய்தாலே போதுமானது. விவசாயிகள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லியாகிவிட்டது. அங்கே இருக்கும் அதிகாரிகள்—அவர்கள் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—ஆவன செய்வதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியிலே இருக்கும் சட்ட சபை அங்கத்தினர்கள் கூட, ஒரு நாளைக்கு அங்குள்ள ஜனங்களோடு சேர்ந்து ஏதாவது செய்யவேண்டிய நிலைக்கு நீங்கள் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த ஆபத்து என்றைக்கு வெடிக்கப்போகிறதோ தெரியாது. சமீபத்தில் சர்க்கார் புதிய உத்தரவு போட்டார்கள். ஒரு மதகுத் தகராறு இல்லாமல் இருந்தால், அந்தப் பகுதி விவசாயிகளுக்கு தண்டத் தீர்வையை நிறுத்தி வைக்கலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. "தகராறு இல்லாமல் இருந்தால்" என்பதை எப்படி நிர்ணயிக்கிறார்கள். அதை எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். தகராறு இல்லாமல் இருந்தால் அங்கு எந்த விதமான தண்டத் தீர்வையும் போடாமல் இருக்கவேண்டும். ஏழை விவசாயிகள், அப்பாவி விவசாயிகள், எழுதிக்கொண்டுபோய் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், ஒரு மாதமோ இரண்டு மாதமோ ஆகும் எழுதிக் கொண்டு போய் கொடுப்பதற்கு. அதைக் கவனிக்கும்போது, எந்த மதகிலே தகராறு இல்லை என்று சர்க்காருடைய காதுக்கு எட்டுகிறதோ, அங்கே தண்டத் தீர்வை போடாமல் இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார மோட்டார்கள் சம்பந்தமாக சர்க்கார் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். முன்னூறு மின்சார மோட்டார்கள் தாராபுரம், பவானி, ஈரோடு தாலூகாக்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி, இன்றைக்கு அந்த உத்தரவு வந்ததற்குப் பின்னால் 1,500 விண்ணப்பங்களுக்குமேல் சர்க்காருக்கு மின்சார மோட்டார் வேண்டுமென்று விவசாயிகள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. மார்ச் மாதம் 30-ந் தேதி தண்ணீர் நிறுத்த வேண்டிய அவசியம் வந்து, 30-ந் தேதியன்று லட்சக்கணக்கான ஏக்கர் பயிரை விளைவிக்க முடியாமல் பயிர் நாசமாய் விட்டது. முக்கிய வாய்க்காலிலிருந்து 5 மைலுக்கு அப்பாலிருந்து மீதியிருக்கும் இடங்களுக்கெல்லாம் கிணறுகள் பூராவுக்கும் மோட்டார் கனெக்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டால் தொல்லை இருக்காது. தண்ணீர்த் தகராறு குறையும். தொல்லை மிகக் குறைவாக வரும். மின்சாரம் எந்த அளவுக்குக் கேட்கிறார்களோ அந்த அளவு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுசெய்யவேண்டும்.

இப்பொழுது உத்தரவிலே இன்னொன்றும் இருந்தது. கழிவுத் தண்ணீரை எடுத்துக் கட்டினால் தண்டத் தீர்வை கிடையாது, விண்ணப்பங்கள் போடுங்கள் என்று விவசாயிகள் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். இந்த வருஷமும்கூட விவசாயிகளுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. இந்தக் கழிவுத் தண்ணீரை எடுத்துக் கட்டினால் மீண்டும் தண்டத் தீர்வை போட ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அந்த பயத்திற்கு வழி இல்லாமல் செய்யவேண்டும். அங்கே வந்து பார்த்தால் தெரியும். ஏழு, எட்டு வருஷங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறேன் இதே ஒரு விஷயத்தைப்பற்றி. வேறு எத்தனையோ பிரச்னைகள் இருக்க, இந்த விஷயத்தை பேசிக்கொண்டிருப்பது குறித்து எனக்கே வெட்கமாக இருக்கிறது. இருந்தாலுங்கூட சொல்லியிருந்தும், அது கவனிக்கப்படுவதில்லை. கழிவுத் தண்ணீரை எடுத்துக் கட்டினால் தண்டத் தீர்வை இல்லை என்ற உத்தரவு இருக்கிறது. இப்பொழுது தண்டத் தீர்வை போட அப்படிப்பட்ட காரியங்களை அங்கிருக்கும் ரெவினியூ அதிகாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளை எந்த அளவு இவர்கள் கட்டுப்படுத்துகிறார்கள் என்று தெரியாது. நாம் மந்திரிகளிடம் வந்து சொன்னால், அவர்கள் "சரி" என்று சொல்கிறார்கள். ஆனால், அந்த இடத்தில் அதிகாரிகளுடைய தர்பார், அவர்களுடைய ஆட்சி, ஒரு சர்க்காரே அந்தப் பிர

30th March 1959] [Sri K. R. Nallasivam]

தேசத்தில் நடக்கிறதா என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு நிர்வாக மானது நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சர்க்கார் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள முனிசிபல் தேர்தலில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் தோற்றுப் போவதற்குக் காரணம் என்ன என்பதை உண்மையிலேயே ஆட்சியில் இருப்பவர்கள் எண்ணிப் பார்த்திருப் பார்களானால், காய்கறி வியாபாரிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றப் படாததால் ஏற்பட்டதென்பதை உணருவார்கள். வியாபாரிகளுடைய குறை களைக் கவனிக்கவில்லை, விவசாயிகளுடைய குறைகளை கவனிக்கவில்லை என்று இப்படியாக ஒவ்வொரு குறையாக ஏற்பட்டுக்கொண்டிருக்குமானால், அவர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்படாமல் இருக்குமானால், பின்னால் இதனுடைய விளைவு என்ன ஆகும் என்பதை நிச்சயமாக உணராத அளவுக்கு வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் ஆளும் கட்சியினர் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri V. SANKARAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட நினைக்கிறேன். கனம் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசிய போது, "நகரங்களிலே சேரி ஒழிப்பு அவ்வளவு அவசியம் இல்லை. கிராமப் புறங்களிலேதான் மிகவும் அவசியம்" என்று சொன்னார்கள். உண்மை யிலேயே நகரத்திலே தான் சேரிகளுடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது "ஸ்லம்ஸ்" என்று சொல்லும் போது அவை கிராமத்திலே அவ்வளவு மோசமாக இல்லை. அங்கு ஓரளவு இட வசதி, காற்று வசதி இருக்கலாம் ; ஆனால், நகரத்திலேதான் உண்மையிலேயே இடம் மிகக் குறைவாக இருக்கிறது, காற்று வசதி கிடையாது. நகரங்களில் கழிவுத் தண்ணீர் போவதற்குக்கூட வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, நகரங் களில் சேரி ஒழிப்பு மிகவும் அவசியம். சேரி ஒழிப்புத் திட்டத்திலே சர்க் கார் நான்கு முக்கிய நகரங்களைக் கொண்டுவருவதாகத் திட்டமிட்டிருக்கிறார் கள். கூடிய சீக்கிரம் கொண்டுவரவேண்டும். சேரிகளில் தீப்பிடித்துக் கொண்டுவிட்டால், அப்பொழுது நெருப்பு அணைக்கும் என்ஜின்கள் போவதற்குக்கூட முடியாத நிலைமையில் சேரிகள் அமைந்திருக் கின்றன. அப்படிப்பட்ட நிலைமையில் சேரிகளைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தைக் கூடியசீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

சில சேரிகளில் தீ பிடித்துக்கொண்டால் அங்கே தீ அணைக்கும் இஞ்ஜின்கள்கூட போக முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலை இல்லாமல் தீ பிடித்தவுடன் தீ அணைக்கும் இஞ்சின்கள் அங்கே சென்று அணைக்கக்கூடிய நிலையில் அங்குள்ள சேரிகளை அமைக்க வேண்டும். மதுரை சென்னை போன்ற இடங்களில் சேரிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளையெல்லாம் புனரமைக்கும்போது இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். புனரமைப்புத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு நகரத்திலும் பிச்சைக்கார விடுதி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நோயாளிகளாக இருக்கக்கூடிய பிச்சைக்காரர்களும் இருக்கிறார்கள், வேலை செய்யக்கூடிய பிச்சைக்காரர் களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மதுரை யில் இது போன்ற விடுதி ஒன்றைக் கட்டினார்கள். ஆனால் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் அது மேற்கொண்டு நடைபெறுமல் கட்டிடம் கட்டியபடியேதான் இருக்கிறது. அப்படி இல்லாமல் அந்த விடுதிகளை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைகை அணைக்கட்டு திட்டம் சம்பந்தமாகக் கொஞ்சம் சொல்ல வேண்டிய தாக இருக்கிறது. அதில் சில முக்கியமான விஷயங்களை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியதாக இருக்கிறது. பெரியாறு அணைக்கட்டு இருக்கும்போது அங்கே லீக்கேஜ் ஏற்பட்டதனால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. பெரியாறு அணைக்கட்டை அடைத்துவிட்டாலும் அதிலிருந்து வரக்கூடிய லீக்கேஜ் தண்ணீரை வைத்துக்கொண்டு சாகுபடி செய்து வந்தார்கள். அதைப்போலவே வைகைத் திட்டம் வந்தவுடன் அப்படி லீக்கேஜாக வரக்கூடிய தண்ணீர் எல்லாம் நின்று போய் விட்டது. அந்த அணைக் கட்டை அடைத்தவுடன் சுமார் 15 நாட்களுக்கு அல்லது ஒரு மாதத்திற்குத் தண்ணீர் வரக்கூடியது நின்று போய் விட்டது. அதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாமூலாகக் கிடைக்கக் கூடிய தண்ணீர் இப்பொழுது கிடைக்காமல் போய் விட்டது. அதனால் பல ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அணைக்கட்டை அடைத்தவுடன் கூட இன்னும் அதிகப்படியாக 15 நாட்களுக்கு அல்லது ஒரு மாதத்திற்குத் தண்ணீர் விடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள விவசாயிகளுடைய நிலைமையை அனுசரித்து அப்படித் தண்ணீர் கூட கொஞ்ச நாளைக்கு விடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைகை ஆற்றில் பானைப்பறி என்று மீன் குத்தகைக்கு விடுகிறார்கள். அதனால் ஆற்றில் வரக்கூடிய தண்ணீர் பெரிய அளவுக்குக் குறைந்து விடுகிறது. அதனால் அந்தத் தண்ணீரை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இது போன்று குத்தகைக்கு விடும் வழக்கத்தையே முற்றிலும் நிறுத்தி விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது கோவில் நிலங்கள், தர்ம ஸ்தாபன நிலங்கள் என்று இரண்டு விதமான நிலங்கள் இருக்கின்றன. சமீபத்தில் நிலங்களை வைத் துக்கொள்வதற்கு சீலிங் வைக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப் பொழுது கோவில் நிலங்களுக்கு சீலிங் வைப்பதிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கோவில் நிலங் களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை அரசாங் கத்தினிடம் இருக்கிறது. அதை இங்கேயும் ஸ்ட்ரிக்ட்டாக வைத்துக்கொள்ள வேண்டும். சர்க்காருடைய கொள்கையை அனுசரித்து கோவில் நிலங் களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் சீலிங் அமைப்பதில் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஸ்மால் லாண்ட் ஹோல்டிங்ஸ். சிறு நில சொந்தக் காரர்களுக்கும் சீலிங்கிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். சீலிங் அமைக்கப்படும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த அளவில் சீலிங் வைக்கப் போகிறார்கள் என்ற முறையில் இன்னும் ஒன்றும் தெரிவிக்கவில்லை. எவ்வளவு ஏக்கர் வரையில் விதிவிலக்கு என்பதும் இன்னும் தெரியாமல் இருக்கிறது. ஆகவே இவ்வளவு ஏக்கருக்கு மேல் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் சீலிங் அமைக்கப்படும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி சீக்கிரத்தில் தெளிவாகச் சொன்னால்தான் பல ஆயிரக்கணக்கான சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு அனுகூலமாக இருக் கும். ஐந்தாறு ஏக்கர் அல்லது ஒரு வேலி நிலம் 'வைத்திருக்கக்கூடிய வர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று சர்க்கார் தெரிவிக்க வேண்டும்.

அடுத்தபடியாக ப்ரொக்யூர்மெண்ட் சம்பந்தமாகச் சொல்லும்போது, இப் பொழுது 50 சத விகிதம் ப்ரொக்யூர் செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். பற்றுக்குறையாக இருக்கக்கூடிய ஜில்லாக்களில் 50 சத விகிதம் என்று வைத்திருப்பது அவ்வளவு சரியல்ல. உபரி ஜில்லாவாகிய தஞ்சை ஜில்லாவில் வேண்டுமானால் அப்படி வைத்துக்கொள்ளலாம். ஆனால் மதுரை ராமனாதபுரம் போன்ற பற்றுக்குறை ஜில்லாக்களில் 50 சத விகிதம் என்று இல்லாமல் 25 சத விகிதம் ஆக இருக்க வேண்டும்

என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நெல் வியாபாரிகள், ரைஸ் மில் சொந்ததக்காரர்கள் ப்ரொக்யூர் செய்து வருகிறார்கள். அவர்களும் இந்த அடிப்படையில் ப்ரொக்யூர் செய்தால் நலமாக இருக்கும். ஆகவே பற்றாக்குறை ஜில்லாக்களில், அதாவது மதுரை, ராமனாதபுரம் போன்ற ஜில்லாக்களில் 50 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

செகண்டரி க்ரேட் ஆசிரியர்களைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருகிறது. அவர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. இது சம்பந்தமாகத் தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை கவனித்து அவர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுடைய பென்ஷன் ரூல்கள் ஒரே மாதிரியாக இல்லை. அவைகளை ஒரே அடிப்படையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக "நான் டீச்சிங் ஸ்டாப்க்கு" கொடுக்கக்கூடிய சலுகைகளையும் இவர்களுக்கும் கொடுக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குமாஸ்தாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சலுகைகளை டீச்சர்களுக்கும் விஸ்தரிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எஸ்.ஈ.ஓ. சம்பந்தமாகச் சொல்லும்போது, அவர்களை நியமிக்கும்போது பயிற்சி பெற்ற திறமை வாய்ந்தவர்களை நியமிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் ஆசிரியர்களில் இரண்டு வித க்ரேடுகள் இருக்கின்றன. -ஸ்ட் க்ரேட் என்றும், செகண்ட் க்ரேட் என்றும் இருக்கின்றன. அதை ஒரே க்ரேடாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களிடையே எந்த விதமான பாகுபாடும் இருக்கக்கூடாது. பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்களுக்கும் பி.எ. பயிற்சி செய்யபெற்ற பி.டி. ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் போல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு செகண்டரி க்ரேட் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு முன்னதாக 73 ரூபாய் ஊதியம் வாங்கிக்கொண்டிருந்து விட்டு பயிற்சி பெற்றபின் அவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டால் அவருக்கு 61 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். பயிற்சி பெற்ற பிறகு அவர்களை ஆசிரியர்களாக நியமித்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் குறையாத அளவில் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த விதத்திலும் அவர்களுடைய ஊதியம் குறையக்கூடாது.

அடுத்தபடியாக சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக, நாட்டுச் செக்கு சம்பந்தமாக ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஓரளவு கணிசமான அளவில் கூட்டுறவு சொசைட்டிகள் மற்றும் 35, 40 அல்லது 50 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். இது போன்ற சலுகைகள் அதிகமாக விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : சட்ட மன்றத் தலைவர் அவர்களே இந்த விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினை அளித்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய சட்ட மன்றத்தின் காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்கள் நமது ராஜ்யத்திற்கு "தமிழ் நாடு" என்ற பெயரை வைக்க முடியாது என்று. சொன்னார். ஆனால் அதற்கு ஒரு செல்லப் பெயர் இருக்கிறது என்றும் சொன்னார். அந்தச் செல்லப் பெயர் எது என்று எனக்குத் தெரியாது. நான் அவரை செல்வமாக அழைக்க நினைத்தால் அவரை "மணி" என்று அழைப்பதா அல்லது "சுப்பு" என்று அழைப்பதா, அல்லது

" சுப்பணி " என்று அழைப்பதா என்று ஆராயவில்லை. தமிழ் நாடு என்று நம் நாட்டைக் கூறியிருக்கலாம். தமிழ் நாடு என்று சட்டப்படி வழங்கினால் நல்லது. இப்படிப்பட்ட ஒரு நல்லதோர் பெயரை வைக்காமல் அகில இந்திய அரங்கில் தமிழ் நாடு என்ற பெயர் இடம் பெறாமல் செய்யப் படுகிறது என்பதை மட்டு கனம் அமைச்சருக்கு தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அகில இந்திய அரங்கிலும் சரி, காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் சரி தமிழ் நாடு என்ற பெயரை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : காங்கிரஸ் ஸ்தாபனமோ அல்லது, இந்திய அரசாங்கமோ அப்படித் தீர்மானித்து விட்டார்களா என்பதை கனம் அமைச்சரைக் கேட்கிறேன். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தீர்மானித்தது மாதிரி எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதை நான் கேட்கிறேன். காங்கிரஸ் ஸ்தாபனம் ஏற்றுக்கொண்டதை இந்த நாடு ஏற்றுக்கொள்ளவில்லை, இந்த நாட்டு பொது மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை, மறுக்கிறார்கள் என்று தான் நான் சொல்லுகிறேன்.

இப்பொழுது நடைபெற்று வருகிற தேர்தலில் அந்த ஸ்தாபனம் வேறு கட்டத்தை அடைந்திருக்கிறது என்பதை நான் இப்பொழுது நினை வூட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே அகில இந்திய ஸ்தாபனம் அதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தாலும் சரி இந்த ஆட்சி அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டும் ஒன்று என்று சொல்லவில்லை. அவர்கள் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் ஒப்புக்கொண்டாலும் சரி ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி, அவர்கள் அதை இன்னொரு பக்கத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

SRI. K. ANBAZHAGAN : டில்லியில் இருக்கக்கூடிய ஆட்சி இந்நாட்டை தமிழ் நாடு என்று அழைக்க வேண்டும். அதே மாதிரி பாராளு மன்ற உறுப்பினர்களை தமிழ் நாடு உறுப்பினர்கள் என்று அழைக்கப்பட வேண்டும். இந்த மன்ற உறுப்பினர்களையும் தமிழ் நாட்டு உறுப்பினர்கள் என்று அழைக்கப்பட வேண்டும். சென்னை ராஜ்ய உறுப் பினர்கள் என்று அழைப்பது தமிழ் நாட்டிற்கு இழுக்கு ஆகும், ஒரு அநீதியுமாகும்.

இந்த அவையிலுள்ள அமைச்சர்கள் வெளியில் பேசும்போது ஜன நாயகத்திற்கு விரோதமாக பேசுகிறார்கள் என்று நான் முன்பே ஒரு தடவை நிதி விவாதத்தில் எடுத்துக்கூறியிருக்கிறேன். அதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள், கனம் அமைச்சர் பக்தவத்சலம் அப்படி பேச வில்லை என்று தெரிவித்தார். இரண்டொரு நாட்களுக்கு முன்னர் சில அமைச்சர்கள் பேசிய கருத்தை தெரிவித்தார்கள். ஒரு அமைச்சர் திருச்சியில் பேசிகிறபோது, அவரும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர், தெள்ளத் தெளிவாக பேசுகிற அமைச்சர், ஆத்திரத்திற்கு ஆட்படாத அமைச்சர், ஒரு கருத்தைத் தெரிவித்தார் திருச்சியில். திருச்சி நகரசபை தேர்தல் சம்பந்த மாகப் பேசும்போது, " நீங்கள் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்காமல் மாற்றுக் கட்சிகளுக்கு வாக்களித்தால் அடுத்த ஆண்டில் 48 லட்சம் ரூபாய் குடி தண்ணீருக்காக ஒதுக்கியிருப்பதை நீங்கள் ஸரண்டர் செய்ய வேண்டிய தாக இருக்கும் என்றும், அது செலவழிக்கப்பட மாட்டாது " என்றும் தெரிவித்திருக்கிறார். இதற்கு கனம் நிதி அமைச்சர் என்ன காரணம், என்றும் என்ன பதில் சொல்லப்போகிறாரோ என்பதை நான் அறிய மாட்டேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த அமைச்சர் யார் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

30th March 1959]

SRI K. ANBAZHAGAN : கனம் ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தான். அப்படி பேசியிருக்கிறார்.

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்கு நன்றாகப் பேசத் தெரியும். எனக்குச் சட்டம் தெரியும். சகல துறைகளிலும் எனக்கு நல்ல அனுபவம் நிறைய உண்டு. நான் சொன்னது "48 லட்சம் ரூபாய் குடி தண்ணீருக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள், நகர சபையில் பிளவு ஏற்பட்டால் அந்த ரூபாய் செலவு செய்ய முடியாமல் அது ஸரண்டர் செய்யப் பட்டு விடலாம், அதனால் நல்ல கட்சி ஸ்தாபனமாக இருந்தால் அதை ஸரண்டர் செய்ய விடாமல் செலவு செய்யப்படலாம், அதனால் நல்ல ஸ்தாபனம் ஆட்சிக்கு வரவேண்டும்" என்ற கருத்துப்படத்தான் நான் சொன்னேன்.

SRI K. ANBAZHAGAN : நான் எனது கருத்தைத் தெரிவிக்கிறேன். அதை ஏற்றுக்கொண்டாலும் சரி, அல்லது ஏற்றுக் கொள்ளா விட்டாலும் சரி, அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. நகர சபை தேர்தல் நேரத்தில் ஆட்சி பீடத்திலுள்ள அமைச்சர்கள் இம்மாதிரி தலையிட்டு இம்மாதிரி பேசினால் ஜனநாயகம் தவறப்படத்தான் செய்யும்.

கடந்த பொதுத்தேர்தல் காலத்திலேயே இந்தக் கருத்தைத் தெரிவித்தேன். "பொதுத்தேர்தல் அரசியல் அடிப்படையில் நடைபெறுவது. அமைச்சர்கள் தங்கள் கட்சி அடிப்படையில் ஈடுபடுகிறார்கள்" என்று சொல்லலாம். ஆனால் அமைச்சர்கள் நகராட்சி மன்றத் தேர்தல் கூட்டங்களில் நேரடியாகக் கலந்து கொள்ளுவது அவ்வளவு நல்லதல்ல. அப்படி ஈடுபட்டாலும் கூட மக்களை மிரட்டுவது காலத்திற்கேற்றதல்ல. நான் "அப்படி மிரட்டினார்" என்று கனம் வெங்கட்ராமனை மட்டும் குற்றம் சாட்டவில்லை. முதலமைச்சர் காமராஜரும் பேசியிருக்கிறார். சென்னையில் ஒரு தொகுதியில் பேசியிருக்கிறார். அவர் பேசும்போது "இந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் ஆளும் கட்சிக்கு எதிராகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்தால் குடி தண்ணீருக்குக் கூடத் திண்டாடுவீர்கள்" என்று பேசியிருக்கிறார். முதலமைச்சராக இருப்பவர் இவ்வாறு பேசியிருக்கிறார் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். நீங்கள் முடிந்தால் அப்படிச் செய்து பாருங்கள். இந்த அமைச்சர்களுக்குக் தண்ணீர் கிடைக்கிறதா என்று எங்களால் பார்க்க முடியும். இப்படி இந்த நாட்டு மக்களை மிரட்டி ஓட்டு வாங்காதீர்கள். காங்கிரஸ் கட்சி எவ்வளவோ தொண்டு செய்திருப்பதை எடுத்துச் சொல்லுங்கள். "எங்களிடத்தில்தான் தொண்டு செய்யத் தகுதியுள்ளவர்கள் இருக்கிறார்கள்" என்று சொல்லுங்கள். ஆனால் மக்களைப் பார்த்து, வரி கொடுக்கின்ற மக்களைப் பார்த்து, அரசாங்கத்தோடு நேரிடை விரோதம் எதுவும் இல்லாத மக்களைப் பார்த்து "உங்களுக்குக் குடிதண்ணீர் கூட கிடைக்காதபடி செய்துவிடுவோம்" என்று பொதுமக்களை மிரட்டுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது, அவ்வாறு சொல்லுவது நல்லதல்ல என்று கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட போக்கு எல்லாத் துறையிலும் வளரவேண்டுமென்று நிதியமைச்சர் அவர்கள் சட்ட மன்றத் தலைவர் அவர்கள் விரும்புகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அமைச்சர்கள் பேசும்போது ஒரளவு அளவோடு

SRI V. SANKARAN : (on a point of order Sir, சபையில் இல்லாத மெம்பரைப் பற்றிக் குற்றம் சாட்டுகிற முறையில் இங்கே பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : It is not a point of order.

SRI K. ANBAZHAGAN : நிதியமைச்சர் அவர்கள் "குற்றம் நிறையச் சாட்டட்டும்" என்று சொல்லுகிறார்கள். குற்றம் சாட்டுவதற்காகப் பேசவில்லை. குற்றம் சாட்டுவது மட்டும் என் நோக்கமல்ல. குற்றமான காரியத்தில் ஈடு படாதீர்கள் என்று சொல்லுகிறேனே

தவிர வேறொன்றுமில்லை. தவறான முறையில் பொதுமக்களை மிரட்டாதீர்கள். நகராட்சி மன்றத் தேர்தல் கூட்டங்களில் எதையெதைச் செய்ய முடியும் என்று சொல்லி ஆசை காட்டுங்கள். இன்னும் வேகமாக இத்தனை காரியங்களைச் செய்யப்போகிறோம் என்று சொல்லுங்கள். "இன்னும் பள்ளிக்கூடங்களைக் கட்டப் போகிறோம்; 30 கக்கூஸ்களை ஏற்படுத்தப் போகிறோம்; குடி தண்ணீர் வசதியை மேலும் விஸ்தரிக்கப்போகிறோம்" என்று நீங்கள் ஆசை காட்டினால் கூட வருத்தப்படமாட்டேன். ஆனால் பொதுமக்களைப் பார்த்து, வரி கொடுக்கின்ற பொது மக்களைப் பார்த்து "உங்களுக்குக் கிடைத்திருக்கிற வசதியைக் கூட கிடைக்காமல் செய்து விடுவோம்" என்று சொல்லுவது ஜனநாயகப் பண்பாடாகாது. காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகார மனப்பான்மையைத் தான் காட்டுகிறது. அந்த மனப்பான்மையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல், அழுகுகின்ற பொருள்களுக்கு வரி போடவேண்டாமென்று சொல்லுகிற கருத்து இன்றையதினம் சொல்லப்படுவதல்ல. நிதி நிலை அறிக்கை விவாதித்தின்போது "கருணைக் கிழங்குக்காவது கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்று ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சிலர் சொன்னார்கள். உருளைக்கிழங்கு பற்றியும் அப்படிச் சொன்னார்கள். பொதுவாக எல்லா உணவுப் பொருள்களைப் பற்றியும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணா அவர்கள் பேசும் போது "இந்த உணவுப் பண்டங்களுக்கு வரி போடாதீர்கள். அவ்வாறு நீங்கள் இந்த உணவுப் பண்டங்களுக்கு வரிபோடாமல் இருந்தால் ஏழை மக்கள் ஒவ்வொரு கவளம் உணவைச் சாப்பிடும்போதும் 'வாழ்க சுப்பிரமணியம்' என்று வாழ்த்திக் கொண்டே சாப்பிடுவார்கள்" என்று சொன்னார்கள். என்றாலும் வரி போட்டிருக்கிறீர்கள். இந்த நேரத்தில் அந்த வரி தவறு என்பதையும் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். "இப்பொழுது 25,000 ரூபாய்க்கு மேல் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. அதை 50,000 ஆக உயர்த்தக் கூடாதா? 30,000-க்கு வரி என்பதை 60,000 ஆக உயர்த்தக் கூடாதா?" என்று கேட்ட நேரத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் நல்ல விற்பன்னர், பேசப்படுகிற கருத்தைப் புரிந்து கொண்டு பேசும் ஆற்றல் படைத்தவர்—"நீங்கள்தான் இறைச்சி வியாபாரம் செய்யச் சொன்னீர்கள். இப்பொழுது கூடையை எடுத்துத் தலையில் வைக்கிற நேரத்தில் தட்டிவிடப் பார்க்கிறீர்கள்" என்று கூறினார்கள். நான் தெரிவித்துக்கொள்வேன். "இண்டஸ்ட்ரியல்"—பெரும் தொழில்கள் என்ற முறையில்

The Hon. Sri R. VENKATARAMAN: ஒரே ஒரு வார்த்தை. தப்பாகப் பேசுவதனால் திருத்தவேண்டியிருக்கிறது. மீனும் முட்டையும் விற்கமுடியுமா என்று கேட்டதற்கு "இது விற்க முடியாதா?" என்று சொன்னேன்.

Sri K. ANBAZHAGAN: பண்டங்களை விற்பதற்கும் தயாரிப்பதற்கும் வேற்றுமை உண்டு. பெரிய அளவில் உற்பத்தி செய்ய வேண்டியது சர்க்காருடைய கடமை. அவ்வாறு தயாரிக்கப்பட்டவைகளை ஆங்காங்கு விற்பவர்கள் சிறு வியாபாரிகள். "அந்தச் சிறு வியாபாரிகள் செய்யக்கூடிய காரியத்தைதான் நாங்கள் செய்வோம்" என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் தாராளமாக அந்த வேலையைச் செய்யட்டும். மக்களுடைய சாதாரணத் தேவையை நிறைவேற்றக்கூடிய தொழில்களைச் செய்த முறையில் அரசாங்கம் மட்டும் ஏற்று நடத்தக்கூடிய பெரும் தொழில்களைச் செய்வது மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது. அந்தப் பெரிய காரியத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். "மிகச் சாதாரணமான காரியத்தை நாங்கள் செய்கிறோம். வேலை நிறுத்தம் என்ற நேரத்தில் சமாளிப்பதற்காகச் செய்கிறோம்" என்று பேசுவது சாதாரணமானவர்கள், சாமானியர்கள் செய்கிற காரியத்தை ஏற்று நடத்துகிறோம் என்று. ஒரு தொழில் அமைச்சர் பேசுவது "கூட்டுறவுத் தொழிற்சாலைகளை நாமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கடமையை மறந்து

30th March 1959] [Sri K. Anbazhagan]

விட்டுப் பேசுவதாகும். அறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சபையில் "பெரிய அளவில் இறைச்சித் தொழிலையும், மீன் பிடிக்கும் தொழிலையும் நடத்தவேண்டுமென்றுதான் குறிப்பிட்டார்களே தவிர சிறு வியாபாரத்தில் சமானியர்கள் செய்கிற வியாபாரத்தில் போட்டியிடவேண்டுமென்று தெரிவிக்கவில்லை. இந்த அவைக்கு நல்ல பெயர் ஏற்படவேண்டுமானால் அழுகும் பொருள்களுக்கு, ஒரு நாளைக்கு மேல் தாங்காத பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டும். அந்த வரியிலிருந்து கிடைக்கும் பணத்தைத் திரட்டி பெரிய காரியத்தைச் சாதித்துவிடப் போவதில்லை. இதில் அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல் இந்த நாட்டிலே உள்ள பிற்பட்ட மாணவர்களுக்கு, ஆதித்திராவிட மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிற உதவி நிதி கிடைக்க நீண்ட தாமதமாகிறது. ஏறத்தாழ ஜூலை மாதத்தில் மாணவர்கள் சேருகிறார்கள். மார்ச் மாதத்தில் தான் அவர்களுக்கு இந்த உதவி நிதி போய்ச் சேருகிறது. இந்த அளவுக்குக் காலதாமதம் ஏற்படுமானால் படிக்கக்கூடிய மாணவர்கள் மாதந்தோறும் கடன் வாங்கிப் பணம் கட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிற காரணத்தினால் அவர்கள் படிப்பில் முழு அளவு ஈடுபட முடிவதில்லை. பிற்பட்ட மாணவர்கள் படிப்பில் முன்னேற வேண்டுமானால் அந்தப் பிற்பட்ட மாணவர்களுக்குக் காலத்தில் அந்த உதவித் தொகை கிடைக்கத் தக்க திட்டமிடவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த ஆண்டு பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் சென்ற ஆண்டுகளில் இருந்ததை விட மூன்று மடங்கு அதிகமாக விண்ணப்பித்திருக்கிறார்கள். ஒரு மடங்கு மாணவர்களுக்கே உதவி செய்ய முடியாத நிலைமையில் இன்னும் இரண்டு மடங்கு மாணவர்களுக்கு எப்படி உதவி செய்வது என்று கையை விரிக்காமல் அந்தப் பரிதாபத்துக்குரிய மாணவர்களின் எண்ணிக்கை வளரும்போது எப்படியாவது நிதி கண்டுபிடித்து எல்லா மாணவர்களுக்கும், அல்லது பெரும்பான்மையான மாணவர்களுக்காவது இந்த நிதி உதவி கிடைக்கும்படியான வழியை அரசாங்கம் வகுத்துத் தரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

நம்முடைய சென்னை நகரத்தில் டாக்சி ட்ரைவர்களைப் பொறுத்தவரை ஏதோ ஒரு சிலர் வேண்டுமானால் குறையுடையவர்களாக இருக்கலாம்— பெரும்பாலோர் பண்புள்ளவர்கள்தான். அப்படிப்பட்ட ட்ரைவர்களில் யாராவது ஒரிருவர் தவறு செய்தால் போலீசார் அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர அளவுக்கு மீறி கடுமையான. அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது. அவ்வாறு கடுமையான முறையில் நடத்துகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அவ்வாறு கடுமையான நடவடிக்கை எடுத்ததன் விளைவு கடுமையாகி இன்றைய தினம் பெரிய வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் இலாகா அமைச்சர் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த மாதிரி கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஆணையிடவேண்டும். ஏதாவது தவறு செய்தால் முறைப்படி வழக்கு வேண்டுமானால் தொடரலாமே தவிர, அவர்களைக் கடுமையான முறையில் நடத்துவதும் அடிப்பதும் நல்லதல்ல என்ற அறிவுரையைச் சொல்ல விரும்புகிறேன். அதிலும் ஒரு வாரம் மரியாதை வாரம் கடைப்பிடிக்கிற அவர்கள் மிச்சமிருக்கும் 51 வாரங்களில் மரியாதையைப் பற்றி மறந்துவிடுகிறார்கள். அந்த மிச்சமிருக்கும் 51 வாரங்களிலும் அவர்களுக்கு மரியாதையைப் பற்றி நினைவூட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளைப் பற்றி எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிக் கவனித்து எந்த வித வாக்குறுதியும் வழங்கவில்லை. குறிப்பாகக் கர்ணங்கள், வெட்டியான், தலையாரி போன்றவர்கள் மிகக் குறைந்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுடைய குறை

களைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கத்தின் பல்வேறு இலாகாகளில் வேலை பார்க்கும் கடைநிலை ஊழியர்களின் வேலை நேரம் அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது வழிவகை செய்தாகவேண்டும். "கண்டின்ஜண்ட் ஸ்டாப்"—தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் என்று வேலை பார்த்தும் அவர்கள் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. அவ்வாறு நிரந்தரமாக்கப்படாததன் காரணமாக ஏழெட்டு ஆண்டுக் காலம் வேலை பார்த்தவர்கள் பெரும் வேதனைப்படுகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11-30 a.m. அடுத்தாற்போல அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது தமிழ் நாட்டில் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டோம். நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களே கிடையாது என்று சொல்லி வருகிறார். இன்னும் கட்ட வேண்டிய திட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. கோதாவரி கிருஷ்ணா திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டியவர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் ஓடுகிற ஆற்றுத் தண்ணீர் இந்தப்பக்கம் வரும்படியாக வழிதேடித் தரவேண்டியவர்கள் செய்து முடிக்கவேண்டியது ஒன்றுமே இல்லையென்று பொதுமக்களிடத்தில் மறைக்கக் கூடாது. செட்டி நாட்டு முத்தையா அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருவது போல ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாவில் கட்டப்பட வேண்டிய சிறுசிறு அணைகள் நிறைய இருக்கின்றன. காவேரிலிருந்து வெட்டப்படவேண்டிய கால்வாய்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு "அண்ணாதுரை வீட்டுக்கா அணைகட்டுவது" என்ற கேள்வியை எழுப்பாமல், இன்னும் அங்கங்கே செய்து தரப்படவேண்டிய வேலைகள் என்ன என்ன என்பதைத் துருவி ஆராய்ந்து மக்களுக்குச் செய்து தருகிறோம் என்று சொல்லுங்கள். இனி முடிக்கவேண்டியது ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் முடித்து விட்டோம். நாங்களும் முடியப்போகிறோம் என்று பொதுமக்களிடத்தில் சொல்ல வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரு படி 12 அணா என்று அரிசி விற்பது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகாது, 13 அணாவாகவாவது உயர்த்தி தரவேண்டும் என்று பேசினார்கள். சாதாரண ஏழை பாட்டாளி மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய அரிசிக்கு 12 அணாவுக்குமேல் விலை ஏறுவது என்பது நல்லது அல்ல. விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமானால் அவர்களுக்குத்தேவையான எண்ணெயோ, பிண்ணாக்கோ குறைந்தவிலையில் அவர்களுக்குக் கிடைப்பதற்கு திட்டமிட்டு, கூட்டுறவு பார்மிங் கொண்டுவரப் போவதாகப் பெருமை பேசுகின்ற இவர்கள்—வழிவகை செய்து தர வேண்டுமே தவிர அரிசி விலையை 12 அணாவுக்கு மேலும் உயர்த்துவது பொதுமக்களைப் பாதிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கடைசீ வேண்டுகோள் நிதி அமைச்சர் அவர்கள் நல்லதொரு ஜன நாயகப்பண்பாட்டை இந்த நாட்டில் நிலை நிறுத்தவேண்டும் என்று விரும்பினால் அமைச்சர் அவை தவறான முறையில் இறங்காதிருக்கும்படி கவனிக்கவேண்டும். அந்த ஆட்சியின் பெயரால் எதிர்க்கட்சியும் தவறாத நிலையில் மக்களுக்குப் பயன் ஏற்படும் நிலையை சிருஷ்டிக்கவேண்டும். அமைச்சர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றாவிட்டால் ஜன நாயகம் அவர்களைக் காப்பாற்றாது என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(Sri M. R. Kandaswami Mudaliyar rose.)

DEPUTY SPEAKER : I cannot allow any point of personal explanation. The hon. Member Sri Anbazhagan has not mentioned anything about the hon. Member Sri Kandaswami. The hon. Leader of the Opposition will speak now.

30th March 1959]

* **SRI. M. R. KANDASWAMI MUDALIYAR : On a point of order. Sir.** அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் அடிக்கடி போவதாகச் சொன்னார்கள். இவர்கள் பொதுமக்களிடத்தில் இருந்து 150 ரூபாய் வாங்கிக்கொண்டு பேசப் போவது சர்வாதிகாரம் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : It is not a point of order. The hon. the Leader of the Opposition will speak now.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Deputy Speaker, Sir, even though all the hon. Members who took part in the Budget discussions covered almost all the subjects and gave many valuable suggestions, nothing happens. This is so every year. Probably these suggestions are put in cold-storage and many of the papers in regard to these do not see the light of day for a number of years. This is a very sorry state of affairs. I would request the Hon. Ministers to see that the suggestions that are made by the hon. Members on the floor of the House are implemented as early as possible. I would even suggest that in certain cases a reply also may be sent to the individual Members who raised those important issues during the Budget discussions.

Sir, the cost of living index is going up day by day and the Government have not come forward to bring down the prices of essential articles especially articles of consumption excepting perhaps paddy. There are ever so many other consumable articles and daily necessaries and unless the Government take steps to bring down the prices of those essential articles, there will be no salvation to the public and there will be heart-burning everywhere.

Sir, we have been hearing of hartals and strikes in recent years too frequently and for the past four or five days merchants dealing in perishable articles are also on strike. On account of this strike the public are put to lot of inconvenience. I would request the Hon Minister-in-charge of Industries to send for these people and settle the whole thing amicably and mitigate the sufferings of the general public. Unless something is done in this direction, I am afraid there will be lot of trouble both from the consumers and the producers.

Sir, the Departments of Government are growing up every day. Overnight posts are created and appointments are made mostly gazetted appointments but still we find there is lot of red-tapism and delay in each and every department with the result that nothing tangible happens. We also find that moneys allotted to the various departments are not spent in time. There have been many lapses and rush of expenditure in the month of March. This is all due to, I am afraid, want of supervision and scrutiny. Many minor irrigation works have not also been taken up. With a view to stepping up food production especially in the dry districts something must be done immediately to repair the minor irrigation tanks and unless this is done food production cannot be stepped up.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [30th March 1959

Sir, the Panchayat Bill was passed some months back. The district boards in so many districts are not functioning properly. I would request the Hon. Minister to bring into force the provisions contained in the Panchayat Bill and see to the formation of these Panchayat Unions as early as possible and abolish the district boards gradually. This should be taken up immediately as delay means danger.

With regard to the composition of several Committees, I am given to understand that Government are going to constitute a Committee shortly for eliciting information from all sections of the House regarding the framing of the Third Five-Year Plan. I am really pleased to note that and I am sure the Hon. Minister will constitute that committee very soon and do something tangible.

Regarding the constitution of the other committees also, such as committee for selection of candidates for the Arts colleges, Technical colleges and Block Advisory committee, I would request the Hon. Minister to take the Opposition into confidence and see that the members belonging to the opposition parties are put into them. I would like to have a categorical statement from the Hon. the Leader of the House in this regard when he replies to this debate.

With regard to the implementation of the provisions of the Agricultural Income-tax Act, we find even within such a short time after the passing of the Act so much of trouble arising, on account of the lanunae in the Act in the actual implementation of the Act with the result that there is so much heart-burning among the ryots. Many of them are not in a position to full up the huge volume of printed forms containing as many as 10 to 15 pages. I would request the Hon. Minister to personally look into this matter and see that the form is simplified to make it as easy as possible for the ryots to fill up those forms. Unless this is done there will be so much of persecution and harassment by officials.

Another point which I wish to emphasise is this. We find all the departments are developing, expanding and so far as the Secretariat is concerned there are at least half a dozen Assistant Secretaries in every Department and another quarter dozen Deputy Secretaries. But in the Finance Department there is only one Assistant Secretary and one Deputy Secretary. Presumably therefore the proposals are not properly scrutinized in the Finance Department and for want of staff they are not doing their work efficiently. This department should be expanded. Otherwise the impression will be created in the minds of the public that the Finance Department does not want to take up responsibility with regard to the scrutiny of the accounts of the various departments. This also seems to be the reason for the present huge expansion in other departments and that is why the expenditure is mounting up in all sectors. We should not be penny wise and found foolish. We should see that the Finance department is expanded as much as possible so that it can exercise strict watch and control over the other department so far as the expenditure side is concerned. I am

30th March 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

also given to understand that with regard to certain percentage of items, orders are obtained by circulation, from the Hon. Minister without sending the proposals to the Finance Department. I do not know how far it is true. I am sure the Hon. Minister will kindly clarify all these points.

Sir, I also understand that there are so many irregularities with regard to the appointment of Gazetted Officers under the control of the Finance Department itself and the advices of the Public Service Commission and the Secretary of the Public Department are being ignored.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have some information about it.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I would give it secretly.

I am sure, the Hon. Minister for Finance who is an expert financier and who has been in-charge of this portfolio for the last seven or eight years will carefully look into these things and see that something is done.

We find that on most occasions, more expenditure on staff than schemes has been incurred without benefiting the villagers for whom they are intended. That is the position.

My another submission is that I have been stating, with due respect to the Department, on the floor of this House that generally as a matter of policy no Secretary can continue in a particular department for more than three years. Even though I have got the greatest respect for the Secretary of this Department who is one of the most efficient Secretaries, it does not mean that other departments should not have the benefit of his advice and experience and it is for the Hon. Minister to consider this aspect of the matter also. Unless there is a proper scrutiny from the Finance department, no department can function well.

Sir, many hon. Members have also referred to the matter and I also wish to emphasise it over and over again. There has been such a lot of delay. The administration is top-heavy and full of superannuated officers and frustrated and disappointed young officers, most of whom are temporary. It is only a centralized administration based on secret police and ordinances. The police force, as I have been pointing out on the floor of this House, especially at the lower level is highly corrupt and inefficient and it is being used for political purposes by the Party in power. So, my submission is that the whole police force should be reorganised and the police administration should be run on efficient lines, and so also other departments. Unless the Government are run on efficient lines, no Government can thrive for a long time. So, the administration must be efficient and delays should be avoided in all respects. Unless the petitions containing so many grievances

from the public are looked into now and then and immediate disposal is given to them, there will be no salvation. Sir, the whole country is burning but the Hon. Ministers are fiddling at some function or other without knowing what is happening in the country and without, in the least, realising their responsibilities to the public. Sir, this is all my submission.

The Hon. Sri C. SUBRAMANIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். இந்த மசோதா வரும்போது எந்தமுறையிலே விவாதம் இருக்கவேண்டும் என்பதுபற்றி முன்பு ஒரு தடவை என் கருத்தை தெரிவித்திருக்கிறேன். வரவு செலவு திட்டத்தின் மீது விவாதம் நடந்து, அதன் பிற்பாடு மான்யக் கோரிக்கை மீது விவாதம் நடந்து, பிற்பாடு நிதி ஒதுக்கும் இந்த மசோதா வந்திருக்கிறது. இதன் மீது நடந்த ஒவ்வொரு விவாதத்தின்போதும் பல அங்கத்தினர்கள் பொதுவான கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். சில அங்கத்தினர்கள் இந்த விவாதத்திலே தங்களுடைய தொகுதியிலுள்ள குறைகளையும், பல கோரிக்கைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளுக்கு பதில் சொல்வது முடியாது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல அங்கத்தினர்கள் வருடா வருடம் இந்த சபையில் எடுத்துச்சொல்லப்படுகிற குறைகளையே எடுத்துச்சொல்லி, அவைகளை சர்க்கார் இன்னும் தீர்த்து வைக்கவில்லை, அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நாம் இன்றைக்கு இருக்கக்கூடிய காலம் மிகவும் சிக்கலான இடைக்காலம் என்பது என்னுடைய கருத்து. மக்கள் தங்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று இருந்த காலம் வேறு. இன்றைக்கு சுதந்திரம் பெற்ற பிறகு தங்கள் உரிமைகளை உணர்ந்து அவரவர்களின் தேவைகளைத் தெரிந்துக்கொண்டு அவைகள் பூர்த்தியாக வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் மக்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய சக்தி நமக்கு ஏற்படவில்லை. இருந்தாலும் இன்றைக்கு பல திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். ஆகையால் இந்த இடைக்காலத்தில் மக்களுக்கு குறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அவைகளைத் தீர்ப்பதற்கு சர்க்கார் எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றன என்பதை வலியுறுத்தவிரும்புகிறேன். அந்தக் குறைகளை உடனடியாக நீக்குவதில் ஏற்படக்கூடிய சிரமங்களை அங்கத்தினர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஸ்ரீ அன்பழகன் அவர்கள் ஜனநாயகத்தை வலியுறுத்தி ஜனநாயகப்பண்மையும் நிலை நாட்டுவதற்கு பல அறிய யோசனைகளை சொன்னார்கள். ஆனால் அந்த அறிய யோசனைகளை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது அதில் சில தவறுகள் வந்துவிட்டதோ என்று சில சந்தேகங்கள் ஏற்படுகிறது. அந்த யோசனைகளை ஆதரிப்பதற்கு என்ன காரணம் இருந்தாலும் அதைப்பற்றி ஆராய்வதற்கு அவசியம் இல்லை. ஆனால் அவர்களைவிட ஜன நாயகத்தைக் காப்பதிலும்,ஜனநாயக பண்பை வளர்ப்பதிலும் அதிக ஆர்வம் இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஜனநாயகப்பண்பிற்கு அடிப்படையான விஷயம் என்னவென்றால் நாம் ஒரு விஷயத்தில் நல்ல விதத்தில் ஒரு முடிவை எடுத்துக்கொண்டு அந்த முடிவை நிறைவேற்றுவதற்கு நாம் பாடுபடாவிட்டாலும் அதற்கு மத்தியில் வந்து அந்த முடிவுக்கு மேலும் பல சங்கடங்கள் ஏற்படக்கூடிய முறையில் நடந்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதுதான் ஜனநாயகப் பண்பு. ஆகவே எங்கள் அரசியல் காரணத்திற்காக அதைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த முடிவிற்கு பல சங்கடங்களை ஏற்படுத்த முயற்சிப்பது எவ்வளவு தூரம் ஜனநாயகத்திற்கு பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை. அதேகோணத்தில்தான் நாம் காய்கறி வியாபாரிகள் நடத்தும் ஹர்த்தாலை

30th March 1959] [Sri C. Subramaniam]

நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இது ஒரு புதிய விஷயம் அல்ல. இந்த காய்கறியினுள்ள விற்பனை வரியை பல வருஷங்களுக்கு முன்னால் நமது அரசாங்கம் எடுத்துவிட்டது. பிற்பாடு ஒரு இன்வெஸ்டிகேஷன் பாடி இந்த விஷயத்தை பரிசீலனை செய்தது. எல்லா கட்டங்களிலும் வரிகள் விதிப்பதை நீக்கிவிட்டு இப்பொழுது ஒரு கட்டத்தில் மட்டும் 30 ஆயிரத்திற்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள் இன்கம்டாக்ஸ் கொடுப்பவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள்தான் ஒரு கட்டத்தில் இந்த வரியைக் கொடுக்கவேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறோம். அப்படியிருந்தும் அந்த வியாபாரிகள் ஒரு முடிவை எடுத்து ஹர்த்தால் அனுஷ்டித்து வருகிறார்கள். பல வியாபாரிகள் என்னை வந்து பார்த்தார்கள். அதற்கு நான் இப்பொழுது ஒரு கட்டத்தில்தான் இந்த வரி போடப்பட்டுகிறது. அதுவும் 30 ஆயிரத்திற்கு மேல் வருமானவரி கட்டிக்கொண்டு கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள் தான் இந்த வரியைச் செலுத்தவேண்டும். அந்தத் தொகைக்கு கீழ் வியாபாரம் செய்கிறவர்கள் இந்த வரியைக் கொடுக்கவேண்டியதில்லை. ஆகையால் இந்த வரி எவ்வாறு பாதிக்கிறது என்று ஒரு வருஷம் பாருங்கள். இதில் கஷ்டங்கள் ஏற்பட்டால் அந்த விதியை மாற்றுவதற்கோ அல்லது வேறு வகையில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்கார் பிறகு யோசிக்கும். ஆகவே ஒரு வருஷம் அமைதியாக இருங்கள் என்று நான் சொன்னேன். நான் மட்டும் சொல்லவில்லை. இந்த இலாகாவிற்கு பொறுப்பான மந்திரி அவர்களும், முதல் மந்திரி அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் அவர்களுக்குச் சொல்லியிருந்த போதிலும்கூட இன்று வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்றால், உண்மையாகவே ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும்? தவறாக நடந்து கொள்பவர்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு தவறாக நடப்பவர்களை இன்னும் தூண்டிவிடுவது சரியல்ல. சூழ்நிலையை சர்க்காருக்கு எதிராகவும் தங்கள் கட்சிக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் யாராவது முயற்சி செய்தால் அது தான் ஜனநாயகத்தை படுகுழியில் தள்ளுவதற்கான முயற்சி என்று ஸ்ரீ அன்பழகன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கை தட்டல்) டாக்ஸி ட்ரைவர் ஏதோ தப்புச் செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார். அது ஒரு புறமிருக்க, டாக்சி ட்ரைவர் இறந்துபோய் விட்டார் என்று, நேற்று இரவு நடந்த ஒரு தேர்தல் கூட்டத்திலேயே அறிவித்து, அதன் மூலம் , அந்தக் கூட்டத்தில் இருந்த ஜனங்களையெல்லாம் ராயப்பேட்டைக்கு அனுப்பிக் கலகம் செய்யத் தூண்டிவிட்டதாகக் கேள்விப் பட்டேன்.

SRI K. ANBAZHAGAN : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நேற்று இரவு நடந்த ஒரு தொழிற் சங்கக் கூட்டத்தில் டாக்சி டிரைவர் இறந்துபோய்விட்டதாக அறிவிக்கப்பட்டது என்று கனம் அமைச்சர் சொல்கிறார். அந்தத் தொழிற் சங்கம் எந்தக் கட்சியைச் சார்ந்தது என்று கனம் அமைச்சர் சொல்வாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தேர்தல் கூட்டத்தில் என்று நான் சொன்னேன். அது தொழிற் சங்கக் கூட்டம் அல்ல.

SRI A. GOVINDASAMY : எந்தக் கட்சியின் தேர்தல் கூட்டத்தில் ?

SRI K. ANBAZHAGAN : எந்தக் கட்சியின் தேர்தல் கூட்டத்தில் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யார் கேட்கிறார்களோ அவர்கள் கட்சியின் தேர்தல் கூட்டத்தில்தான். எதிர்க் கட்சியினர் அவ்வாறு செய்வது சரியல்ல. அவ்வாறு அங்கே அறிவித்துவிட்டு இங்கே வந்து ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினால் அதைப் பற்றி என்ன நினைப்பது ?

SRI M. P. SUBRAMANIAM : Sir, I rise on a point of order.

DEPUTY SPEAKER : Let me hear the point of order.

SRI M. P. SUBRAMANIAM : ஒரு தனிப்பட்ட கனம் அங்கத்தினர் இங்கே பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்போது கனம் அமைச்சர், அந்த கனம் அங்கத்தினர் ஏதோ ஒரு கூட்டத்தில் டாக்சி டிரைவரைப் பற்றிப் பேசியதாகக் குறிப்பிடுகிறார். கனம் அமைச்சர், அவர் எந்த இடத்தில் பேசினார் என்று குறிப்பிட வேண்டாமா ? அப்படியின்றி, அவ்வாறு பொதுப்படையாகப் பேசுவதுதான் ஜனநாயக முறையா ?

DEPUTY SPEAKER : There is no point of order in this.

SRI A. GOVINDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது டாக்சி டிரைவரைக் குறித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்தான் இவ்வாறு தூண்டிவிட்டார் என்று இங்கே பேசுவது முறையா ?

DEPUTY SPEAKER : I am sorry the Hon. Minister has not said anything about the Dravida Munnetra Kazhagam.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கட்சிதான் செய்தது என்று நான் எந்தக் கட்சியின் பெயரையும் குறிப்பிடவில்லை. ஒரு தேர்தல் கூட்டத்தில் இவ்வாறு அறிவிக்கப்பட்டது என்றுதான் சொன்னேன். ஆனால் 'டிரைவரைக் கொன்றுவிட்டார்கள்.' என்று அறிவித்து அதன் மூலம் அவர்களை ராயப்பேட்டைக்குச் செல்ல வைத்து அங்கே கலகம் செய்யத் தூண்டினார்கள் என்ற தகவல் எனக்கு சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் வந்திருக்கிறது. ஆகவே சர்க்காருக்கு இவ்வாறு சங்கடங்களை விளைவித்து தங்கள் கட்சியின் நலன்களைப் பேணலாம் என்பதிலேயே சில எதிர்க்கட்சிகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. சர்க்காருக்கு சங்கடம் விளைவித்தும், சர்க்காருக்கு சங்கடம் விளைவிக்க மக்களைத் தூண்டிவிட்டும் வந்தால் நாட்டில் ஜனநாயகப் பண்பு வளராது, ஜனநாயகம் தழைத்தோங்க முடியாது.

அதற்கடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னத்துரை தொழிலாளர்களைப் பற்றிப் பேசினார். சில பிரச்னைகளைப் பற்றியும், தொழிலாளர்கள் பிரச்னைகளைப் பற்றியும் நன்றாக விவாதித்துவிட்டோம். அவைகள் ஒவ்வொன்றுக்கும் நான்கு மணி நேரம் ஒதுக்கி வைத்து அவைகளைப் பற்றி விவாதித்திருக்கிறோம். இப்போது ஒரு சில முக்கியமான விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தொழில் கோர்ட்டுகள் கொடுக்கும் தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டு அவைகளின்படி நடக்க வேண்டுமென்ற மனப்பான்மை முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஒரு தரப்பினர் நடந்துகொள்ளாமல் இருந்தாலும், அவர்கள் மற்றொரு தரப்பினருக்கும், அவ்வாறு நடந்து கொள்வதற்கு இடம் கொடுத்தவர்கள் ஆவார்கள். ஆகையால்தான் இந்த விஷயத்தில் இரு தரப்பினரும் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தங்களுக்குச் சாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி, இரு தரப்பினரும் தொழில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளை ஏற்று நடக்க வேண்டும். தங்களுக்குப் பாதகமாக இருக்கும்போது அதை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது என்ற வழக்கத்தை ஒரு தரப்பினர் கடைப்பிடித்தால் மற்றொரு தரப்பினரும் "நமக்கு சாதகமாக இருக்கும்போது தீர்ப்பை ஏற்றுக்கொள்ளலாம், தீர்ப்பு நமக்கு பாதகமாக இருந்தால் ஏற்றுக்கொள்ளாமல் இருந்துவிடலாம் போல் இருக்கிறது என்று நினைத்து அவ்வாறு செயல்பட முற்படுவார்கள். ஆகவே தொழில் கோர்ட்டுகளின் தீர்ப்புகள் எப்படி இருந்தாலும் அவைகளை ஏற்று நடக்க வேண்டுமென்று, தொழிலாளிகள், முதலாளிகள் ஆகிய இரு தரப்பினரையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சட்ட அடிப்படையில் கொடுக்கப்படும் தீர்ப்புகளை ஏற்று நடக்கும் சூழ்நிலைகளை உண்டாக்கினால்தான் எல்லாப் பிரச்னைகளும் சுமுகமாகவும், நன்றாகவும் தீரும். நாட்டில் தொழில்கள் வளர வேண்டுமானால், சட்ட ரீதியான சில நடவடிக்கைகளை அரசாங்கம்

30th March 1959] [Sri C. Subramaniam]

மேற்கொள்ளத்தான் வேண்டும்; சட்ட ரீதியான பாதுகாப்புகளை முதலாளிகளுக்கு அளிக்கத்தான் வேண்டும். அந்த முறையில் சில பாதுகாப்புகளை அவர்களுக்கு நாங்கள் அளித்துவருகிறோம். அவ்வளவுதான். நாங்கள் முதலாளிகளுக்கோ வேறு யாருக்குமோ அஞ்சவில்லை. இன்று காங்கிரஸை யார் எதிர்க்கின்றனர் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறோம் என்பதை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நாட்டின் தொழில் வளமும், பொருளாதாரமும் பெருக வேண்டுமானால், நாங்கள் முதலாளிகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்புகளையும் உதவிகளையும் அளிக்க வேண்டியிருக்கிறது. அவைகளைத்தான் அளித்துவருகிறோம். சட்ட ரீதியான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள சர்க்கார் தயங்காது. இந்த சர்க்கார் யாருக்கும் பயப்படவில்லை. எனவே இந்த சர்க்கார் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கிறது என்று சொன்னால் அது சரியல்ல. (குறுக்கீடு) ஒரு குறிப்பிட்ட கம்பெனித் தொழிலாளர்களின் பிரச்னை முக்கியமானது என்றால், அது விவாதிக்கப்பட்ட இடத்தில் தொழிலாளர்களின் தலைவர்கள் இருந்து பிரச்னையை விளக்கியிருக்க வேண்டும். எப்போதோ எங்கேயோ நடந்த ஒரு தகராறைப் பற்றிப் பேசி 'பதில் சொல்லுங்கள்' என்று சொன்னால் நான் உடனே எப்படி பதில் சொல்ல முடியும்? எல்லாவற்றையும் பார்த்துத்தான் பதில் சொல்ல முடியுமே தவிர, உடனடியாகப் பதில் சொல்ல முடியாது. அல்லது என் சகாதான் பதில் சொல்ல முடியுமே தவிர நான் பதில் சொல்ல முடியாது. பல தொழில்களும் தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன என்றும் அவைகளை ஏன் சர்க்கார் எடுத்து நடத்தக்கூடாது என்றும் கூறப்பட்டது? லாபகரமான தொழில்களையே சர்க்கார் எடுத்து நடத்த முடியும். மோசமாக இருக்கும் தொழில்களை எப்படி சர்க்கார் எடுத்து நடத்த முடியும்? பல தொழில்கள் மூடப்படுகின்றன என்று ஸ்ரீ கோதண்டராமன் சொன்னார். எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று அவர் விவரக் கணக்கிட்டுப் பார்த்திருக்கிறார் என்று தெரியவில்லை. நம் ராஜ்யத்தில் மூடப்பட்டிருக்கும் நூற்பு ஆலைகள் இரண்டு அல்லது மூன்றாகத்தான் இருக்கும். இப்போதுள்ள சூழ்நிலையில் அவைகளை யார் எடுத்து நடத்தினாலும் லாபமடைய முடியாது.

SRI V. K. KOTHANDARAMAN : Tanneries நூற்றுக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன.

THE HON. SRI C. SUBRAMANIAM : டானெரீஸையும், திருவான்மியூரையும் சம்பந்தப்படுத்தி கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் பேசினார். இந்த விளையாட்டில் தயவு செய்து இறங்க வேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் முஸ்லீம்கள் பிரச்னையோ, வேறு பிரச்னையோ இல்லை. இது தொழில் பிரச்னை. அங்கே முஸ்லீம்கள் நூறு பேர்கள் இருக்கின்றனர் என்றெல்லாம் பேசுவதானது அவர் கட்சியின் கொள்கைக்கே அபாயமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல், இந்த மாதிரி முஸ்லீம்கள் பிரச்னை என்றோ, கிறிஸ்தவர்கள் பிரச்னை என்றோ, மைனாரிடிப் பிரச்னை என்றோ அவர் பேசமாட்டார் என்று நம்புகிறேன். இது தொழில் பிரச்னை. எனவே அங்கே முஸ்லீம்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதால் அவர்களைப் பாகுபடுத்தி வைக்க வேண்டுமென்ற நோக்கம் எதுவும் இதில் இல்லை. (ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் எழுந்து நின்றார்).

DEPUTY SPEAKER : The Hon. Minister is not yielding.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் பேசி முடித்த பிறகு, கனம் அங்கத்தினர் தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லலாம். நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், யார் எந்த மதத்தினராக இருந் தாலும், யார் எந்த வகுப்பினராக இருந்தாலும், எல்லோருக்கும் நியாயம் வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இங்கே நிர்வாகம் நடந்து வருகிறது என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். மற்றப்படி, இங்கே நிர்வாக காரியங்களில் தாமதம்

ஏற்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒரு குற்றம் கூட இல்லாமல் எல்லாம் மிகவும் சரியாக நடக்கின்றது என்று நான் சொல்லவில்லை. ராஜ்யம் இன்னும் முன்னேறுவதற்கு இடம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இவ்வாறு இடம் இருப்பது எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கும்.

12 noon. ஆகவே, தொழில் பிரச்னைகள், ஜாதி அல்லது மத அடிப்படையில் கவனிக்கப்படுகிறது என்று சொன்னால் அரசியலில் ஒரு சிலரின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் அந்த குறுகிய நோக்கத்தோடு தான் இம்மாதிரி பெரிய பிரச்சினைகளைக் கொண்டுவந்து குழப்புவது மிகப் பெரிய தவறாகும் என்பதை அங்கத்தினர் அவர்கள் உணரவேண்டும். இன்று முக்கியமாக நான் சொல்ல, வலியுறுத்த விரும்புவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைய இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. இந்த இரண்டு வருடத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படி நாம் நல்ல முறையில் நடத்த நமது ராஜ்யத்தின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும், எப்படி அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

(Mr. Speaker in the Chair.)

அதை நல்ல முறையில், மக்களுக்குத் திருப்திகரமான முறையில், அதனால் நாம் நல்ல அளவிற்கு முன்னேற்றம் அடைய முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடையே ஊட்டத் தக்க அளவிற்கு அந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டியது நம் முன்னால் உள்ள பெரும் கடமைகளுள் ஒன்றாக இருக்கிறது. குறைகள் ஏற்படுவதற்கான முக்கியமான காரணம் என்ன? என்பதை நாம் ஆராய வேண்டும். குறைகள், நமக்குள்ளே பல்வேறு பொருளாதார பலஹீனத்தால்தான் ஏற்படுகிறது, குறைகள் ஏற்படக் கூடாது என்று நினைத்தாலும் அது ஏற்படுகிறது. ஆகவே, இன்று பொருளாதார அமைப்பை பலப்படுத்துவதினால்தான் குறைகளை நீக்க முடியும் என்பதை நாம் உணர வேண்டியிருக்கிறது. இன்று நம் நாட்டில் பல தொழில்கள் ஏற்பட வேண்டுமென்று இருக்கும் போது, அவைகள் தனியார் துறையில் ஏற்பட்டாலும் சரி அல்லது சர்க்காரே ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி அந்தத் தொழில்கள் நல்ல முறையில் நடப்பதற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது அவசியம். நல்லதொரு சூழ்நிலை, தகுந்த சூழ்நிலை இல்லாவிடில் தொழில்கள் நன்கு நடக்க முடியாது. ஆகவே, தொழில்கள் அதிகமாக வளர வேண்டுமென்று நினைக்கும்போது, அதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப் பட வேண்டும். ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல புதிய தொழில்கள் வர வேண்டுமென்று நினைக்கும்போது அந்தத் தொழில்கள் எந்த அடிப்படையில் ஏற்பட வேண்டும், எந்த அடிப்படையில் அவைகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஆலோசித்து, தனியார் துறையில் இருந்தாலும் சரி, அல்லது சர்க்கார் துறையில் இருந்தாலும் சரி, அமைதியான ஒரு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கும்போதுதான் அவைகளை ஏற்படுத்த முடியுமே தவிர குழப்பமான நிலை இருந்தால் புதுத் தொழிற்சாலைகள் பெரிய அளவில் இங்கு அமைவது கஷ்டம். ஆகவே, நல்லதொரு சூழ்நிலையை, புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள இன்னும் பாக்கி இரண்டு ஆண்டுகள் எப்படி நடக்கிறது என்று தெரிந்துகொள்ளவும், அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படி உருவாக்க வேண்டுமென்று நிர்ணயிக்கவும் இங்குள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்த்து ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்ற கருத்தை நான் இங்குள்ள எதிர்க் கட்சித் தலைவர்களிடமும் மற்றவர்களிடமும் வெளியிட்டேன். எல்லாக் கட்சிகளையும் ஒன்றாகக் கூட்டி, கட்சி பேதம் இல்லாமல் நமது ராஜ்யத்திற்கு எது நல்லது, நம் ராஜ்யத்திலுள்ள பல்வேறு இயற்கை சௌகரியங்களையும், வேறு சௌகரியங்களையும், பொருள் சௌகரியங்களையும் நல்ல முறையில்

30th March 1959] [Sri C. Subramaniam]

பயன்படுத்தி, எல்லோரும் உட்கார்ந்து ஆலோசனை செய்து எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நிலை ஏற்படாவிட்டாலும் பெருவாரியானவர்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு நிலை ஏற்படும் என்று கருதித்தான் ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று கேட்டேன். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒப்புக்கொள்ளுவார் என்று நினைக்கிறேன். மற்றக் கட்சித் தலைவர்கள் அதை வரவேற்றிருக்கிறார்கள். எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும், இன்னும் வேறு சில அங்கத்தினர்களையும் கொண்டதொரு கமிட்டியாக அது இருக்கும். இந்த சபையிலுள்ள 15 அங்கத்தினர்களும், மேல் சபையிலுள்ள 5 அங்கத்தினர்களும் ஆக 20 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமிக்கலாம் என்று நான் கருதுகிறேன். யார் யாரைப் போடவேண்டுமென்பது பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களைக் கலந்து போட்டு கூடிய சீக்கிரத்தில் இந்தக் கமிட்டி நியமிப்பது பற்றி அறிக்கை வெளியிடுவதற்கு முயற்சி செய்கிறேன் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கமிட்டி, எப்படி, எந்த முறையில் பணியாற்ற வேண்டுமென்று அந்தக் கமிட்டியே முடிவு செய்யலாம். அந்தக் கமிட்டி பரிசீலனை செய்வதற்காக வெவ்வேறு "வொர்க்கிங் க்ரூப்ஸ்", ஆபீஸர்களையும், நிபுணர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை ஒவ்வொரு பகுதிக்கும் நியமிக்க வேண்டியதாக இருக்கும். இப்பொழுது விவசாயம் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டால் கால்நடை இலாகா, காட்டு வளம் போன்றவைகளைக் கணிப்பதற்கு ஒரு கமிட்டி. அந்தக் கமிட்டிகளின் அதிகாரிகள், நிபுணர்கள் போன்றவர்கள் ஆலோசித்து இந்தத் துறையில் எப்படிக் காரியங்கள் செய்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி ஏற்படும் என்று ஆலோசித்து அதற்குரிய திட்டமிட்டு நன்கு பரிசீலனை செய்து ஒரு அறிக்கை தயாரித்தால், அந்த அறிக்கையை இந்தக் கமிட்டி பிற்பாடு பரிசீலனை செய்ய முடியும். முழுக் கமிட்டியே பரிசீலனை செய்வதற்குப் பதிலாக இதில் கூட உப கமிட்டிகள் போட்டு பிற்பாடு அந்த அறிக்கை முழுக் கமிட்டிக்கு முன்னால் வந்து பரிசீலனை செய்யலாம் என்ற முறையில் எல்லாம் ஏற்பாடு செய்ய முடியும். இவைகள் எப்படி எப்படி வேலை செய்ய வேண்டுமென்பதைப் பற்றி இந்தக் கமிட்டியே முடிவு செய்யலாம். ஆக, இந்த அடிப்படையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நினைக்க வேண்டும், அதைப் பற்றிய கடைசி முடிவுகள் எடுக்க வேண்டுமென்று சர்க்கார் கருதுகிறது. ஆக, மற்ற குழப்பங்கள் எப்படியிருந்தாலும் சரி, முனிசிபல் தேர்தல்கள், மற்ற காரியங்கள் எப்படி இருந்தாலும், இந்த மூன்றாவதுத் திட்டம் உருவாக்குவதில் ஒன்றுபட்ட கருத்து ஏற்பட வேண்டும். அதில் எல்லோருடையவும் முழு ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். எங்கேயோ நடக்கிற சிறிய விஷயங்களை வைத்துக் கொண்டு ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்துவது நல்லதல்ல. ஆக, இந்த முறையில் ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து, இன்னும் ஒரு ஆண்டுக்குள்ளாக நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், அகில இந்திய திட்டத்திற்குட்பட்டதாக, நமது ராஜ்ய திட்டம் எப்படி இருக்கவேண்டுமென்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த முடிவு நல்ல முடிவாக ஏற்பட்டு, நல்ல திட்டங்கள் அமைந்து, அக்கமிட்டி நம் நாடு நல்லபடி முன்னேறிச் செல்ல உதவும் என்று நம்புகின்றேன். அடுத்தபடியாக, கன்னியாகுமரியில் உள்ள சில விஷயங்களைப் பற்றி டானியல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் முக்கியமாக ஆசிரியர்களின் குறைகளைப் பற்றிக் கூறினார்கள். கன்னியாகுமரி இன்னொரு ராஜ்யத்திலிருந்து நம்மோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அங்கு சில உத்தியோகஸ்தர்களுக்கு இங்கிருப்பதை விட அதிக சம்பளமும் சில உத்தியோகங்களுக்கு இங்கு இருப்பதைவிட குறைந்த சம்பளமும் இருக்கின்றன. அங்கு அதிக சம்பளம் இருந்தால் அதைக் குறைக்கக் கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அது எங்கள் உரிமை என்று கேட்கிறார்கள். ஆனால் குறைவாக இருந்தால் மற்ற இடங்களில் என்ன சம்பளம் வாங்குகிறார்களோ அந்த உத்தியோகத்திற்கு அதை உடனடியாக கொடுக்க வேண்டுமென்ற முறையில் கேட்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. இன்றைக்கு இங்குள்ள உத்தியோகஸ்தர்களோடு அங்கு இருப்பவர்களை இணைக்கும்போது அவர்களின் "ஸீனியாரிட்டியை" நிர்ணயிக்கவேண்டி இருக்கிறது. பின்னால் உத்தியோக உயர்வு வரும்போது இந்த ஸீனி

[Sri C. Subramaniam] [30th March 1959

யாரிட்டியை அனுசரித்துச் செய்யவேண்டும். ஆகவே, இதை எப்படி நிர்ணயிப்பது என்று பெரிய பிரச்னையாக அமைந்திருக்கிறது. சம்பளம் கொடுப்பது மட்டுமல்ல பிரச்னை, சம்பளம் கொஞ்சம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது ஒரு பக்கமிருக்க, கன்னியாகுமரியிலுள்ள அதிகாரியை இங்குள்ள அதிகாரிகளோடு இணைக்கும்போது அவர்களை எந்த இடத்தில் இணைப்பது என்பது பற்றி முடிவு செய்வது சிக்கலான பிரச்னை. இங்குள்ளவர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும், அங்குள்ளவர்களுக்கும் நியாயம் செலுத்துவதாக இருக்க வேண்டும். இதில்தான் பிரச்னை இருக்கிறது. இதற்கு கேரள சர்க்காரிடமிருந்து நமக்கு பல புள்ளி விவரங்கள் கிடைக்க வேண்டியிருக்கிறது. அப்படி அவை கிடைக்காத வரை இந்த இணைப்பை ஏற்படுத்துவது கஷ்டமாக இருக்கிறது. இன்று இணைக்கப்படாத இலாகாக்களில், புள்ளி விவரம் கிடைக்காதிருப்பதால் எந்த இடங்களில் இணைக்கவேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆனால், துரிதமாக இந்த இணைப்பைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துவரப்படுகிறது. மே மாதக் கடைசிக்குள் இந்த இணைப்பு முழுவதும் முடிந்துவிடுமென்று நான் எதிர்பார்க்கிறேன். இதில் செகண்டரி கிரேட் டீச்சேர்ஸ், எலிமெண்டரி கிரேட் டீச்சேர்ஸாக தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. இங்கு எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு இரண்டு வருடங்கள் பயிற்சி வைத்திருக்கிறோம். ஆனால் அங்கு பயிற்சி ஒரு வருஷத்திற்குத்தான். இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களையும், ஒரு வருஷம் பயிற்சி பெற்றவர்களையும் ஒரே தரத்தில் வைக்க முடியுமா ? அப்படி வைத்து அங்கு எட்டு வருடம் வேலை செய்தவர்களை இங்கு ஏழு வருடம், 11 மாதம் வேலை செய்தவர்களுக்கு மேல் வைத்துவிட முடியுமா என்று யோசிக்கவேண்டி இருக்கிறது. அங்கு ஒரு வருடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய பாட திட்டத்தையும், இங்குள்ள இரண்டு வருடங்கள் சொல்லிக் கொடுக்கக் கூடிய பாட திட்டத்தையும் பார்த்துவிட்டு இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியாதென்று கல்வி நிபுணர்கள் அந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு வருடம் பயிற்சி பெற்றவர்களையும், இரண்டு வருடங்கள் பயிற்சி பெற்றவர்களையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்பது ஒத்துக்கொள்ள முடியாத நிலையாக இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் ஜனவரி 23-ம் தேதி ஒரு உத்திரவு போடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை எடுத்துச் சொன்னால் அதை மறுபடியும் பரிசீலனை செய்யத் தயார். ஆனால் இப்போதைய புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மீண்டும் பரிசீலனை செய்வதற்கு ஏதாவது விஷயம் இருக்குமானால் அப்படிச் செய்வதற்கு எந்த விதமான கஷ்டமும் இருக்காது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே மாதிரிதான் பென்ஷன் ஸ்கீம் இன்னும் கன்னியாகுமரியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வரவில்லை என்பது பற்றிச் சொன்னார்கள். ஆம், வரவில்லை. அதற்குக் காரணம் இந்த இணைப்பு இன்னும் ஏற்படாததுதான். இணைப்பு ஏற்பட்டவுடன் இங்கு இருக்கும் ஆசிரியர்கள் என்னென்ன வசதிகள் பெற்றிருக்கிறார்களோ அந்த வசதிகளெல்லாம் கன்னியாகுமரி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும், சம்பள உயர்வும் கிடைத்துவிடும். மற்றவர்களைவிட அங்கே இப்பொழுது அதிகமாகச் சம்பளம் வாங்கக் கூடியவர்களின் சம்பளத்தை குறைக்கப்போவதில்லை. சம்பளம் குறைவாக இருக்கக் கூடியவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சிக்கல் இருக்கிற காரணத்தினால்தான், உடனடியாக முடிவு எடுக்க முடியவில்லை.

அதற்குப் பிற்பாடு நல்லசிவம் அவர்கள் லோயர் பவானியைப் பற்றிச் சொன்னார்கள். அவரைப் பற்றி ஒரு நல்ல சமாசாரத்தை இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது நல்லசிவம் அவர்கள் லோயர் பவானி பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளுவது கொஞ்சம் குறைந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். நானும், கக்கன் அவர்களும் நேரிடையாகச் சென்று பார்த்து, அது பற்றி ஒரு சில முடிவுகள் எடுக்கப்பட்டு, ஓரளவுக்கு திருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. குறைகளும், கஷ்டங்களும்

30th March 1959] [Sri C. Subramaniam]

முழுவதும் தீர்ந்துவிட்டது என்று நான் சொல்லுவதற்குத் தயாராக இல்லை. நாங்கள் எடுத்த முடிவுகளின் விளைவாக இன்னும் சில கஷ்டங்கள் கூட தோன்றலாம் என்று நினைக்கிறேன். அந்தக் கஷ்டங்கள் தோன்றும்போது அவைகளை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். லோயர் பவானியைப் பொறுத்த வரையில் அங்கு இருக்கும் பல கஷ்டங்களை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு, ஓரளவுக்கு இதில் வெற்றியும் கண்டிருக்கிறோம். நல்லசிவம் அவர்கள் 3, 4 வருஷங்களாக இது பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேனே ஏன் அதை உடனடியாகத தீர்க்கவில்லை, இதில் என்னவோ சமாசாரம் இருக்கிறது என்று சொல்லி அரசியலுக்கு பயன்படுத்திக்கொள்ளுவார்கள். ஆனால், அதிலே இருக்கக் கூடிய கஷ்டம் என்னவென்றால், கால்வாயில் முழு அளவுக்கு தண்ணீர் விடப்பட்ட பிற்பாடுதான், எந்த அளவுக்குத் தண்ணீர் பெற முடியும். எந்தெந்த இடத்திலே தண்ணீரினால் உரம் ஏற்பட்டு, அதை உரம்பு நிலம் என்று ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது பற்றி எல்லாம் தெரிந்துகொள்ள முடியும். முழு அளவு தண்ணீர் இந்த வருஷம்தான் விடப்பட்டது. புதிய கால்வாயில் ஒரேயடியாக தண்ணீர் விட்டுவிட்டால் கரையெல்லாம் உடைந்துவிடும். ஆகையினால், கால்வாசி, அரைவாசி, முக்கால் வாசி இப்படி படிப்படியாகத் அதிகத் தண்ணீர் விட்டு, இந்த ஆண்டு முழு அளவுக்கு, முழு அளவுக்கு மேலும் கூட தண்ணீர் விட்டு, நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ளுவதற்கு இந்த ஆண்டில்தான் வாய்ப்பு ஏற்பட்டது. நேரில் சென்று நிலைமையைப் பரிசீலனை செய்து, எந்த அளவுக்கு உடனடியாகக் கஷ்டங்களை நீக்க முடியுமோ அந்த அளவுக்கு நீக்கியிருக்கிறோம். இன்னும் சில நாட்கள் தண்ணீர் விட வேண்டும். விடாமல் நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். மார்ச் 15–தேதி வரையில் தான் தண்ணீர் விடுவதற்கு திட்டம் இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் பயிர் செய்ய வேண்டும் என்று முன்பே சொல்லப்பட்டிருந்தும், அணைக்கட்டில் தண்ணீர் இருக்கும் காரணத்தினால் மேலும் 10 நாட்களுக்கு தண்ணீர் விடப்பட்டது. இந்த வருஷம் தண்ணீர் தட்டு இருக்கிறது. இரண்டாம் போகத்திற்கு மார்ச் 15–ம் தேதிக்குப் பிறகு தண்ணீர் கொடுப்பது கஷ்டம். ஆதலால் விவசாயிகள் ஜாக்கிரதையாக தண்ணீர் தட்டு இருந்தாலும் எந்தப் பயிர் விளையுமோ அதைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்று நோட்டீஸ் மூலமாகவும், தண்டோரா மூலமாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், அதற்கு மேலேயே 10 நாட்களுக்கு தண்ணீர் விட்டு, பிறகு அணைக்கட்டில் தண்ணீர் இல்லாததால் தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ தண்ணீரை யாருக்கும் பயன்படாத வகையில் நிறுத்தி வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படும்படிச் செய்திருக்கிறார்கள் என்று நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அம்மாதிரி அவர்கள் நினைப்பது தவறு. மேலும் 10 நாட்களுக்கு தண்ணீர் கொடுத்தது பற்றி அங்கே மக்களுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் 10 நாட்களுக்குக் கொடுக்கக் கூடாதா, 15 நாட்களுக்குக் கொடுக்கக் கூடாதா என்று பிரசாரம் செய்யும்பொழுது, மக்களுக்கும் திருப்தி எப்பொழுதும் ஏற்படுவதில்லை, மேலும் 10 நாட்களுக்கு கொடுத்திருக்கலாமே என்று அதிருப்தி அடைகிறார்கள். ஆனால் அங்கு இருக்கக் கூடிய நிலைமை என்னவென்றால் மேலும் 10 நாட்களுக்கு விடப்பட்ட பிறகு அணைக்கட்டில் தண்ணீர் இல்லாததால் தண்ணீர் நிறுத்தப்பட்டது. அதற்கு பிற்பாடு அங்கே நானும் முதல் அமைச்சர் அவர்களும் நேரில் போய்ப் பார்த்திருக்கிறோம். நாங்கள் பார்த்த வரையில், கேட்டுத் தெரிந்துகொண்ட வரையில், பயிர்கள் அவ்வளவு மோசமாக இல்லை என்றுதான் தெரிகிறது. விளைச்சல் வந்துவிடும் என்று அங்கு இருக்கக் கூடிய குடியானவர்களே சொல்லுகிறார்கள். நல்லசிவம் அவர்கள் வேறு விதமாக நினைக்கிறார்களோ என்னவோ, அது பற்றி தெரியாது.

கடைசியாக கல்வி ஸ்தாபனங்களுக்கு மாணவர்களைப் பொறுக்கி எடுப்பதற்கு எந்த முறையில் கமிட்டிகள் நியமிக்கப்படும் என்பது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இது பற்றி ஏப்ரல் 7–ம் தேதி நடக்க இருக்கும கல்வி ஆலோசனைக் குழுவில் பரிசீலனை செய்யலாம்.

பொலிடிகல் பார்டீஸ் அண்டு ஸ்டூடெண்ட்ஸ் என்பது பற்றியும் ஸ்ரீ வி. கே. ராமசுவாமி முதலியார் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் எழுதி இருக்கிறார்கள். இதை எல்லாம் 7-ம் தேதி நடக்கப்போகும் கல்வி ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் பரிசீலனை செய்யலாம். (குறுக்கீடு) 8-ம் தேதி தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழுவின் கூட்டம். ஏழாம் தேதி கூட்டத்திற்கு நோட்டீஸ் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஏழாம் தேதி நடக்கப்போகும் கல்வி ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில், இது பற்றி பரிசீலனை செய்து, அங்கு என்ன முடிவு செய்கிறோமோ அந்த முடிவை ஏற்றுக்கொண்டு, அதை நிறைவேற்றுவதற்கு நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அது பற்றி இங்கே தனியாக விவாதம் வைத்துக் கொள்ளாமல், ஆலோசனைக் குழுவில் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கிறேன்.

(திரு. க. அன்பழகன் எழுந்திருந்தார்.)

MR. SPEAKER: I cannot allow any more interruptions. It is already 12-15.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த மசோதாவை அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுக்கு இருக்கக் கூடிய திறமை அளவுக்கு, இருக்கக் கூடிய அறிவை வைத்துக்கொண்டு, எந்த அளவுக்கு எங்களால் தமிழ் நாட்டிற்கு நல்லது செய்ய முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அதுவும் குறைவு என்று சொன்னால், எங்களுக்கு இருக்கக்கூடிய திறமை அவ்வளவுதான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். எங்களுக்கு இப் பொழுது ஆளும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வாய்ப்பு மற்றவர்களுக்கு ஏற்பட்டால் அவர்கள் எங்களை விட திறமையாகச் செய்யக் கூடியவர்களாக இருக்கலாம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இப்பொழுது எங்களுக்கு அந்த பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய திறமை அளவுக்கு அறிவு அளவுக்கு, ஆற்றல் அளவுக்கு நாங்கள் எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்வதற்கு முயற்சி செய்வோம் என்ற உறுதியைச் சொல்லிக்கொள்ள முடியுமே தவிர, எங்களுக்கும் மீறின அளவில் காரியங்களைச் செய்ய முடியாது. அம்மாதிரி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் சொன்னாலும் எங்கள் திறமைக்கு மீறின காரியங்களைச் செய்ய முடியாது. எங்களால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்கிறோம் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: On a point of order, Sir. கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, அழுகக் கூடிய பொருள்கள் வியாபாரிகள் போராட்டம் நடைபெறக் கூடிய இந்த நேரத்தில், முனிசிபல் தேர்தல்கள் நடைபெறுவதால் வோட்டுகள் பெறுவதற்கு வேண்டித்தான் அந்த போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது அவர்களுடைய கருத்தாக இருக்கலாம். அந்தப் போராட்டம் நியாயம் என்பதற்காகத்தான் நாங்கள் அதை ஆதரிக்கிறோம், நியாயம் இல்லை, நீங்கள் ஆதரிக்கக் கூடாது என்றுசொன்னால், அது ரைட்.........

MR. SPEAKER: Point of order என்ன வென்று தெரியவில்லை. The hon. Member may say the point of order first.

SRI V. K. KOTHANDARAMAN: நான் விளக்கிச் சொல்லுகிறேன். பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது.

MR. SPEAKER: முதலிலே பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

30th March 1959]

Sri V. K. KOTHANDARAMAN : மந்திரி அவர்கள் இப்படிச் சொல்லக் கூடிய நேரத்தில், கார்ப்பரேஷன் மேயர் தலைமையில்......

Sri R. SRINIVASA IYER : Sir, when the Speaker is standing, can the hon. Member continue to stand and speak ?

Mr. SPEAKER : Will the hon. Member (Sri Kothandaraman) pl ase sit down or not ?

பாயின்ட் ஆப் ஆர்டரை முதலில் சொல்லுங்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது, சொல்லுகிறேன்.

Mr. SPEAKER : அதை முதலிலே சொல்லுங்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : கார்ப்பரேஷன் மேயர் தலைமையின் கீழே இருக்கக் கூடிய சென்னை நகர சபையில் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே ? நகரசபை தேர்தல் நடக்கக் கூடிய நேரத்தில் அதற்கு ஆதரவு பிடிக்கக்கூடிய அளவுக்கு அம்மாதிரி செய்யப்பட்டது உண்மைதானா ? அல்லது மந்திரி அவர்கள் சொன்னது உண்மையா ? ஆதரவு பிடிக்க வேண்டுமென்பதற்காக........

Mr. SPEAKER : இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகும் ? கார்ப்பரேஷனில் நடந்ததற்கும், இங்கு நடந்ததற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ?

Sri V. K. KOTHANDARAMAN : எதிர் கட்சியைச் சொல்லுகின்ற நேரத்தில்.........

Sri N. R. THIAGARAJAN : அழுகல் பேச்சு பேசுகிறார்கள்....

Sri V. K. KOTHANDARAMAN : இருக்கிற உண்மையை நான் கூறுகிறேன். கேட்பதற்குத் தயாராக இல்லையென்றால்.......

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களுக்கு இதிலே கோபம் ஏன் வரவேண்டும் என்று தெரியவில்லை. கோபப்படாதீர்கள்.

Sri N. R. THIAGARAJAN : இவர்கள் அழுகிறார்கள்.

Mr. SPEAKER : Order, order. The hon. Member cannot make a second speech.

Sri V. K. KOTHANDARAMAN : நான் அழவில்லை. இவர்தான் ஆத்திரப்பட்டுப் பேசுகிறார்.

Mr. SPEAKER : Whatever it is, I disallow the point of order. Is it all right now. Can I proceed now? Let us have order in the House.

The question is—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1959 (L.A. Bill No. 5 of 1959), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That the Madras Appropriation (No. 2) Bill, 1959 (L.A. Bill No. 5 of 1959), be passed.

MR. SPEAKER : The question is—

That the Madras Appropriation (No. 2) Bill, 1959 (L.A. Bill No. 5 of 1959), be passed.

The motion was put and carried and the Bill was passed.

X.—STATEMENT *re*: DISTURBANCES AT ROYAPETTAH ON 28TH MARCH 1959.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : At about 4-45 p.m. on 28th March 1959, Traffic Sergeant H. Ramakrishnan stopped Baby Taxi MSX 774 near the Royapetta Plice Station as he found the driver Abdul Rahim, aged 44 years, driving without a head-dress. As the driver behaved in an unruly manner (he threw the Driving Licence on the bonnet of the Taxi) when asked to produce his driving licence and badge, the Sergeant arrested him under Section 75 of the City Police Act and took him to Royapetta Police Station. The driver was later released at 5-05 p.m. on bail being offered by Sri R. Srinivasan, President of the Taxi Drivers' Association. The driver alleged that he was wearing his head-dress and that he was severely manhandled by the Sergeant. He was taken to the General Hospital for medical examination by the Police. The news of this alleged assault soon got round and all taxis and autorickshaws in the city staged a lightning strike by abandoning their vehicles on both sides of the road. Some of the taxis carrying passengers also dropped the passengers and fell in line with other taxis. In the meanwhile the Union Office bearers having visited the General Hospital and seeing that the Driver was alright met me, i.e., the Commissioner of Police and requested disciplinary action to be taken against the Sergeant. As a matter of fact there was no external injury on the taxi driver, but as he complained of pain in the back he has been detained in the General Hospital for taking an X-ray photograph. On my (i.e., the Police Commissioner's) assurance that necessary action would be taken, the office bearers directed all the taxi drivers to remove the taxis to their respective sheds and by about 8 p.m. all the taxis and autorickshaws which were parked on both sides of the road left the place.

The three occupants of the taxi were Sri M. K. Sankaran, Senior Clerk in the Office of the Regional Director of Food, Sri T. R. Kasinathan, Upper Division Clerk in the Office of the Accountant-General, Madras and Sri M. K. Ramamurthy, a Student in

30th March 1959] [Sri M. Bhaktavatsalam]

the Final Honours (Economics) of Vivekananda College. These three persons have testified that the taxi driver was without his head dress at the time he was checked by the Sergeant and that he threw the driving licence on the bonnet of the taxi. These independent witnesses thus corroborated the version of the Traffic Sergeant. The taxi driver for his part has stated that he has no witnesses to support his allegation.

At about 9 p.m. a crowd of about 200 persons approached the Royapettah Police Station from the North shouting anti-police and anti-Government slogans and demanding the Traffic Sergeant to be handed over to them. It would appear that this crowd came from Srinivasapuram Second Street, where an election meeting to canvass support for the Communist candidate was being held and at which a reference was made to the alleged assault on the taxi driver by the Police and the driver's condition was reported to be very critical. The speakers at that meeting are reported to have incited the crowd against the Royapettah Police. The Inspector of Police, Mylapore Division, informed the Officers about the collection of the crowd in front of the Police Station. The Assistant Commissioner arrived at the Police Station at 9-30 p.m. The crowd had by then swelled to about 500. The Deputy Commissioner of Police, Law and Order, also immediately arrived at the spot with reinforcements. The road was completely blocked and traffic was brought to a stand-still. Stones and soda water bottles were pelted at passing vehicles and also on the Police vehicles stationed in front of the Police Station. A few tiles on the Police Station and the name board were damaged. The Deputy Commissioner declared the crowd 'unlawful' and direct it to disperse by means of megaphones. The crowd refused to disperse and more stones were thrown. A warning was issued that tear gas will be used. In spite of it the crowd advanced from the main road and through the side lanes throwing more stones and soda water bottles. Four tear gas shells were fired on Royapettah High Road and in the adjoining lanes. In spite of it the crowd continued to advance. As the direction of the wind was not favourable more tear gas could not be used and the crowd was again warned that if they failed to disperse they would be lathi-charged. As this warning did not have the desired effect a lathi-charge was ordered and the crowd soon scattered in all directions and the situation was brought under control. The crowd consisted mostly of unruly and unsocial elements who had attended certain election meetings near-by and were indulging in anti-Government and anti-Police slogans.

A case in Royapettah Police Station crime No. 198/59, Sections 147, 332 and 323, I.P.C., has been registered and is under investigation. Seventy-two persons who indulged in hooliganism mentioned above have been arrested so far. Two Sergeants and four Police Constables were injured as a result of stone throwing and 13 persons among the accused received simple injuries as a result of the lathi-charge.

[Sri M. Bhaktavatsalam] [30th March 1959

The Taxi Drivers' and Auto-Rickshaw Drivers' Associations held a meeting at the Old Congress Maidan between 11-30 p.m. and 12-30 a.m. at which the speakers deplored the action of the Police in assaulting the taxi driver and expressed confidence in the Police Commissioner, who had promised to take necessary action in the matter, and directed the drivers to continue their strike till 6 p.m. on 29th March 1959, which guidance by the Union is ununderstandable.

,The situation is under control and no further incidents were reported. Necessary precautionary measures have been taken.

In respect of the traffic infringements by the Taxi Driver, he will be prosecuted in Court. As regards the alleged assault by the Sergeant inside the Police Station, he was placed under suspension on the morning of 29th March 1959 pending a full enquiry into the matter. And an enquiry by the Deputy Commissioner, Traffic, is being held.

The Taxi Drivers' and Auto-Rickshaw Drivers' Associatons held a meeting on 29th March 1959 evening and decided to resume work to-day. Accordingly, all taxis and auto-rickshaws are plying in the City this morning.

SRI K. ANBAZHAGAN : On a point of information, Sir.

MR. SPEAKER : May I draw the attention of the Hon. Member to Rule 81 of the Assembly Rules? It reads as follows :—

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker but no question shall be asked at the time the statement is made.'

In view of this rule, how can the hon. Member ask any question?

SRI K. ANBAZHAGAN : I rise on a point of order, Sir.

MR. SPEAKER : What is the hon. Member going to raise on a point of order?

SRI K. ANBAZHAGAN : The Hon. Speaker will please hear me and then. . .

MR. SPEAKER : The hon. Member is following the procedure of Sri V. K. Kothandaraman. He cannot make a statement.

SRI K. ANBAZHAGAN : I hope, Sir, you will not show me a wrong example. I am raising a point of order in this House because the Hon. the Finance Minister said just a few minutes before. . .

MR. SPEAKER : The hon. Member will please sit down. I have told the hon. Member Sri Kothandaraman that he cannot make a speech on a point of order. The hon. Member must tell the Speaker whot is the gist of the point of order. I will then decide

30th March 1959] [Mr. Speaker]

it. The hon. Member cannot expect me to show a different treatment to him from the one meted out to Sri V. K. Kothandaraman. Let the hon. Member please tell me the point of order. No question can be asked on a Minister's statement.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தில் ஒழுங்குகளுக்கு மாறாக ஒரு சம்பவம் பற்றியுள்ள வழக்கு விசாரணையில் இருக்கும்போது இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் இவர்கள்தான் என்றும், ராயபுரம் சம்பவத்திற்கு பக்கத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்டு கட்சி கூட்டத்தில் பேசிய பேச்சுத்தான் காரணம் என்று கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், நிதி அமைச்சர் அவர்கள்

MR. SPEAKER : That does not arise. The hon. Member cannot refer to the Finance Minister. The hon. Member is raising a point of order on the Home Minster's statement and not on the Finance Minister's statement.

SRI K. ANBAZHAGAN : I request the Speaker to . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I said, Sir, that I was not mentioning any party at all and that it would be stated by the Home Minister. And that he has said.

MR. SPEAKER : Hon. Members will please note that the Speaker here is not to decide whether the statement made is a correct statement. I am not in that position. I am not aware of any statement made. I am only going according to the rules. When the Home Minister makes a statement, there is no further question on it. The hon. Member has got other remedies.

SRI A. GOVINDASAMY : With due respect to the Chair, Sir . . .

MR. SPEAKER : Even without showing that respect, it is out of order.

SRI T. S. RAMASWAMY PILLAI : I rise on a point of order, Sir. I want to know whether the statement is the Minister's statement or the Police Commissioner's statement. Obviously, he read from the Commissioner's statement. When the Hon. Minister read, 'Some people approached me', he said by way of explanation that it referred to the Commissioner.

MR. SPEAKER : I do not know what the point of order is.

SRI T. S. RAMASWAMY PILLAI : My point of order is that whether the Hon. Minister was reading the Police Commissioner's statement or whether it was his own statement. 12-30 p.m.

MR. SPEAKER : It is not a point of order, it is only a point of information.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether it is right on the part of the Hon. the Minister for Home to have read the statement of the Commissioner of Police before this House instead of giving a statement by himself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have made the position quite clear in my statement. Perhaps the hon. Member did not listen to me carefully. I have said that I got the statement from the Commissioner of Police. I may also add that when I quote the Commissioner's statement, I do so with the full responsibility as a statement of the Government.

MR. SPEAKER : I think Sri Ramaswamy Pillai will not press his point of order.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினர் நடத்தின கூட்டத்தில் பேசின பேச்சின் விளைவாகத்தான் இது நடந்தது என்று சொன்னார்கள். அதே சமயத்தில் பக்கத்தில் வேறு ஒரு கூட்டமும் நடந்து கொண்டிருந்தது என்பது. . .

MR. SPEAKER : I cannot allow the hon. Member. When I have not allowed the hon. Member Sri Anbazhagan how can I allow Sri Kothandaraman ? இதைத்தான் அன்பழகன் அவர்களும் கேட்டார், அதை நான் " டிஸ் அலௌ " நிராகரிப்பதற்கு உங்களை " கோட் " பண்ணினேன். இப்போது நீங்கள் சொல்லுவதை நிராகரிப்பதற்கு அன்பழகன் அவர்களை " கோட்பண்ண வேண்டியிருக்கிறது. (சிரிப்பு).

III. ANNOUNCEMENTS *RE- cont.*

(2) ELECTION OF ELEVEN MEMBERS TO THE HOUSE COMMITTEE.

MR. SPEAKER : I have to announce to the House that the following eleven Members were duly nominated for the election of eleven Members of the Madras Legislative Assembly to the House Committee :—

(1) Sri S. A. M. Annamalai Udayar.
(2) ,, M. R. Kandaswami Mudaliyar.
(3) ,, J. Matha Gowder.
(4) ,, C. Muthiah.
(5) ,, K. R. Nallasivam.
(6) ,, A. Perumal.
(7) ,, S. Ramalinga Padayachi.
(8) ,, M. P. Sarathi.
(9) ,, S. Sadasivam.
(10) ,, N. R. Thiagarajan.
(11) ,, P. Urkavalan.

30th March 1959] [Mr. Speaker]

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filed, viz., eleven, I hereby declare them to have been duly elected to the House Committee.

Under Rule 214 (1) of the Madras Assembly Rules, I hereby nominate (1) Srimathi A. S. Ponnammal, (2) Sri T. S. Ramaswamy Pillai, (3) Sri V. K. Kothandaraman and (4) Sri R. Swaminatha Merkondar to be members of the House Committee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the House Committee.

(3) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 196 (1) of the Madras Asembly Rules, I have nominated the following members to serve on the Committee on Subordinate Legislation for the year 1959–60 :—

(1) Sri T. Sampath.
(2) ,, V. S. Manickasundaram.
(3) ,, M. D. Ramasami.
(4) ,, K. Vinayakam.
(5) ,, M. P. Subramaniam.
(6) ,, P. Ramachandra Reddiar.
(7) ,, S. Lazar.
(8) ,, T. S. Ramaswamy Pillai.
(9) Srimathi A. Suares.
(10) Sri V. Sankaran.

Under Rule 197 of the Assembly Rules, I nominate Sri T. Sampath to be the Chairman of the Committee.

(4) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 207 (1) of the Madras Assembly Rules, I have nominated the following Members to serve on the Committee on Government Assurances for the year 1959–60 :—

(1) Sri K. Sattanatha Karayalar.
(2) ,, P. Veerappa Kounder.
(3) ,, S. M. Annamalai.
(4) ,, V. Vedayyan.
(5) ,, C. Muthiah.
(6) ,, G. G. Gurumurthi.
(7) ,, M. Ramachandra Reddi.

Under Rule 208 (1) of the Assembly Rules, I nominate Sri K. Sattanatha Karayalar to be the Chairman of the Committee.

IX GOVERNMENT BILLS—*cont*.

(2) THE MADRAS GRAMDAN VILLAGES (REPAYMENT OF DEBTS) BILL, 1959 (L.C. BILL NO. 3 OF 1959).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Gramdan Villages (Repayment of Debts) Bill, 1959 (L.C. Bill No. 3 of 1959)[a] as passed by the Legislative Council, be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, கழிந்த மாதத்தில் நடைபெற்ற இந்த மன்றத்தின் கூட்டத்தில் இந்த மசோதாவை எடுத்துக்கொள்வதாக இருந்தது. அப்போது அதற்கு அவகாசம் இல்லாததினால் அந்தக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு அப்புறம் இந்த மாதத்தில் பட்ஜட் விவாதம் நடைபெறுவதினால் இதை உடனடியாக இரண்டு மன்றங்களிலும் நிறைவேற்றுவதற்கு அவகாசம் இல்லை என்ற காரணத்தினால் முதலாவதாக மேல் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அங்கு முதலில் இதைப் பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்காக ஒரு பொறுக்குக் கமிட்டி நியமிக்கப்பட்டது. அதன் பின்னால் அந்தப் பொறுக்குக் கமிட்டி சில மாறுதல்கள் செய்து அதே மன்றத்திலேயே விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாதான் இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மசோதாவினுடைய முக்கியமான நோக்கம், கிராம தானமாக தமிழ் நாட்டில் பல கிராமங்கள் வினோபாஜி அவர்களின் இயக்கத்தின் விளைவாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இதில் தனிப்பட்டவர்கள் பூமிகளை தானமாகக் கொடுத்ததின் காரணமாக இதே சபையில் நாம் பூதானத்திற்கு என்று ஒரு சட்டம் இயற்றினோம். இவ்விதம் கிராம தானங்களாகப் பெற்ற கிராமங்களில் இருக்கின்ற நிலம் இல்லாதவர்களும், நிலமுள்ளவர்களும் சரியான முறையில் வாழ்வதற்கான விதத்தில் இந்தச் சட்டத்தின் மூலம் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கமே இதற்கு அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் கிராமங்களில் விவசாயம் செய்வதற்கு கடன் வசதி அளிக்கவேண்டும். அதோடு கிராம தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களை எல்லாம் சர்வே செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இம்மாதிரிப்பட்ட கிராமங்களில் நிலவரம் எவ்வாறு இருக்கிறது ? அங்குள்ள மக்களுக்கு விவசாயம் செய்துகொள்ளுவதற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி சர்வே செய்யப்பட்டது. இவ்விதம் சர்வே செய்தவர்கள் அளித்திருக்கின்ற சிபார்சுகளில் ஒன்று கிராமங்களிலுள்ள மக்கள் அதிகமாகக் கடன்பட்டிருக்கிறார்கள், அங்கு கடன் கொடுத்திருப்பவர்கள் எல்லாம் உடனடியாக இப்போது கிராமங்களை தானமாக கொடுத்தவுடன் வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள், இதற்காகக் கோர்ட்டில் போய் டிகிரி வாங்குகிறார்கள், டிகிரியை நிறைவேற்றுவதற்குப் பல நடவடிக்கைகளும் எடுத்துவருகிறார்கள், இம்மாதிரி எல்லாம் கடன் தொல்லைகள் இருக்கின்றன என்றும், சர்வே செய்த கமிட்டியார் அதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சிபார்சில் குறிப்பிட்டிருந்தார்கள். பொதுவாக சமுதாயத்திற்கு சேர்ந்த நிலங்களை எல்லாம் சாகுபடி செய்ய வேண்டும், அதற்காகக் கோவாபரேடிவ் பஞ்சாயத்துக்கள் அமைத்து கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. இவ்வாறு எல்லாம் மக்களுடைய நல் வாழ்வுக்காக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்விதமாக பல கடன் தொல்லைகள் போன்ற தொல்லைகளினால் விவசாயிகள், இம்மாதிரிப்பட்ட மசோதாக்களை நிறைவேற்றுவதினால், கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆகவேதான் இந்த மசோதா இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் மூலம் கடன் பட்டிருப்பவர்களுக்கு ஒரு ஆண்டு வரையிலும் இது சம்பந்தமான தொல்லை இருக்கக் கூடாது என்றும், கோர்ட்டில் போய் டிகிரி வாங்கி இருந்தாலும், அதை இந்தக் காலத்திற்குள் நிறைவேற்றக் கூடாது; அவ்விதம் இதையும்

[a] Printed as Appendix IX on pages 950–965 infra.

30th March 1959] [Sri M. Bhaktavatsalam]

மீறி யாராவது கோர்ட்டில் தாவா கொடுத்தால் யார் கோர்ட்டில் தாவா கொடுக்கின்றார்களோ, அவர்கள்தான் கோர்ட்டு செலவு பூராவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது யாருடைய நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் பிரகாரம், கிராமத்திலிருக்கின்றவர்களுக்கு, அவர்கள் நிலமுள்ளவர்களாக இருந்தாலும்சரி, நிலமில்லாதவர்களாக இருந்தாலும்சரி, அவர்கள் எல்லோருக்கும் விவசாயம் செய்வதற்குரிய வசதி செய்து கொடுக்கவேண்டும். சிலர் நிலங்களை தானமாகக் கொடுத்துவிட்டதின் காரணமாக நிலமில்லாதவர்களாக இருக்கலாம். பொதுவாக கிராமங்களிலுள்ள நிலங்கள் எல்லாம் விவசாயம் செய்யப்பட்டாக வேண்டும். அது கிராமமாக இருந்தாலும் சரி, ஹாம்லெட்டாக இருந்தாலும் சரி, இந்த கிராமம் தானமாகக் கொடுக்கப்பட்டபொழுது யார் யார் அந்தக் கிராமத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்களோ அவர்களுக்கு எல்லாம் இந்த மசோதாவின் மூலம் அனுகூலம் கிடைக்கும். அதுதான் இந்த மசோதாவின் முக்கிய நோக்கம். அவர்கள் எல்லோரும் விவசாயிகளா இல்லையா என்பது பிரச்னை அல்ல, அந்தக் கிராமத்திலுள்ள சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தான் நோக்கமாக இருக்கவேண்டும். கிராமத்தில் பல தொழிலாளர்கள் இருக்கலாம். மேலும் விவசாயத்திற்கு உதவக்கூடிய பல சாமான்களைச் செய்யக் கூடியவர்கள்—தச்சர்கள்—கருமான்மார்கள்(ஆர்டிஸான்ஸ்) இவர்கள் எல்லாம் கிராமத்தில் இருக்கலாம். இவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆனால் வெளியே இருக்கின்றவர்கள், அதாவது தங்களுடைய நிலத்தைத் தானமாகக் கொடுத்துவிட்டு வெளியே இருக்கின்றவர்கள் கிராமத்திற்கு வெளியே இருந்தால், அவர்களுக்கும் இந்த மசோதாவின் மூலம் கிடைக்கக்கூடிய அனுகூலம் கிடைக்கவேண்டும் என்று யோசனை கூறப்பட்டது. வெளியே இருக்கின்றவர்கள் நிலத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்த கிராம தானத்தில் அடிப்படை என்னவென்றால், எந்த கிராமம் தானமாக கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கிராமத்திலுள்ள சமுதாயம் பாதுகாக்கப்படவேண்டும் என்பது. மேலும் அந்த கிராமத்திலுள்ளவர்கள் கடன்பட்டிருந்தால், அந்தக் கடன் தவணையை தள்ளிப் போடுவதற்காக மசோதா இருக்கிறது. அதோடு வெளியே இருக்கின்றவர்களை இதில் சேர்ப்பதற்கு நியாயம் இல்லை என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். அந்த வகையில் இந்த மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மாரடோரியம் ஒரு வருஷத்திற்கு தள்ளிப் போடுவதுதான். பின்னால் வசூல் செய்வதிலே மூன்று வருஷாந்திர தவணையாக வசூலிக்கப்படும் என்று இந்த மசோதா கூறுகிறது. கடனை அடியோடு ரத்து செய்வது அல்ல—தள்ளிப்போடுவதுதான். அதுவும் ஒரு ஆண்டுக்குத்தான். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், சில ஆண்டுகளுக்கு முன்பு வறட்சி இருந்தபோது, மொத்தமாக கடனைத் தள்ளிப் போடுவதற்கு ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை ஒட்டி இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்பி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: How long will the Hon. Minister take to reply?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Ten minutes.

MR. SPEAKER: We shall have general discussion till 1-10 p.m. and then we shall take up the Bill for consideration clause by clause.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Those who want to speak may go on till 1 p.m. I will take five or ten minutes for my reply.

MR. SPEAKER : All right. We will go on till 1 p.m. when the Hon. Minister will reply. I allow five minutes for each Member.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் குறித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல முன் வருகிறேன். 1954–55-ம் ஆண்டிலே இப்படிப்பட்ட ஒரு மசோதா நமது மாநிலம் பூராவிற்கும் இருந்தது. நமது மாநிலம் பூராவிலும் இருந்ததன் காரணமாக அதில் சில குறைபாடுகள் அந்த சமயத்திலே காணப்பட்டது. அந்த முக்கிய குறைபாடுகளையொட்டித்தான் நான் முக்கியமான திருத் தங்கள் இரண்டை இந்த மசோதாவிலே தந்திருக்கிறேன். இன்றைக்கு ஓராண்டு காலம் கடனை தள்ளிப் போடுகிறோம் என்றால், ஓராண்டு காலம் கழித்து அங்கு இருக்கக்கூடிய மக்களிடத்திலிருந்து மறுபடியும் தொடர்ந்து அந்த ஓராண்டு காலத்திற்கும் வட்டியைச் சேர்த்து வசூல் செய்கிறார்கள். அந்த மக்களுக்கு நிவாரணம் தரவேண்டுமென்று இந்த மசோதாவைச் சட்டமாக்கி கிராமதான நிலங்களுக்கு அமுல் நடத்தப் போகிறோம். அதே சமயத்தில் ஓராண்டு காலத்திற்குத் தள்ளிப் போட்டு விட்டு வட்டியையும் சேர்த்து வசூல் செய்து கொள்ளலாம் என்று மசோதாவில் இருக்கிறது. தள்ளிப் போடுகிற ஓராண்டு காலத்திற்கும் அந்த இடங்களில் வட்டியை வசூல் செய்யக் கூடாது. இதன் காரணமாக 1954-ம் வருஷத் திய சட்டத்தினால்கூட பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். அந்த சமயத்தில் நிவாரணம் என்று கருதப்பட்டதே தவிர, மேலும் மேலும் வட்டி சேர்த்து திருப்பிக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அப்படி தள்ளிப் போடுகிற போது ஒரு ஆண்டு காலம் கழித்து வழக்குத் தொடர்ந்தாலும்கூட, டிக்ரி ஆகும்போது கோர்ட் காஸ்டை வாங்கக் கூடாது என்ற திருத்தத்தைத் தந்திருக்கிறேன். மக்களைக் காப்பாற்ற வேண்டும், மக்களுக்கு நல்ல முறையில் நிவாரணம் தரவேண்டும் என்று நினைக்கிற நாம் அதே சமயத்தில் இப்படிப்பட்ட சிறிய நிவாரணத்தைத் தரவேண்டுமானால் மக்களுக்கு அதை நல்ல முறையில், நல்ல பலனைக் கொடுக்கக்கூடிய வகையில் தரவேண்டும் என்ற அடிப்படையில் நான் இரண்டு திருத்தங்களைத் தந்திருக்கிறேன். ஆதலால், அதை ஏற்றுக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றி சட்டமாக்கினால் அந்தச் சட்டத் தினால் மக்கள் நல்ல பலனை அடைவார்கள் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : சபைத் தலைவர் அவர்களே, இந்த கிராமதான கிராமங்களில் கடன் வசூலைத் தள்ளிவைக்கும் மசோதாவைக் கொண்டுவந்ததற்காக சர்க்காரை நான் பாராட்டுகிறேன். அகில இந்தியாவிலேயும் கூட நம் ராஜ்யத்திற்கு அந்தப் பெருமை சாரும். கிராமதான கிராமங்களில் வேலைகளை ஒழுங் காக நடத்தக் கூடிய முறையில், திட்டமிட்டு செய்யக்கூடிய முறையில் இந்த நல்ல மசோதாவை பாஸ் செய்யப் போகிறோம் : இப்போது எந்த சோஷலிஸ சமுதாயத்தை நோக்கிப் போகவேண்டுமென்று சொல்லுகி றோமோ அதனுடைய லெபோரட்ரியாக, ஆராய்ச்சிக் கூடமாக கிராமதான கிராமங்கள் மிகவும் ஒத்தாசையாக இருக்கின்றன. ஆகவே, இந்த கூட் டுறவு முறையில் விவசாயம் மட்டுமல்லாமல் கிராமக் கைத்தொழில்கள் முதலியவைகளை நடத்தவும், விவசாயத்தை கூட்டுறவுப் பண்ணை முதலி யன வைத்து நடத்த சர்க்கார் சர்வோதய பஞ்சாயத்து ஏற்படுத்த சட்டப் பிரகாரம் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே சர்வோதய பஞ் சாயத்து 10 கிராமங்களில் ஏற்பட்டு நல்ல விதமாக வேலை செய்கின்றன. இன்னும் அநேக கிராமங்களில் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. கடன் வசூல் செய்வதைத் தள்ளிவைக்க வேண்டுமென்று கிராமதான கிராமங்கள் வந்ததிலிருந்து நான் கேட்டுக்கொண்டிருந்தேன். தங்கள் கிராமத்திலுள்ள எல்லா நிலங்களையும், நல்ல நஞ்சை, தோட்ட நிலங் களைக்கூடக் கொடுத்திருக்கும்போது கூட்டுறவு சொஸைட்டி, இன்னும் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைத் தள்ளிப் போட்டுக் கொடுங்

30th March 1959] [Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

கள் என்று அவர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த கடன் தொல்லையினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது நல்ல நேரத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வந்ததை நான் ஆதரிக்கிறேன்.

அதிலே வெளியில் இருப்பவர்களுக்கு இந்த நிவாரணம் கொடுக்கலாமா என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பிரஸ்தாபித்தார்கள். கிராமதான கிராமங்களுடைய எதிர்கால வேலைத் திட்டமே அவர்களுக்கென்று அந்த கிராமத்தில் நிலமில்லாமல் கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்துவதுதான் இதனுடைய முக்கிய லட்சியம். ஆகவே ஒரு நில முதலாளியோ அல்லது விவசாயம் செய்கிறவர்களோ, வெளியில் இருப்பவர்கள் நிச்சயமாக மற்ற வசதிகளையுடையவர்களாகத்தான் இருப்பார்கள். நிவாரணம் கொடுப்பதால் கிராமதான பஞ்சாயத்துக்களின் பணி நன்கு நடக்க உதவும்படியாக இருக்குமா என்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் வசூலை தள்ளி வைப்பதை ஒரு வருஷத்திற்குத் தள்ளி வைப்பது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை முதல்படியாக நான் வரவேற்கிறேன். கிராமதான கிராமத்தின் இப்போதைய நடைமுறை விவரம் மந்திரி அவர்களுக்குத் தெரியும். கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியுமா என்பது எனக்குத் தெரியாது. ஆகையால் இதைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமம் என்று சொல்லும்போது இது ரெவின்யூ கிராமம் அல்ல. தனிப்பட்ட பட்டி என்று சொல்லுகிறார்கள், அவர்கள் கூடி உட்கார்ந்து தங்களுடைய உணவு, உடை தேவைகளைப் பற்றியும், கேஷ் கிராப்ஸ் என்ன போட வேண்டும், எப்போது போடவேண்டும் என்பதைப் பற்றியும், எந்தெந்த கைத்தொழில்களை ஆரம்பித்தால் அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறும் என்று அவர்கள் திட்டமிடுகிறார்கள். திட்டமிடும்போது அதிலே நடுவில் கடன் தொல்லை. இப்போது ஒரு வருஷம் தள்ளி வைத்தால், அதைப் பற்றி கவனத்தில் எடுத்துக்கொண்டு திட்டமிடுவதில் நல்ல விதமாகத் திட்டமிட்டு வேலை செய்வதற்கு இந்தத் தள்ளி வைப்பு மசோதா உதவும்படியாக இருந்தாலும்கூட கிராமங்களில் நடக்கும் பலவித பழக்கங்களில் 100 ரூபாய் கொடுத்து 500 ரூபாய் எழுதி வாங்கிக்கொள்வது போன்ற காரியங்களினால், தள்ளி வைத்தாலும் கூட 3 வருஷத்தில் தொகை கூடி விடக்கூடிய நிலையில் பரம்பரைப் பழக்கங்கள் சில சிறு நிலச்சுவாந்தார்களுக்குப் பரம்பரைச் சத்துருக்களாக இருந்து வருகின்றன. இந்த நேரத்தில் கடனைத் தள்ளி வைத்து ஒரு வருஷத்திற்குள்ளே அந்தந்தப் பட்டிகளிலே 20 பங்கு, 30 பங்கு, 50 பங்கு என்று முதல் தொகையைக் கூட்டியிருக்கிறார்களே அதிலே, இதற்கு மேல் வாங்கக் கூடாது என்று இன்னும் எவ்வளவு தூரம் குறைத்து கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் என்பதை சர்க்கார் ஆலோசனை செய்யலாம் என்று சொல்லும்போது ஏதோ பொறுப்பு உணர்ச்சி இல்லாமலோ சொல்லவில்லை, தீர்க்கமாக ஆலோசனை செய்துதான் சொல்லுகிறேன். (Bill) ஏனென்றால், இவைகள் தான் எதிர்கால சோஷலிஸ சமுதாயத்திற்கு லெபோரட்டரி என்று நான் சொன்னேன். ஜனங்களுக்கு தைரியத்தையும், உற்சாகத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கும் முறையில் பொருளாதாரச் சிக்கலில் விட்டு விடாது நடத்தினால், கிராமதான கிராமங்களுக்குச் சில சலுகைகளை அதிகமாகக் கொடுத்து ஆராய்ச்சி முறையில் நடத்தினால் இந்தியாவிலே கூட்டுப் பண்ணைகளை எந்த முறையாக வைக்கப் போகிறோம் என்று காட்டுகிற முறையில் நடத்திக் காட்ட முடியும். அதோடு கூட வட்டி வாங்குவதில். . .

MR. SPEAKER : மந்திரி அவர்கள் இந்த பொது விவாதத்திற்கு சரியாக 1 மணிக்கு பதில் சொல்லுவதாகச் சொன்னார்கள். சில அங்கத்தினர்கள் பேசுவதற்கு விரும்பியதால் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் 5 நிமிஷ நேரம் கொடுத்தேன். இன்னும் சில அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். 5 நிமிஷம் கொடுத்திருக்கும்போது 8 நிமிஷம், 10 நிமிஷம் பேசிக்கொண்டே போனால் என்ன செய்வது. உங்களுக்கு அதிக நேரம் வேண்டுமென்றிருந்தால் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும், இந்த

[Mr Speaker] [30th March 1959

நேரம் போதாது என்று, மணி அடித்த பிறகும் பேசிக்கொண்டே போனுல் என்ன அர்த்தம் என்று புரியவில்லே. ஒரு திட்டம் போட்டால் அதன்படி எல்லோரும் நடக்கவேண்டும்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : எத்தனே நிமிஷம் என்றுசொல்லவில்லேயே.

MR. SPEAKER : ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் ஐந்து நிமிஷங்கள் தான் பேசலாம், அதுவும் நான்கு கனம் அங்கத்தினர்களேத்தான் பேச அனுமதிக்க முடியும் என்று நான் சொன்னேன். எத்தனே நிமிஷம் என்று நான் சொல்லவில்லே யென்று வைத்துக் கொண்டாலுங்கூட, மணி அடித்தேனே, அப்போதாவது உட்காரலாம் அல்லவா ?

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : மணி அடித்ததிலிருந்து இரண்டு நிமிஷம் வரையில் பேச அனுமதிப்பது உண்டு.

MR. SPEAKER : இருக்கிறதே பத்து நிமிஷம். அதற்குள்ளே இன்னும் இரண்டு கனம் அங்கத்தினர்களே நான் பேச அனுமதிக்க வேண்டும். நேரம் போதாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் இப்பொழுது கேட்டுக் கொண்டிருப்பதை, கனம் அமைச்சர் அவர்கள் ஒரு மணிக்கு பதில் அளிக்கப் போவதாகச் சொன்னுரே, அப்பொழுது கேட்டிருக்க வேண்டும். அப்பொழுது கேட்டிருந்தால், கனம் அமைச்சர் அவர்களே சற்று நேரம் பொறுத்துப் பேசச் சொல்லியிருக்கலாம். அப்பொழுது சும்மா இருந்துவிட்டு இப்பொழுது நேரம் அதிகமாக வேண்டுமென்று கேட்டால் நான் என்ன செய்வது ? இப்பொழுது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஜகன்னுதன் அவர்கள் பேசலாம்.

* **SRI M. JAGANNATHAN** : Mr. Speaker, Sir, this Bill purports to give a sort of temporary relief to the gramdan villagers who are indebted. The question naturally arises, what is the kind of relief that this Bill seeks to give to the indebted gramdan villagers. It is stated that the creditors will be temporarily restrained or prevented from resorting to courts of law in order to realise their dues from the gramdan villagers. It is not a permanent relief as such. If the relief is to be of a substantial nature, I am of opinion that the Government should come forward with a different piece of legislation altogether. We all know that the villagers who are living in these gramdan villages are actually being crushed under the dead weight of rural indebtedness. That stands in the way of their progress and improvement in life. If the Government are really interested in extending substantial help to these villagers, they should have come forward with proposals to write off the debts, instead of a small piece of legislation like this which seeks to give only temporary relief for a period of one year or so. We know the gramdan movement is part and parcel of the Bhoodan Movement started by Acharya Vinobha Bhave, an ardent disciple of the late Mahatma Gandhi. It is stated that all over the country, they have obtained by way of donation about 110 million acres of land. I am not prepared to vouch for the correctness of this figure. And it is also claimed that more than half of these 110 million acres of land have already been redistributed to poor people in our country. Some landlords come forward to donate sometimes a whole village or a portion thereof and the land thus obtained comes under 'gramdan' and has to be redistributed to the poor people living in these

villages or hamlets. Before the Government provide them with lands, they should take care to see that the poor villagers have the wherewithal for their cultivation. Unless this is done, the gramdan movement is not going to be a success. But even before doing that, the Government have to see that the poor villagers are not actually harassed by the creditors and perhaps in this sense they have thought it desirable to bring in a small piece of legislation like this. If I may be permitted to say so, this measure will not help the landless poor people living in our moribund villages, steeped in utter poverty, degradation and semi-starvation. We all know that the Government are so reactionary as not to look beyond their nose in matters of reform, paricularly with reference to agriculture. Therefore, I strongly criticise the Government on this occasion for coming forward with a small piece of legislation which will not help the villagers. They must have come forward with a comprehensive legislation for writing off debts incurred by the villagers. Then, they would have deserved all my praise, appreciation and admiration. But I am unable to congratulate them now. However, there is a proverb which says: 'Half loaf is better than no loaf'. Some relief is better than no relief and it is in this sense I come forward to welcome this measure. I hope this will give a sort of impetus to the gramdan movement by and large. Thank you.

Sri A. GOVINDASAMY : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். கிராமதான கிராமத்தைச் சேர்ந்தவர்கள் யார் என்று நிர்ணயம் பண்ணுகின்றபோது கிராமதானமாகக் கொடுக்கப்பட்ட கிராமத்தில் ஏற்கெனவே இந்தச் சட்டம் அமுலாக்குவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னாலே அந்தக் கிராமத்தில் வசித்து இருந்தாலும் அவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் சலுகை கிடைக்கவேண்டுமென்ற திருத்தத்தை இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்னால் கொடுத்திருந்தேன். செலக்ட் கமிட்டிக்குப் போய் மீண்டும் வருகிறபோது அங்கே அமைச்சர் அவர்கள் சேர்த்துக்கொள்வதற்கு ஆலோசித்திருப்பார்கள் என்று நினைத்தேன். **"Gramdan villager means any villager residing or having resided for one year before the commencement of this Act"** என்று நான் திருத்தம் கொடுத்திருந்தேன். அதை ஆலோசித்து ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் . . .

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 'ஒரு வருஷத்திற்கு முந்தி இருந்தவர்' என்றால், அவர் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிற தேதியிலும் அந்தக் கிராமத்திலே இருக்க வேண்டும். இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிற தேதியில் கிராமத்தில் இருப்பவர்களெல்லாம் இதிலே வந்து விடுகிறார்கள்.

Sri A. GOVINDASAMY : செலக்ட் கமிட்டி ரிபோர்ட் விவாதத்திற்கு வந்த நேரத்தில் நான் அவையில் இல்லை. அவையில் இல்லாத காரணத்தால், அப்பொழுது இதற்கு வேண்டிய திருத்தம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. ஒரு ஆண்டுக்கு முன் வேறு காரணத்திற்காக குடியேறியிருந்தாலும் அவர்களுக்கும் இந்தச் சலுகை இருக்க வேண்டும் என்ற கருத்துப்பட நான் திருத்தம் கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்கள் யோசித்துப்பார்த்திருப்பாரானால், அதையும் ஏற்றுக்கொள்வதற்கு"முன்"வந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தச் சட்டத்தின்படி ஒரு ஆண்டுக்குத்தான் சலுகை என்று சொன்ஞல், ஒரு ஆண்டுக்குள் விவசாயிகளுக்கு நல்ல பொருளாதார முன்னேற்றம் வந்துவிடும் என்று அரசாங்கம் கருதுகிறதா ? ஏன் இரண்டு அல்லது மூன்று ஆண்டு காலத்திற்கு ஒத்தித்தரக் கூடாது ? அதற்கு பிறகு கோர்ட்டுக்குப் போனுல், அந்தக் கோர்ட்டுச் செலவையும் கிராமதான விவசாயிகளே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியில் இருக்கும் எங்கள் கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் கூட, கேட்கிருர்கள். அந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட நல்ல திருத்தத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் உண்மையில் கிராமதான விவசாயிகளுக்கு நன்மை செய்ததாகும் என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுக்குள் சம பாகமாகப் பிரித்து கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருப்பதற்குப் பதிலாக ஐந்தாக இருந்தால், ஓரளவு அவர்களுக்குப் பரிகாரம் செய்ததாகவும், குறைந்த பட்சம் சலுகை காட்டுவதாகவும் இருக்கும் என்ற கருத்தினையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உண்மையிலேயே கிராமதானத்தில் மற்ற கிராமங்களும் வந்து சேர வேண்டும் என்று நினைத்தால், இப்பொழுது போகின்ற போக்கைப் பார்க்கின்றபோது, எவ்வளவு கிராமங்கள் வந்திருக்கின்றன என்று பார்த்தால் 232 கிராமங்கள் சேர்ந்திருப்பதாக லிஸ்டிலே காண்கிருேம். தமிழ் நாட்டிலே மட்டும் கிட்டதட்ட இருபதாயிரம் கிராமங்கள் இருக்கின்றபோது, விஞேபாவினுடைய நல்ல கருத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள், அதை எதிர்க்கின்றவர்கள் யாரும் இல்லாத நேரத்தில், இவ்வளவு கூடுதலான கிராமங்கள் சேராமலிருப்பதற்குக் காரணம், அங்கே அதிகச் சலுகை கொடுப்போம் என்ற உத்தரவாதம் இல்லாததுதான். அத்தகைய உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், உண்மையிலேயே பல கிராமங்களை கிராமதானமாகச் செய்வதற்குப் பல பேர் தயாராக இருப்பார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தை கிராம தானமாகக் கொடுக்கவேண்டிய ஏற்பாடு செய்திருக்கிருேம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1 p.m. தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கப்பட்ட கடனுக்கு எந்தவிதமான சலுகையும் காட்டாமல் அரசாங்கத்தினிடமும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவும் வாங்கப்பட்ட கடனுக்கு சலுகைகள் கேட்டிருப்பது அவ்வளவாக சரியல்ல. தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கிய கடனைக் கொடுக்க ஒரு வருஷம் தவணை கொடுத்து விட்டு சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனுக்கும், கூட்டுறவு சொசைட்டிகளிடமிருந்து வாங்கிய கடனுக்கும் விதி விலக்கு அளிப்பது என்பது சரியல்ல. இப்பொழுது அரசாங்கத்தினிடமிருந்து ஆயில் இன்ஜின் போன்றவைகள் வாங்குவதற்கு கடன் வாங்கியிருக்கிருர்கள். இதற்கு மட்டும் விதிவிலக்கு அளிக்க வேண்டிய காரணம் என்ன ? இவர்களுக்கு பணம் கொடுக்க மட்டும் விவசாயிகள் எங்கே போவார்கள். இவர்களுக்கு மட்டும் சலுகைகள் காட்டுவானேன். இப்படிப்பட்ட ஒரு சலுகை அங்கே ஏன் போடப்பட வேண்டும். "**but shall not include**" என்று போடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் விவசாயிகளுக்கு எந்தவிதத்திலும் சலுகைகள் காட்டியதாகத் தெரியவில்லை. சர்க்காருடைய கடனைக் கொடுப்பதற்கு மட்டும் விவசாயிகள் பணத்திற்கு எங்கே போவார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று சட்டம் செய்யும்போது இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கக்கூடாது. அவர்களுக்கு உண்மையாகவே நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கருதினுல் இப்படிப்பட்ட ஒரு விதி விலக்கு இருக்கக் கூடாது என்பதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு அந்த அளவில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக விவசாயிகளுக்கு ஒரு வித நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை விட அங்குள்ள விவசாயிகளுக்கு எவ்வளவோ அதிகப்படியான உதவி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் நல்ல முறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். அங்குள்ள விவசாயிகள் கடன் தொல்லை இல்லாமல் நல்ல முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு கடன் தொல்லை ஏற்படக்கூடாது என்பதுதான். சாதாரணமாக கடன் வாங்கியவர்களும் ஏழையாகத்தான் இருக்கலாம். அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் கூட ஏழை விவசாயிகளாகத்தான் இருக்க முடியும். வெளியிலிருந்து பெரிய பணக்காரர்கள் அங்கு வந்து அவர்களுக்குக் கடன் கொடுத்திருக்கப் போவதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் சிறிய லேவாதாவிக்காரர்கள்தான் அவர்களுக்கு கடன் கொடுத்திருப்பார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், கடனைத் திருப்பிக் கொடுக்க ஒரு வருஷ தவணை கொடுத்து விட்டு அதன் பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு வருஷம் வரையில் அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒரு வருஷத்திற்குள் கடன் வாங்கிய விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்து வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்கக்கூடிய அளவில் முன்னேற்றம் அடைந்திருப்பார்கள் என்ற அடிப்படையில் இப்படி ஒரு வருஷ தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு மூன்று தவணைகளில் வசூலிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவோ வசதிகள் அவர்களுக்குச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒரு மசோதாவில் பல மசோதாக்களின் கருத்தைச் சேர்க்க முடியாது என்ற காரணத்தால் இது மட்டும் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான வசதிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் உணராமல் இல்லை. பல வசதிகள் ஒரு மசோதாவின் மூலமாகக் கொடுக்க முடியாது என்ற காரணத்தால் இப்பொழுது இதை மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் பல வசதிகள் செய்வதற்காகத்தான் சென்ற வருஷத்திலும் இந்த வருஷ வரவு செலவு திட்டத்திலும் அவர்களுக்கு என்று இருபது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடன் வசதியோடு மற்ற வசதிகளையும் கொடுப்பதற்காகத்தான் இப்படி இருபது லட்சம் ரூபாயை அவர்கள் பொருட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் கடன் கொடுத்திருந்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களுடைய கடனுக்கு விதி செய்யப்பட்டிடிருக்கிறது. சர்க்காருடைய கடனுக்கும் கூட்டுறவு சொசைட்டிகளில் வாங்கிய கடனுக்கும் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் சாதாரணமாக அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் கோர்ட்டுக்குப் போக முடியாது. அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன்தான் அப்படிப்பட்ட கடன்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருகிறது. சாதாரணமாக அரசாங்கமும், கூட்டுறவு சொசைட்டிகம் விவசாயிகளின் பேரில் தாவா தொடரமாட்டார்கள். அரசாங்கம் இப்பொழுது கொடுத்திருக்கிற கடனுடன் இன்னும் அதிகப்படியான கடன் கொடுப்பதற்கு என்று இருபது லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கும்போது ஏற்கெனவே வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று கோர்ட்டுக்கு போக வேண்டிய அவசியமே இல்லை என்ற காரணத்தினால்தான் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய கடன் தொல்லை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்கு என்று தனியாக சட்டம் செய்ய வேண்டாம் என்ற அடிப்படையில் அரசாங்க கடனுக்கும், கூட்டுறவு சொசைட்டி கடனுக்கும் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கிராமத்தில் ஒரு வருஷத்திற்கு முன்பு இருந்து விட்டு இப்பொழுது அந்த கிராமத்தை விட்டு வேறு கிராமங்களுக்குச் சென்றிருந்தால் அவர்

[Sri M. Bhaktavatsalam] [30th March 1959

களையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கனம் கோவிந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார். உள்ளபடியே சட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால் அந்தந்த கிராமத்தில் அந்த சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களுக்கு சலுகைகள் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காகவும் இன்னும் அதிகப்படியான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், இதைக் கொண்டு வரப்பட்டிருக் கிறது. கிராமத்தில் இல்லாமல் வேறு இடத்தில் இருப்பவர்களுக்கு இந்த வசதி தேவையில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு வேறு கிராமத்தில் நிலம் இருக்கலாம். அப்படி கிராமத்தை விட்டு வெளியே வேறு கிராமங்களுக்குச் சென்றவர்கள் ஆப்ஸெண்டி லாண்டு லார்டுகளாக இருக்கலாம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிவாரணம் அவசியமில்லை.

கனம் அண்ணாமலை அவர்கள் பேசும் போது அவர்களிடம் இந்த ஒரு வருஷத்திற்கு வட்டி ஏன் வாங்க வேண்டும் என்று கேட்டார். கடனையும் வட்டியையும் தள்ளிக்கொடுப்பதற்கு கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறது. அதன் மூலமாக குறைத்துக்கொள்ளலாம். அதனால் இங்கே ஒரு வருஷத் திற்கு வட்டியைச் சேர்க்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. இந்த மசோதாவின் அடிப்படை தத்துவத்தை கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடன் ரத்து செய்வது என்பது வேறு விஷயம். இன்றையதினம் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு வருஷ தவணை கொடுத்து விட்டு அதன் பிறகு மூன்று வருஷங்களில் மூன்று தவணைகளாக வசூலித்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒரு வருஷத்தில் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவில் முன்னேற்ற மடைந்து விடுவார்கள் என்ற அடிப்படையில் இவ்விதம் செய்யப் பட்டிருக்கிறது. மேற்கொண்டு அவசியம் இருந்தாலும் அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதற்கு கடன் கொடுப்பதற்குத்தான் 20 லட்சம் ரூபாய் அதற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இருபது லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு அவ்வளவையும் கொடுக்க முடியவில்லை. கணக்குப் பார்த்துத்தான் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இருக்கும் பணத்தை அப்படியே கொடுத்துவிடுவது என்பதும் அல்ல. இந்த இருபது லட்சம் ரூபாயையும் அவர்களுக்கு அப்படியே கடனாகக் கொடுத்து விடுவதும் அல்ல. அதில் ஓரளவு தான் செலவாகி இருக்கிறது. கிராமத்தினுடைய வாழ்க்கைத்தரத்தைப் பார்த்துத்தான் அவர்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வசதி அளிக்க வேண்டியதாக இருந்தால் அப்பொழுது அவர்களுக்கு வசதி அளிக்க அரசாங்கம் தயங்காது. ஆகவே இந்த மசோதாவின் அடிப்படையை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்து இதை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Gramdan Villages (Repayment of Debts) Bill, 1959 (L.C. Bill No. 3 of 1959) as passed by the Legislative Council, be taken into consideration '.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The motion is :—

'That clause 2 do stand part of the Bill '.

30th March 1959]

* SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, I move the amendment standing in my name, namely :—

'at the end of the definition in sub-clause (*b*), *add* the following explanation :—

"*Explanation.*—A debt binding on an entire Hindu joint family property by reason of its having been contracted by the manager of the said family, shall for the purposes of this Act, be deemed to be a debt due from every member of the said family whether resident in the gramdan village or not".'

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, in this clause debt is being defined and in this definition for debt certain items of liabilities are given exemption. They have been omitted. My explanation says that unless the possibility of a Hindu joint family manager who has contracted the debt on behalf of the members of the Hindu joint family is included in this definition, the definition of debt will suffer from a serious defect. It is only in that connection that I have proposed this explanation to be incorporated in the definition that is provided for debt. Now, let us take the case of a manager of a Hindu joint family. It is quite possible that the manager of the Hindu joint family contracts the debt on behalf of the members of the Hindu joint family and at the time when this Act comes into force this particular manager might happen to live outside the gramdan village. Now are we going to suggest because this manager is personally liable to be proceeded against as he is a person living outside the gramdan village? The creditor can proceed against the joint family members living in gramdan villages.

In the definition for debt the liability due from any gramdan villager is very much emphasised. Subsequently at the end of the clause the term 'gramdan villager' is defined. Now when we look at these things, we must come to the conclusion that unless a provision is made on the lines suggested by me, in my explanation, there will be a serious drawback in the definition of 'debt' itself. I hope, Sir, the Hon. Minister who is in charge of this Bill after scrutinising the full import of my explanation, will come forward to accept this amendment without any difficulty.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர் என்பது தெரியும். அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதால் ரொம்ப கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்தேன். ஆனால் முன்பே விளக்கியதுபோல் இந்த மசோதாவின் அடிப்படை கிராமத்தில் இன்று இருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்பதுதான். ஏக குடும்பத்தைச் சேர்ந்த மானேஜர் கடன் வாங்கியிருக்கலாம். வெளியில் இருக்கிறவர்களுக்கு இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் கவலையில்லை. வழக்கு முறைப்படி செய்து கொள்ள வசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதுதான்

இந்த மசோதாவின் அடிப்படை. கனம் அங்கத்தினர் அவர்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clause 3.

MR. SPEAKER : The motion is—

'That clause 3 do stand part of the Bill'.

SRI V. SANKARAN : Sir, I move the following amendment :—

'In sub-clause (2), *omit* the words and lines after the words "his own cost".'

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN : Sir, I move the following amendments :—

'In sub-clause (2), *omit* the words "paid or" occurring before the word "deposited".'

'In sub-clause (2), *after* the words "deposited into courts", *insert* the words "with due notice to the creditor".'

'In sub-clause (2), *for* the word "and" occurring *after* the words "sub-section (1) of section 4", *substitute* the word "or".'

The amendments were duly seconded.

MR. SPEAKER : Now, the clause and the amendments are before the House for discussion.

SRI V. SANKARAN : இந்த ஷரத்தின்படி கடன் கொடுத்தால் வழக்குப் போட்டு விட்டால் தன்னுடைய செலவு மட்டுமல்லாமல் எதிர் "பார்ட்டி" செலவையும் சேர்த்துக் கோர்ட்டில் கட்டவேண்டுமென்று ஷரத்து இருக்கிறது. எதிர் பார்ட்டி செலவு தொகையைக் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்த விதத்தில் ஷரத்து இருக்கவேண்டுமென்ற அவசியமில்லையென்று கருதுகிறேன். என்ன "காஸ்ட்" கொடுக்க வேண்டுமென்பதை நிர்ணயம் செய்வதெல்லாம் கோர்ட்டின் அபிப்பிராயத்துக்கு விட்டு விடுவது நல்லது. "his own cost" என்பது இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படியில்லாமல் அது இருக்கவேண்டுமென்று சொன்னால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இப்பொழுதே ஒரு கண்டிஷன் போட்டு வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன் என்று சொல்ல முடியாது.

SRI M. JAGANNATHAN : Sir, my first amendment reads like this—

'In sub-clause (2), *omit* the words "paid or" occurring before "deposited".'

30th March 1959] [Sri M. Jagannathan]

Now let me read the sub-clause. It says :—

'Where a creditor institutes a suit for recovery of a debt during the period specified in sub-section (1) or after the gramdan villager has paid or deposited into court the instalments specified in sub-section (1) of section 4 . . .'

Here, two words are used. The word 'paid' is used and the word 'deposited' is used. I do not know whether these two words are used in the same sense or in the synonymous sense. Sir, if the word 'paid' is used in the sense that the amount or instalment is paid not to the court but directly to the creditor concerned, then no creditor in his right senses will go to the court and file a suit for the recovery of the debt from the debtor. Therefore, in that sense, I do not think the Government have used the word 'paid'. They must have used this word 'paid' in the sense that the amount is paid in the court. In that case, why should they use another word 'deposited'? So, if these two words mean the same thing, then I am afraid, we must drop the word "paid" and retain the word 'deposited'. That will make sense. I hope the Government will accept this small amendment.

Sir, my second amendment reads like this—

'In sub-clause (2), after the words "deposited into courts", *insert* the words "with due notice to the creditor".

Sir, the institution of proceedings in a court by the creditor is being barred by a condition that is being provided for in this sub-clause and that is, when the instalment due has already been deposited in the court, the creditor concerned should not drag the debtor to the court. If he does that, I think, the court will give a decree in which they must say that the creditor must bear his own cost and pay also the cost of the defendant who is a gramdan villager. I think this will work as a sort of hardship upon the creditor, because when the debtor has paid the amount into the court without giving any notice to the creditor concerned, then there is nothing to prevent a creditor from going to a court for recovering his loan. He does it under a bona fide mistake, not knowing the fact that the debtor has deposited the amount due to him into the court. On that account, the Government cannot penalise this poor creditor by asking him to bear not only his cost but also the cost of his defendant. Therefore, my amendment seeks to suggest that the debtor, notwithstanding the fact that he has paid the amount into the court, must also give due notice to the creditor. In spite of the fact that he has received due notice from the debtors, still if he comes to the court and files a suit for recovering his loan, then in that case only he must be made to bear not only his cost but also the cost of the other side. I hope the Hon. Minister has bestowed some thought on this suggestion of mine and I believe there will be no difficulty in accepting this amendment.

[30th March 1959 [Sri M. Jagannathan]

Sir, my third amendment says—

'In sub-clause (2), *for* the word " and " occurring after the words " sub-section (1) of section 4 ", *substitute* the word " or ".'

This amendment of mine is intended to correct a grammatical mistake. It is a verbal amendment. I insist that a proper conjunction should be used. The conjunction that should be used here is not the word " and " as it is used in this sub-clause (2) but it should be the conjunction " or " because there are three alternatives which are contemplated in this sub-clause. The first alternative is with regard to the non-expiry of one year period commencing from the date of the commencement of this Act. The second alternative is with regard to the deposited instalment amount and the third alternative is with regard to the period during which the gramdan villager is expected to deposit the instalment amount. Now, these three alternative conditions seek to prevent the creditor from rushing to a court. I suppose, it is not the intention of the Government that there should be all these conditions to prevent or bar a particular creditor from rushing to a court. Any one of the three alternative conditions is quite sufficient. That is what Government's intention is, I think. In that case, in order to bring out the alternative ideas in a vivid sense, the proper conjunction to be used would be—in the interest of good grammar also—the word 'or' and not the word 'and'. Though it is a verbal amendment, I hope the Government will not find it difficult to accept this.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் இந்தக் கோர்ட் செலவு, கிராமத்தானுடைய செலவைக்கூடக் கட்டவேண்டும் என்கிறார். இது அசாத்தியமாக இருக்கிறதென்று சொன்னார்கள். மாரடோரியம் ஒரு ஆண்டுக்கு கேஸ்கூட கோர்ட்டில் தொடுக்கக் கூடாது என்று சட்டத்தில் இருக்கிறது. அப்படி இருந்தும் வழக்கு தொடர்ந்தால் ஸ்டாம்ப் ட்யூட்டிகூட எல்லாம் போய்விடும். அதற்கு இடம் கொடுக்காமல் தவறிப்போய் வழக்குத் தொடர்ந்தால் அந்த செலவை கிராமத்தார் மீது சுமத்தக் கூடாது என்பதற்காக இப்படி செய்திருக்கிறோம். கேஸ் டிஸ்மிஸ் செய்யப்படுவதைவிட இது நல்லது என்று சொல்வேன். ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் திருத்தப்படி டெபாஸிடெட் என்று இருந்தால் போதும் என்கிறார். சிக்கல் ஏற்படக்கூடாது என்றுதான் இதையும் போட்டிருக்கிறோம். அப்படிச் சேர்த்திருப்பதனாலே தவறு இல்லை. இல்லாத காரணமாக, பின்னால் சங்கடம் ஏற்படக்கூடாது. மேலும் கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்வேன். போதிய நோட்டீஸ் கொடுத்துவிட்டுச் செய்வது நல்லது. மாரடோரியம் மசோதாதான் இது. முன்பு நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு இதே போன்ற மசோதாதான் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவுகளைப் பார்த்து, அதை ஒட்டியே இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. நமக்குப் புதிதாக இப்படி இருந்தால் நல்லது, அப்படி இருந்தால் நல்லது என்று யோசனை தோன்றலாம். முன்பு அமுலில் இருப்பதைப் பார்த்து அப்படியே செய்வதில் சங்கடம் இல்லை. புதிதாக வேறு எதாவது போட்டால் வேறு எதாவது வியாக்கியானம் செய்வதற்கு இடம் ஏற்படும். ஆகவே முன்பு எப்படி இருந்ததோ அப்படியே போடுவது நல்லது என்று இந்தச் சமயத்தில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அந்த வகையில்தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் பிரேரித்திருக்கிற திருத்தங்கள் எவற்றையும் நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லையென்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

30th March 1959]

Amendments of Sri Sankaran and Sri Jagannathan were put and lost.

The clause was put and carried.

Clause 4.

MR. SPEAKER : The motion is :

That clause 4 do stand part of the Bill.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'In sub-clause (1), *after* the words " to the date." *add* the words " excluding the period specified in section 3 ".'

'In sub-clause 3, *after* the words " the suit " *add* the words " without court cost ".'

SRI A. GOVINDASAMY : I second the amendments, Sir.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

In sub-clause 3, *after* the words " the suit " *add* the words " without court cost ".'

SRI A. GOVINDASAMY : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAM : Sir, I move—

'In sub-clause (5), *for* the words " under such terms and conditions ", substitute the words " with such terms and conditions ".'

SRI A. GOVINDASAMY : I second the amendment, Sir.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'In sub-clause (6), *after* the words " pass a decree ", *add* the words " without court cost ".'

SRI A. GOVINDASAMY : I second the amendment, Sir.

SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தங்களைக் குறித்து நான் முன்பே சொல்லிவிட்டேன். கிராமங்களில் 50 ரூபாய் கொடுத்துவிட்டு, 100 ரூபாய், 150 ரூபாய் என்று பாண்டு எழுதி வாங்குகிருர்கள் என்பதைப்பற்றி அம்மையாரும் சொன்ஞர்கள். டிகிரி எடுக்கிற வழக்குகளில் கோர்ட் செலவையாவது சர்க்கார் தள்ளித்தர முன்வரவேண்டும் என்கிற காரணத்தையொட்டி நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI M. JAGANNATHAN : Sir, my amendment says that in sub-clause (5), *for* the words ' under such terms and conditions ', *substitute* the words ' with such terms and conditions '. Sir, this sub-clause seeks to confer upon the court greater powers, to pass such decrees as to contain more favourable conditions and terms for the debtor, than those terms and conditions which are already provided for in this Bill. My amendment is again a verbal one, namely, instead of ' under such conditions and terms ' it would be better to say ' with such conditions and terms '. It is in the

[Sri M. Jagannathan]

interest of good English and further it is wrong usage to say ' to pass orders under such conditions, etc.' I do not know how the Government have adopted that word here. This is patently defective and therefore Government should acept this amendment.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் திரு. அண்ணாமலை பிரேரித்த திருத்தத்தைப்பற்றியும் நான் முன்பே விளக்கினேன். வட்டியைத் தள்ளிவிடுவது, டிகிரியைத் தள்ளிவிடுவது என்பது இந்த மசோதாவின் நோக்கம் அல்ல. தற்கால நிவாரணமாக அவர்களுக்கு ஒரு காலவரம்பு அளிப்பதுதான் நோக்கம். ஆகவேதான் அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. கனம் ஜகந்நாதன் சொன்ன விஷயத்தை நாங்களும் பரிசீலனை செய்யாமல் இல்லை. " அண்டர் ஸச் டேர்ம்ஸ் " என்று போடுவதா, இதுபற்றி நன்றாகப் பரிசீலனை செய்தோம். பின்புதான் முன்பு உள்ள சட்டத்தில் எப்படிப் போட்டிருந்ததோ அதேமாதிரியாகப் போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதனால்தான் இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்க வேண்டியிருக்கிறது.

The amendments of Sri S. M. Annamalai and Sri M. Jagannathan were put and lost.

The clause was put and carried.

Clause 5.

MR. SPEAKER : Now it is 1-30 and therefore I suggest that the House do sit till we finish this Bill.

This was agreed to by the House.

SRI V. SANKARAN : Sir, I move—

In sub-clause (2), *after* the word " creditor ", *add* the words " and hearing both the parties ".'

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN : Sir, in view of the fact that the Government are not in a mood to accept any of our amendments, I do not move my amendment.

SRI V. SANKARAN : சாதாரணமாக கிராமதானத்திற்கு—டெபாஸிட் தொகை போதுமானதாக இல்லாவிட்டால் மேலும் கட்டுவதற்கு அவகாசம் வேண்டும் என்று மனுப்போட்டால், அதற்கு கோர்ட்டால் நோட்டீஸ் கொடுத்து அவகாசத்தை அதிகப்படுத்தலாம் என்று இருக்கிறது. பலயிடங்களில் நோட்டீஸ் அனுப்பியாகிவிட்டது என்று தவறாகவே ரெக்கார்டு செய்துவிடுகிறார்கள். அதனால் " ஹியரிங் போத் தி பார்டீஸ் " என்பதைச் சேர்த்துவிட்டால் சரியான முறையில் இது இருக்கும் என்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை சர்க்கார் ஒத்துக்கொள்ளாவிட்டால் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

1-30 p.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : Hearing of both the parties அவசியமில்லை. ஆகவே இத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

MR. SPEAKER : I shall now put the amendment moved by the hon. Member Sri Sankaran to vote.

30th March 1959]

SRI A. GOVINDASAMY : Sir, you may ask whether the hon. Member is withdrawing his amendment or pressing it.

MR. SPEAKER : That is not my job. I am not supposed to ask him whether he is withdrawing his amendment or not. It is for him to get up and say whether he is withdrawing or pressing his amendment. The question is—

'In sub-clause (2), *after* the word "creditor", *add* the words "and hearing both the parties".'

The amendment was put and declared lost.

SRI K. ANBAZHAGAN : I demand a poll, Sir.

(The Division Bell was rung for two minutes.)

SRI V. K. KOTHANDARAMAN : Sir, on a point of order Sir, இந்த சந்தர்ப்பத்தில் கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள் சபையை விட்டு வெளியே சென்றுவிட்டார். இது சரியா ?

MR. SPEAKER : Correctly speaking, the hon. Member Sri Sankaran must be here now. When the hon. Member has moved the amendment and at the time it was put to vote, if the hon. Member is not present in the House, it means discourtesy to the House. I did not want to make mention of this even though I have noticed it. But, since the hon. Member Sri Kothandaraman has brought this to my notice, I have to rule that since the hon. Member Sri Sankaran is not in his seat, the amendment moved by him is deemed to have been withdrawn. Anyway, I want to point out that it is wrong on his part to have left the House just now.

The clause was put and carried.

Clauses 6, 7, 8 and 9 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I move—

'That the Madras Gramdan Villages (Repayment of Debts) Bill, 1959 (L.C. Bill No. 3 of 1959), as passed by the Legislative Council, be passed'.

MR. SPEAKER : The question is—

'That the Madras Gramdan Villages (Repayment of Debts) Bill, 1959 (L.C. Bill No. 3 of 1959) as passed by the Legislative Council, be passed'.

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER : I adjourn the House *sine die.*

The House then adjourned *sine die.*

XI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

114. *Amendment to Public Department Notification No. A. 415 of 1958, dated the 11th January 1958, regarding the introduction of Tamil in Government offices which have not been supplied with typewriters, etc., issued in G.O. No. 368, Public (General M), dated 10th February 1959. [Laid on the table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956.]*

B.—Reports, Notifications and other papers.

55 *Fifth Report of the Committee on Estimates on Animal Husbandry.*

56. *Annual Report of the Madras Public Service Commission, 1957–58. [Laid on the table of the House under Article* 323 (2) *of the Constitution of India.]*

57. *Fourth Report of the Committee on Government Assurances.*

58. *Report of the Committee on Estimates on Co-operation.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

APPENDIX I.

[Vide answer to starred question No. 1062 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 30th March 1959, page 835 supra.]

Rules of regulation of the Papanasam Reservoir across Thambarabarani river.

1. In the months of April and May all the natural flow in the river at the site of the dam less the quantity required by the Electricity Department for maintaining the power draft may be impounded subject to the obligations to the Papanasam mills of 0·6 cusecs and maintaining 3·5 cusecs for Papanasam falls both of which are limited to the natural flow in the river.

2. (i) In the period from June to March (following) impounding may be made by Electricity Department when the natural flow at the diversion weir exceeds the requirements of the existing irrigation as noted below :—

For the period (June first half)—1,650 cusecs.

For the period (June 16th to 31st March)—2,300 cusecs.

